விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 02 ஞாயிற்றுக்கிழமை (16.05.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 148

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து
RAMCO

## உலகில் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டியவர்கள் நாமே

### இராணுவத் தளபதி ஜெகத் பெருமிதம்

(கொழும்பு)

உலகில் எந்தவொரு நாடும் பயங்கரவாதத்தைத் தோற்கடித்ததில்லை. நாம் அதனை செய்திருக்கின்றோம். பயங்கரவாதத்தைத் தோற்கடித்தமை தொடர்பில் எமது அனுபவங்களை வேறு நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளவும் நாம் தயாராகவிருக்கின்றோம் என இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

யுத்தத்தால் உடல் உறுப்புக்களையிழந்த இராணுவ வீரர்களுக்குச் சகல வசதிகளுடன் கூடிய வீடுகள் (20 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்ட இளைஞர், யுவதிகள் 400 பேருக்கு பொலிஸ் நியமனம்

### நாளை மறுதினம் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 400 தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு பொலிஸ் நியமனம் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறுமென வட மாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த வருட நடுப் பகுதியில் யாழ்.மாவட்டத்தில் நடத்தப்பட்ட தமிழ் இளைஞர், யுவதிகளுக்குப் (20 ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டில் குழப்பம் நீடிப்பு

# தடுக்கப் படையினர் குவிப்பு



### யாழ்.கட்டளைத் தளபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலமாக நடைபெற்று வரும் சட்டவிரோத நடவடிக்கைகள் காரணமாக படையினரை அதிகரித்துப் பாதுகாப்புச் செயற்பாடுகளைத் துரிதப்படுத்தியுள்ளதாக யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார். (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த ஈரான் பயணம்

(கொழும்பு)

ஜி-15 மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றிரவு ஈரான் பயணமானார் என வெளிவிவகார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

ஜி-15 மாநாடு ஜனாதிபதியிடம் உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ள நிலையில் நேற்றிரவு ஜனாதிபதி ஈரான் பயணமானதாக அமைச்சின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (19 ஆம் பக்கம் பார்க்க)

## போர்க் குற்ற விசாரணை வேண்டும்

(டொரன்டோ)

கடந்த வருடம் நடைபெற்ற விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் இலங்கை அரசு மேற்கொண்ட போர்க் குற்றம் தொடர்பில் விசாரணை செய்யப்பட வேண்டும் எனக் கனடா நாடாளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளும் வலியுறுத்தியுள்ளன.

இது தொடர்பில் ஆராய்வதற்கு விசேட குழுவொன்றை நியமிக்குமாறு கனடாவுக்குச் சென்றுள்ள ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் கனடா அரசு வலியுறுத்த வேண்டும் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ந-5)

## அரசியல்சாசனத் திருத்தத்திற்கு முன் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம்

### அரசாங்கம் தீவிர முயற்சியில்

(கொழும்பு)

அரசியல் சாசனத்தில் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு முன்னர் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரைவில் ஆளும் கட்சியில் இணைந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசியல் சாசன திருத்த யோசனைத் திட்டங்களின் போது அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பது குறித்து இன்னமும் தமது கட்சி தீர்மானிக்கவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை (19 ஆம் பக்கம் பார்க்க)

## ஆளுநர், யாழ்.அரச அதிபருடன் ஐ.எம்.எப். பிரதிநிதிகள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மீள்குடியேற்ற, புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுக்கான நிதித் தேவைகள் குறித்து முன்மொழிவுகளை யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்த சர்வதேச நாணய நிதியக் குழுவினரிடம் (ஐ.எம்.எவ்) வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியும் யாழ்.அரச அதிபர் க.கணேஷும் இணைந்து கையளித்துள்ளனர். (20 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி இறுதி யுத்தத்தில் இரசாயன ஆயுதப்பாவனை!

வன்னிப் போரின் இறுதி நாள்களில் படையினர் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தியமை தொடர்பான தகவல்களை தெரிந்து வைத்திருந்த காரணத்தினாலேயே லங்கா ஈ நியூசின் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட படைத்துறையின் புலனாய்வுப் பிரிவினரால் கடத்தப்பட்டதாக லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்தின் ஆசிரியர் சந்த றுவான் சேனதீர வெளியிட்டுள்ள செய்தி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (19 ஆம் பக்கம் பார்க்க)



யாரேனும் சங்கானையில் நகை வாங்க வந்தால் பாரெங்கும் அவர்கள் நாவில் பேசப்படுவது

ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்

இன்று ஞாயிற்றுக்கிழமை (16.05.2010) அன்று ராசியான அக்ஷயதிருதியை முன்னிட்டு விஷேட கழிவுகளுடன் 22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம்

ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்

இல.10, பஸ் நிலையம், சங்கானை. தொ.பே: 021 3212399

மு.குறிப்பு: தங்க நகை வாங்குபவர்களுக்கு அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்படும். தங்க நகை ஓடர் தருபவர்களுக்கு தங்க நாணயம் பரிசல்களாக வழங்கப்படும்.



(C-259)

## சேவை முகவர்

கந்தர்மடம், மணல்தறை லேன், குமாரசாமி வீதி, கோண்டாவில் உரும்பிராயில் 9 பரப்பு, பருத்தித் துறை வீதி 1ஆம் ஒழுங்கை, கொக்குவில் மேற்கு நந்தாவில் அம்மன் கோயில் வீதி ஆகிய இடங்களில் காணிகள் வீடு விற்பனைக்கு உண்டு. விற்கவிரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு: சுந்தரம்

222 9177, 071 462 4830

(514)


## கோஷ்டி மோதல்களை தடுக்க படையினர் நடவடிக்கை

அல்வாய் மற்றும் நாவலடிப் பகுதியில் கடந்த 4 நாட்களாக இடம் பெற்று வருகின்ற குழு சண்டைகளை அடுத்து அப்பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர்.

தனிப்பட்ட இரு குழுக்கள் இடையே 4ஆம் நாளாக தொடரும் நேற்றைய மோதல்களில்இருவர்டுகாயமடைந்து யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-9,2)


## மரண அறிவித்தல்

## வீரகத்தி சிவப்பிரகாசம்

(உதவித் தொழில்நுட்பவியலாளர், படவரைஞர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்)



வடமராட்சி கரவெட்டி, கிழவிதோட்டத்தை பிறப்பிடமாகவும், தென்மராட்சி அல்லாரையை வதிவிடமாகவும், தற்பொழுது கந்தர்மடம், அன்னசத்திரலேனை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திரு வீரகத்தி சிவப்பிரகாசம் (உதவித் தொழில் நுட்பவியலாளர், படவரைஞர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்) அவர்கள் (15.05.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கரவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வீரகத்தி தெய்வானை தம்பதியின் புதல்வனும், அல்லாரையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் செல்வநாயகி தம்பதியரின் அருமை மருமகனும், ஜெகதாம்பிகையின் (பிரதம முகாமைத்துவ உதவியாளர், வீதி அபிவிருத்தி திணைக்களம், யாழ்ப்பாணம்), அன்புக் கணவரும், அச்சுதன் (பொறியியலாளர், லண்டன்), மயூரன் (பொறியியற்பீட இறுதி வருட மாணவன் மொறட்டுவ பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் (A.G.A. மன்னார்), குணசிங்கம் மற்றும் ஜெயலட்சுமியின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (16.05.2010) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2 மணிக்கு கந்தர்மடத்திலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அன்னசத்திர லேன்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

(1515)


## யாழ்.பிராந்திய திறந்த பல்கலைக்கழகத்தில்

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் 2010 கல்வியாண்டுக்கான சட்டவியல் கற்கை நெறியின் தெரிவுப் பரீட்சை முடிவுகள் மற்றும் கணனி விஞ்ஞான இளமாணிப்பட்ட கற்கை நெறிக்கான தெரிவுப்பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

யாழ். - பிராந்திய நிலைய அறிவித்தல் பலகையில் முடிவுகளை பார்வையிடலாம் என இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

✠ ✠ ✠

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் 2010 / 2011 கல்வியாண்டுக்கான ஆய்வுகூட தொழில் நுட்பக் கற்கைநெறிக்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிபுத் திகதி 31.05.2010.

✠ ✠ ✠

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் 2010 / 2011ஆம் கல்வியாண்டுக்கான எந்திரவியல் தொழில்நுட்ப கற்கைநெறிக்கான மீள் பதிவுகள் எதிர்வரும் 18.05.2010, 19.05.2010 திகதிகளில் யாழ்.- பிராந்திய நிலையத்தில் நடைபெறும். (ந)

## தடகளப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

கரவெட்டி பிரதேசசெயலக இளைஞர் கழகங்களுக்கிடையிலான தடகளப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இமையாணன் மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் இளைஞர்கழக அலுவலகர் ஐ.தபேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண இளைஞர் மன்ற செயலாளர் டி.சிவதட்சணாமூர்த்தி கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக தலைமைப் பீட கிராம அலுவலர் வி.கே.சண்முகநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் கரவெட்டி நவசக்தி அணியை எதிர்த்து இமையாணன் மத்தி விளையாட்டுக்கழக அணி மோத வுள்ளது.

(4-24)

## வலி. வடக்கு கலாசாரப் பேரவையின் கலைப்பூமி நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவை நடத்தும் கலைப்பூமி நூல் வெளியீட்டுவிழா இன்று காலை 10.00 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுகின்றது.

வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் எஸ்.முரளிதரன் தலைமையில்நடைபெறும் இவ் விழாவில் வலிகாமம் வலய கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கின்றார்.

கௌரவ விருந்தினர்களாக வைத்திய கலாநிதி திருமதி சகிதேவி தயாபரன், வைத்தியகலாநிதி க.இராதேயன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன், யாழ்.மாவட்ட கலாசார உத்தியோகத்தர்திருமதிசுகுணாளினிவிஜயரத்தினம் ஆகியோரும்கலந்துகொள்கின்றனர்.

இந்நூலின்ஆய்வுரைகளைதெல்லிப்பழை பிரதேச செயலக பிரதம முகாமைத்துவ உதவியாளர் சிதம்பர திருச்செந்தி நாதன், யாழ். திருநெல்வேலி இந்து தமிழ்கலவன் பாடசாலை அதிபர் ந.விஜயசுந்தரம், கலாசார உத்தியோகத்தர் திருமதி ரஜனி நரேந்திரா ஆகியோர் நிகழ்த்துகின்றனர். (5)


## தேவை

ஸ்ரூடியோவிற்கு படப்பிடிப்பில் அனுபவம் உள்ளவர்களும் பழக ஆர்வம் உள்ளவர்களும் தேவை. ஆண்கள்: முச்சக்கர வண்டி ஓட்டக் கூடியவர்.

இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
T.P.No: 078 9147363
077 1331794

(1509)



## Suntel விற்பனைக்குண்டு

Land Line Telephone விற்பனைக்குண்டு, Internet, Fax என்பன பாவிக்கலாம்.

Suntel No:
021-4591xxx

தொடர்புக்கு:
0773664598

(கு-257)





## மைசூர் சாமுண்டீஸ்வரி ஜோதிட நிலையம்

இந்தியாவில் மந்திராலயத்திலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை ஜோதிட வல்லுனர்

லக்ஸ்மி சாஸ்திரி
077 0712537

கைரேகை மூலம் துல்லியமாக நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்

கை ரேகை, நாம நட்சத்திரம், ஜாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப்பிரச்சினை, விஷேட பயணம், எதிரிகள் கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல் இவைகள் அனைத்தும் 11 நாட்களுக்குள் செய்து தரப்படும்.

இவற்றினைத் தெரிந்து கொள்ள ஒருமுறை எங்களைச் சந்தித்து பயன் பெறுங்கள்

121 A, கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம்.
(லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகாமையில்)

கைரேகை பார்க்கும் நேரம்:
காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பார்க்கப்படும்.

(1510)



## மரண அறிவித்தல்

## குட்டித்தம்பி பாலசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற பல்கலைக்கழக ஊழியர்)



மலேசியாவை பிறப்பிடமாகவும், பிறவுண் வீதி, நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட குட்டித் தம்பி பாலசுப்பிரமணியம் 14.05.2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குட்டித்தம்பி, அம்மாக்கண்ணு தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மாணிக்கவாசகர், கண்மணி தம்பதியினரின் அன்பு மருமகனும், விஜயராணியின் அன்புக் கணவரும், இராகுலனின் (ஆய்வுகூட உதவியாளர்-யாழ். பல்கலைக்கழகம்), பாசமிகு தந்தையும், கனகசபை (மலேசியா), இராஜமணி, விசுவலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும், தனபாலசிங்கம், மாலினி, காலஞ்சென்றவர்களான அழகரெட்ணம், மீனலோசனா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16.05.2010 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

44,பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(1503)



## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்

மீண்டும் யாழில்

17.05.2010 முதல் 24.05.2010 வரை மட்டுமே இருப்பார்.
பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.
பதிவுக் கட்டணம் ரூபா: 250/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம்.நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு.ஆஸ்துமா ,மாதவிடாய்க் கோளாறுகள் ,வெள்ளை போடுதல், குழந்தைப் பேறின்மை ,வாதநோய், தலையிடி ,பல் முரசு கரைதல் போன்ற நோய்க ளுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு ,கல்வியில் நாட்டம் குன்றிப் பயம் ,நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

Sexuel Disorders (ஆண்மை சக்தி குறைவு)(பிறவியில் ஆண்மை யற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

மானிப்பாய் வீதியிலிருந்து 'செல்வ மாளிகை'
(பழைய வலம்புரி காரியாலயம்)
இல.15 ,வெள்ளாந்தெரு ,யாழ்ப்பாணம் .T.P.: 0719315664 , 0777569205

(கு-260)



DHL WORLDWIDE EXPRESS

யாழ் குடாநாட்டிலிருந்து உலக நாடுகளுக்கு DHL சேவையினைப் பெற்றுக்கொள்ள!

உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை

குறிப்பிட்ட சில நாட்களுக்கு விசேட விலைக்கழிவு

மற்றும் DVD பிரதிகள் CD க்கள்

குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.

TCN EXPRESS
28, Nelsan Place, Colombo -06

திருமுருகன் கொம் நெற்

259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P- 222735 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் முன்பாக)
46, ஆடியபாதம்,வீதி, திருநெல்வேலி. (ப.நோ.சங்கம் முன்பாக)
பிரதான வீதி, நெல்லியடி.(ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையில்)

லண்டன், சுவிஸ், பிரான்ஸ்,
1Kg 400/= ரூபா வீதமும்
1Kg பொதிகளுக்கு
500/= ரூபா வரையான விசேட சலுகை

குடாநாட்டில் முகவர்கள் தேவை

# வெளிவாரிப் பட்டதாரிகளுக்கு பட்டச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்பை பூர்த்தி செய்த கலைமாணி, வணிகமாணி , இசைமாணி மற்றும் நடன மாணி பட்டதாரிகளுக்கான பட்டச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 30ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழப்பாணப் பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளதாக பதிவாளர் அறி வித்துள்ளார்.

மேற்படி பட்டக்கற்கை நெறிகளில் 14.05.2007 ஆம் திகதிக்கு பின்பும் 02.06. 2009 ஆம் திகதிக்கு முன்பும் சித்தியடைந்த மாணவர்களுக்கே பட்டங்கள் வழங்கப்பட வுள்ளது.

பட்டச்சான்றிதழ் பெறத் தகுதியுடையவர் கள் தங்கள் வேண்டுகோள்களை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமா றும், வேண்டுகோள் படிவங்களை நாளை திங்கட்கிழமை தொடக்கம் பெற்றுக்கொள்ள லாம் என்றும் பதிவாளர் அறிவித்துள்ளார்.(ச)

## கூரை மீது ஏறிய இளைஞன் விழுந்து படுகாயம்

வீட்டுக்கூரையின் மீது ஏறிய இளைஞன் தவறி நிலத்தில் விழுந்ததில் படுகாயமடைந் தது யாழ். போதனாவைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வியாழன்று மதியம் விளான் சங் கானையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அள வெட்டியைச்சேர்ந்த எஸ்.துவாரகன் ( வயது 27) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார். இவர் யாழ். போதனாவைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார். (ச-30)

## வாள்வெட்டில் குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

தகராறு காரணமாக வாள் வெட்டுக்கிலக் காகிய குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அரியாலையில் கடந்த வியாழன் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தின் போது அதே இடத்தைச் சேர்ந்த ந.கனகராஜ் (வயது 39) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

குறித்த நபர் மேசன் வேலை செய்து விட்டு வீடு திரும்பிய வேளை வாசலில் வைத்து எட்டுப்போர் கொண்ட குழுக்களால் தாக்கப்பட்டு தலை ,கால் ஆகிய இடங்களில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார். (ச-30)

## சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப்பரீட்சை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலகம் ஊடாக சாரதி அனுமதி பத்திரம் பெற விண்ணப்பித்த வர்களுக்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் மாவட்டச் செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே பரீட்சார்த்திகள் விண்ணப்பத்தின் போது மாவட்டச் செயலகத்தால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களுடன் காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திற்கு சமூக மளிக்குமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூ. கேதீஸ்வரன் அறிவித் துள்ளார். (ச)

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை கிழக்கு இலுப்பைத் தாழ்வு அருள்மிகு ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை திங்கட் கிழமை காலை 10 மணிக்கு கொடியேற் றத்துடன் ஆரம்பமாகி 27ஆம் திகதி வியா ழக்கிழமை வைகாசி விசாகத்தன்று இனிதே நிறைவுறும்.

திருவிழாக்காலங்களில் தினந்தோறும் மாலை 6.30 மணிக்கு நல்லைக் குருமணி யின் பிரதம சிஷ்யன் கானகதாவாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மாவினால் கந்தன் கருணை பற்றிய தெய்வீகத் தொடர் இசைப்பேருரை நிகழ்த்தப்படும். (2)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(வட்டுக்கோட்டை)

யாழ். மாவட்ட கொக்கி சங்கத்தின் வரு டாந்த பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 5 மணிக்கு யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி யில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மேற்படி சங்கத்தில் அங்கத் துவம் வகிக்கும் அங்கத்தவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் இ.குகன்கேட்டுக் கொண்டுள்ளார். (6-27)

## இராசி பலன்

16-05-2010
(வைகாசி 2, ஞாயிற்றுக்கிழமை)
திருதியை பின்னிரவு 3.52 மணிவரை
மிருகசீரிடம் பின்னிரவு 1.39 மணிவரை
இராகுகாலம் 4.23-5.53 மணிவரை
சுபநேரம் 8.53-10.23 மணிவரை
சுழிபுரம் பறாளாய் சிவசுப்பிரமணியர் கொடி
கோண்டாவில் சிவகாமி அம்மன் கொடி
அக்ஷய திருதியை

| | |
|---|---|
| மேடம் | கூட்டு முயற்சி, சகோதரர் வழி நன்மை, பிரயாண சுகம், வாக்கு மேன்மை. |
| இடபம் | பொருள் விரயம், கற்பனை மிகுதி, விவாதம், கடின முயற்சி. |
| மிதுனம் | சயன சுகம், போசன நன்மை, தெய்வ சிந்தை, நல்ல முயற்சி. |
| கடகம் | உணர்ச்சி வசப்படல், தொழில் சிந்தை, சுபகாரியச் செலவு, பிதா சிந்தை. |
| சிங்கம் | எடுத்த காரியம், கை கூடும், கலந் துரையாடல், பெருமையடைதல், பொருள் சேர்க்கை. |
| கன்னி | தன்னம்பிக்கை, அதிகாரம், தெய்வ சிந்தை, முயற்சி கை கூடும். |
| துலாம் | புதிய திட்டமிடல், மனச்சஞ்சலம், திடீர் பயணம், தனவிரயம். |
| விருச்சிகம் | பிறருக்கு உதவுதல், உடல் நலக் குறைவு, போசன சுகம், வீண்பகை |
| தனுசு | சுப காரியம், செல்வாக்கு, உற வினர் வருகை, ஆரோக்கிய நிலை. |
| மகரம் | மனமகிழ்ச்சி, போசன சுகம், முயற்சி கை கூடும், தேகநலன் |
| கும்பம் | புத்திரரால் கவலை, அதிக செலவு, காரிய தாமதம், மனச் சோர்வு. |
| மீனம் | தொழிலில் ஆர்வம், தாய்வழி உறவு, நல்லமுயற்சி, பயணம். |

வளவன்

## வாரம் ஒரு தகவல்

### போதையும் பாதையும்

"அமெரிக்காவில் சிலந்திப் பூச்சிக்கெல்லாம் போதை மருந்து கொடுக்கிறாங்களாம் சேர்"

"எதற்கு?"

"சும்மா ஒரு சோதனைக்காகத் தான்"

"என்ன சோதனை?"

"எந்தெந்த போதைமருந்து எந்தெந்த அளவுக்குப் போதையை உண்டுபண்ணுது என்று தெரிந்து கொள்வதற் கான சோதனை"

"அதை எப்படித் தெரிந்து கொள்ளமுடியும்?"

"சிலந்திப் பூச்சிக்கு போதை மருந்தைக் கொடுக்கிறது. அதன் பின் அதை வலை பின்னவிடுவது. அது வலை பின் னும் வேகத்தைப் பொறுத்து மருந்தின் தன்மையை தெரிந்து கொள்வது"

"அப்படியா "

"ஆமாம் ! மாரிஜுவானா என்ற மருந்தை ஏற்றிய சிலந் திப் பூச்சி தள்ளாட ஆரம்பித்தது. ஆரம்பத்தில் வேகமாக வலை பின்னினால் கூட கடைசியில் சோர்ந்து போய் விட் டது. பென்சிடரின் மருந்து கொஞ்சம் வேகத்தை அதிகமாக் கியது.இருந்தாலும் வலை ஒழுங்காக இல்லை. அபின் மருந்தை ஏற்றிய சிலந்தி நினைவே இல்லாமல் கன்னா பின்னாவென்று வலை பின்ன ஆரம்பித்தது. குளோரல் ஹைட்ரேட் என்ற மருந்து தான் அதிகமாக போதை கொடுத் ததாம்.ஏற்றிய மறுகணமே எங்கேயோ சுத்த ஆரம்பித்த தாம்."

"அது சரி' இது போன்ற சோதனைக்கு சிலந்தியிடம் ஏன் போக வேண்டும்? என்னிடம் கொடுத்திருந்தால் நானே சாப் பிட்டுப் பார்த்து சரியாகச் சொல்லியிருப்பேன்."

"அது எப்படி?"

"நான் எவ்வளவு சாப்பிட்டாலும் ரொம்ப ஸ்டெடியா இருப் பேன். நேற்றுக் கூட ஒரு பார்ட்டியில் நான் நல்ல போதை யில் இருக்கும் போது ஒருத்தர் என்னை "டெஸ்ட் "பண்ணி னார்.

"அப்படியா?"

"ஆமாம்! அங்கே அந்த ஹோலில் மொத்தம் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று சொல்லமுடியுமா என்று கேட் டார். நான் உடனே சுலபமாக கணக்குப் போட்டு சொல்லிப் போட்டேனே!"

"எப்படி?"

"தரையில் படுத்திருந்து மொத்த கால்களையும் எண்ணி னேன். அதை அப்படியே இரண்டால் வகுத்தேன். எத் தனை பேரென்று தெரிந்து போச்சு!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா | யாழ்ப்பாணம் |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 90 | 100 | 70 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 80 | 90 | 85 |
| தக்காளி | 90 | 100 | 85 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 80 | 80 | 80 |
| கரட் | 100 | 120 | 120 |
| பூசணி | 40 | 50 | 50 |
| புடோல் | 50 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 65 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 70 |
| பாகற்காய் | 80 | 120 | 85 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 | 50 |
| பயிற்றங்காய் | 70 | 80 | 70 |
| லீக்ஸ் | 80 | 90 | 90 |
| பீற்றூட் | 50 | 60 | 80 |
| கறிமிளகாய் | 170 | 180 | 85 |
| முருங்கைக்காய் | 180 | 200 | 200 |
| போஞ்சி | 180 | 200 | 220 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 90 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

# இலங்கையர் 2 ஆயிரத்து 800 பேருக்கு ஹஜ் கடமை நிறைவேற்ற கோட்டா

## சவூதி அரேபிய அமைச்சர் உறுதி

ஹஜ் முன்னேற்பாடுகளை கவனிப்ப தற்காக சவூதி அரேபியாவுக்கு விஜயம் செய்த அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி தலைமையிலான குழு சவூதி அரேபிய ஹஜ் விவகார அமைச்சர் பவூட் பின் அப்துல் சலாம் அல் பாஸியை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளது.

இதன்போது இலங்கையிலிருந்து இரண்டாயிரத்து 800 பேருக்கு ஹஜ் கடமையை நிறைவேற்ற ஹஜ் கோட்டா வழங்குவதாக சவூதி அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

ஆனால் இலங்கையில் இருந்து 8 ஆயிரம் பேரை ஹஜ் கடமையை நிறைவேற்ற அனுமதிக்குமாறு அமைச்சர் பௌஸி கோரியுள்ளார். இது குறித்து உயர் மட்டத்துடன் கலந்துரையாடி அறிவிப்பதாக சவுதி அமைச்சர் உறுதியளித்துள்ளார். (2-6)

## பெற்றோலியக்கூட்டுத்தாபன தலைவராக ஹரி ஜயவர்த்தனா

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக பிரபல வர்த்தகர் ஹரி ஜயவர்த்தனா நியமிக்கப்பட்டுள்ளார் என்று பெற்றோலிய கைத்தொழில் அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கையின் பிரபல வர்த்தகரான ஹரி ஜயவர்த்தனா ஸ்ரீலங்கா விமான சேவை மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் முன்னாள் தலைவராவார். (2-6)

# மதகின் மேல் பாரிய துவாரம்; பொதுமக்கள் அசௌகரியம்

(வட்டுக்கோட்டை)

சங்கரத்தையில் இருந்து சங்கானைக்குத் செல்லும் வீதியின் வயல் பகுதியில் அமைந்துள்ள மதகின் மேல் பாரிய துவரம் ஏற்பட்டுள்ளது. இதனால் மேற்படி வீதியால் பயணிக்கின்ற பிரயாணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதை காணக்கூடியதாக உள்ளது.

குறிப்பாக இரவு வேளைகளில் வீதியில் பயணிப்போர் அக்குழியினுள் வீழ்ந்து காயங்களுக்குட்படுவதாக தெரியவருகின்றது.

எனவே பொதுமக்களுக்கு பாதிப்பாக உள்ள மேற்படி மதகின் மேல் ஏற்பட்ட துவாரத்தீனை சீர்செய்து பாதுகாப்பான பிரயாணத்திற்கு உதவுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பொதுமக்கள் வேண்டிக்கொள்கின்றனர். (6-27)

# அடிக்கடி இருப்பிடத்தை மாற்றும் ரஞ்சிதா பிடிக்க முடியாமல் பொலிஸார் திணறல்



நித்தியானந்தா சாமியாரை கற்பழிப்பு, மோசடி உள்ளிட்ட பல்வேறு வழக்குகளின் கீழ் கர்நாடக சி.ஐ.டி. பொலிஸார் கைது செய்தனர். இமாசல பிரதேசத் தில் பதுங்கி இருந்த அவரை கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி பிடித்தனர். நித்யானந்தா வழக்கில் ரஞ்சிதா முக்கிய சாட்சியாக இருப்பதால் அவரை பிடித்து வாக்கு மூலம் பெற பொலிஸார் முயல்கின்றனர். சென்னை தியாகராயநகரில் உள்ள அவரது வீட்டுக்கு தேடி வந்தார்கள் .அங்கு அவர் இருக்கவில்லை. பொலிசில் ஆஜராகி சாட்சியம் அளிக்குமாறு சம்மன் அனுப்பப்பட்டது. டெல்லியில் உள்ள அவரது வக்கீலுக்கும் ரஞ்சிதாவை ஆஜர் படுத்துமாறு கூறி சம்மன் அனுப்பப்பட்டது.

ஆனால் இதுவரை அவரைப் பற்றி துப்பு கிடைக்கவில்லை அனைத்து மாநிலங்களிலும் ரஞ்சிதாவுக்கு நெருக்கமானவர்கள் வீடுகளில் மாறு வேட பொலிஸார் நிறுத்தப்பட்டு உள்ளனர். ஒரு மாதத்துக்கும் மேலாக பொலிஸாரிடம் சிக்காமல் தண்ணி காட்டி வருகிறார். நாடெங்கும் நித்யானந்தாவுக்கு சீடர்கள் உள்ளனர். அவர்கள் உதவியால் தினமும் ரஞ்சிதா இருப்பிடத்தை மாற்றுவதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர். ரஞ்சிதாவை தங்கள் வலைக்குள் சிக்க வைக்க அடுத்த கட்டமாக என்ன செய்யலாம் என்று சட்ட நிபுணர்களுடன் பொலிஸார் ஆலோசனை நடத்திவருகின்றனர். (2-6)

விசேட சலுகைகளுடன்..!

BCS British Computer Society - UK
The Chartered Institute for IT

BCS கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்கள் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் (Postgraduate) பட்டப்பின் படிப்பினைத் தொடரமுடியும்.

ESOFT ல் BCS கற்பவர்களே இலங்கைரீதியிலும், சர்வதேச ரீதியிலும் முதற்பரிசில்களைப் பெறுகிறார்கள் என்பதை மகிழ்வுடன் தெரியப்படுத்துகிறோம்.



edexcel-UK
HND
HND in Computing
HND in Business
HND in Business IT
HND in HRM
HND in Business Management
18 Months Only

Auto CAD
கொழும்பின் பிரபல விரிவுரையாளரால் 2D,3D வகுப்புகள் நடாத்தப்படுகிறது.

அனைத்துக் கற்கை நெறிகளுக்கும் புதிய பிரிவுகள் ஆரம்பம்..
Week end:- 16/05/2010, Week days:-17/05/2010

ESOFT www.esoft.lk
Jaffna Branch: 114, Navalar Road, Jaffna. T.P- 0212224142
Nelliady Branch: 153,Jaffna Road, Nelliady T.P- 0212264940

Call @ 077 309 9 308



அக்ஷய திருதியை தங்கத் திருநாள்

இன்று தங்கம் வாங்குவதற்குச் சிறந்த நாள். இத் தினத்தில் தங்க ஆபரணங்களைக் கொள்வனவு செய்து தங்க ளின் எதிர்காலத்தைப் பொன்னாக்கிக் கொள்ளுங்கள்

சாரங்கா நகை மாடம்
157/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No.:- 021 222 6972, Fax No.:- 021 222 8869

சாரங்கா ஜூவல்லறி
இல.55, செட்டித்தெரு, கொழும்பு-11
T.P. No.:- 011 2434971, Fax No.:- 011 2434071
(C-270)

நாம் இப்போது சுன்னாகத்தில்
WE ARE NOW AT CHUNNAKAM
நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி
NATION LANKA FINANCE PLC
(1512)



உடன் விரையுங்கள்
நியூ பிரியங்கா நகை மாளிகை

அக்ஷய திருதியையான இன்று (16.05.2010) ஞாயிற்றுக்கிழமை தங்க நகைகளைவிசேட விலைக் கழிவுடனும் பெறுமதி மிக்க பரிசில்களையும் வழங்கவுள்ளோம். நவீன அழகிய தங்க ஆபரணங்களை உத்தரவாதத்துடன் செய்து கொடுப்பதில் வல்லவர்கள்

நியூ பிரியங்கா நகை மாளிகை தங்கப் பவுண் நகை வியாபாரம், 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C-274)



# நா.உறுப்பினர்கள் விலையுயர்ந்த மருந்துகளை இறக்குமதி செய்து ஊழல் புரிந்துள்ளனர்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

நிமால் சிறிபால டி சில்வா சுகாதார அமைச்சராக பதவி வகித்த காலத்தில் தமக்கு வழங்கப்படும் சலுகைகளை துஷ்பிரயோகம் செய்யும் வகையில் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் விலை உயர்ந்த மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்து ஊழல் மோசடி புரிந்துள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

நாடாளுமன்ற சுகாதாரப் பிரிவின் ஊடாகவே பெருமளவு மருந்துப் பொருட்களை குறித்த உறுப்பினர்கள் கொள்வனவு செய்துள்ளனர்.

குறித்த மோசடி தொடர்பில் விசாரணை நடத்துமாறு புதிய சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பொருளாதார ரீதியில் வலுவான நிலையில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களே விலை உயர்ந்த மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்து இவ்வாறு மோசடியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது. அரசாங்கத்தின் நிதியை இவ் வாறு வீண் விரயம் செய்த சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்படவுள்ளது. மேலும் இனிவரும் காலங்களில் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு அனுமதியளிக்கப்படமாட்டாது என புதிய சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார். (2-6)

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி துன்னாலை அல்லையம்பதி சிறி சிவசுப்பிரமணியர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நாளை திங்கட்கிழமை பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை இரவு சப்பறமும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் புதன்கிழமை காலை 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (4)




திறப்பு விழா அழைப்பு

Peninsula Super Mall (pvt) Ltd.

இன்று (16.05.2010) மு.ப. 9.23 தொடக்கம் மு.ப. 11.05 மணி வரையுள்ள சுபமுகூர்த்த சுப வேளையில் எமது நிறுவனம்

திரு.K.P. ஆனந்தநடேசன்

(Cheif Manager, BOC, Jaffna.)

அவர்களினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

PSM

All Kind of consumable items under one roof

No. 127, Kandy Road, Kachcheri, Jaffna.

0718797243

psmjaffna@gmail.com


(C-268)


# 16.05.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1667 – யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக வாக்கிய பஞ்சாங்கம் இராமலிங்க முனிவரால் வெளியிடப்பட்டது.
- 1811 – கூட்டுப் படைகள் (ஸ்பெயின், போர்த்துக்கல் மற்றும் பிரித்தானியா) பிரெஞ்சுப் படைகளை ஆல்புவேரா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் தோற்கடித்தன.
- 1920 – ரோமில் ஜோன் ஒப் ஆர்க் பாப்பரசர் 15 ஆம் பெனடிக்ட்டினால் புனிதப்படுத்தப்பட்டார்.
- 1932 – மும்பாயில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே இடம்பெற்ற கலவரத்தில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.
- 1960 – கலிபோர்னியாவில் ஹியூஸ் ஆய்வுகூடத்தில் தியொடர் மாய்மன் முதலாவது லேசர் ஒளிக்கதிரை இயக்கினார்.
- 1966 – சீனாவின் கலாசாரப் புரட்சியின் ஆரம்பத்தை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்தது.
- 1967 – ஜெருசலேம் நகரம் இஸ்ரேலின் வசம் வந்தது.
- 1969 – சோவியத்தின் வெனேரா 5 விண்கலம் வீனஸ் கோளில் இறங்கியது.
- 1975 – பொதுமக்கள் வாக்கெடுப்பின் அடிப்படையில் சிக்கிம் இந்தியாவின் ஒரு மாநிலமாக இணைக்கப்பட்டது.
- 1975 – ஜுன்கோ டபெய், எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதற் பெண் ஆனார்.
- 1992 – எண்டெவர் விண்ணோடம் தனது முதலாவது பயணத்தை முடித்து பூமிக்குத் திரும்பியது.
- 2004 – 1930 களில் கம்யூனிஸ்டுகளினால் படுகொலை செய்யப்பட்ட ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்களை நினைவுகூர உக்ரேனின் தலைநகர் கீவுக்கு அருகில் உள்ள பிக்கீவ்னியாக் காட்டில் பல்லாயிரக்கணக்கானோர் கூடினர்.
- 2006 – தமிழ்நாட்டில் அனைத்து சாதியினரும் கோயில்களில் அர்ச்சகராகத் தகுதி உடையவராக அறிவிக்க மு.கருணாநிதி தலைமையிலான தமிழக அமைச்சரவையில் முடிவெடுக்கப்பட்டது.
- 2006 – நியுசிலாந்திற்கருகில் 7.4 ரிக்டர் அளவு நிலநடுக்கம் ஏற்பட்டது.

1969 இல் சோவியத் ஒன்றியத்தினால் அனுப்பப்பட்ட வெனேரா 5 விண்கலம் வீனஸ் கோளில்(வெள்ளி) இறங்கியது.




அக்ஷய திருதியை தங்கத் திருவிழா

இன்று தங்கம் வாங்குவதற்கு சிறந்த நாள். ஐஸ்வரியம் நிறைந்த தங்கத் திருநாளில் நீங்கள் தங்க நகைகளைக் கொள்வனவு செய்யும் போது தங்க ஐஸ்வர்யம் உங்களுடன் நிரந்தரமாக நிலைத்திருக்கும்.

அனைவரும் வருக! தங்க ஐஸ்வர்யம் பெறுக.

இன்றைய தினம் நகை கொள்வனவு செய்பவர்களுக்கு அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்படும்

மைதிலி நகை மாடம்

T.P. 021 222 7902

தங்க நகை வியாபாரி

89V, Kasthuriyar Road, Jaffna.

யாழ். மைதிலி ஜூவலர்ஸ்

Yarl Maithily Jewellers

Sea Street Colombo-11

(C-269)

# ரிமோட் கொண்ட்ரோல் மூலம் இருதய சத்திரசிகிச்சை



இருதய நோய் தொடர்பான பிரச்சினைகளால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. எனவே இந்த நோய்க்கு புதிய புதிய சிகிச்சை முறைகள் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன.

இருதயத்துக்கு இரத்தம் எடுத்துச் செல்லும் குழாயில் ஏற்படும் அடைப்பை சரி செய்ய "பைபாஸ் சத்திரசிகிச்சை" நடத்தப்படுகிறது. இதுதவிர இருதய துடிப்பு சீராக இல்லாமல் இருப்பவர்களுக்கும் சிக்கலான சத்திரசிகிச்சை செய்யப்படுகின்றன.

குறிப்பாக இருதயத் துடிப்பு சிலருக்கு குறைவாகவோ' அதிகமாகவோ இருக்கும். இதை சரிசெய்யவும் இருதயத்துக்கு சீராக இரத்தம் செல்லவும் மிகச் சிறிய குழாய் போன்ற மருத்துவ உபகரணத்தை இருதயத்தில் பொருத்துவார்கள்.

சத்திரசிகிச்சை நடக்கும் போது இந்தப் பணிகள் சரியாக நடைபெறுகிறதா? என்பதை எக்ஸ்ரே படம் பிடித்துப் பார்ப்பார்கள். அதாவது எக்ஸ்ரே கருவி மூலம் இந்த சத்திரசிகிச்சையை தொடர்ச்சியாக படம் பிடித்து கண்காணிப்பார்கள். அப்போது சுமார் 250 இற்கும் மேற்பட்ட எக்ஸ்ரேக்கள் எடுக்கப்படும். இதனால் இந்த சத்திரசிசிச்சையை செய்யும் டாக்டர் மற்றும் தாதிகள் கதிர்வீச்சினால் பாதிக்கப்படும் ஆபத்து உள்ளது.

இதை தவிர்க்க ரிமோட் கொண்ட்ரோல் மூலம் இந்த சத்திரசிகிச்சையை செய்ய எந்திரக் கை ஒன்றை அமெரிக்க மருத்துவ நிபுணர்கள் வடிமைத்துள்ளனர். 'ரிமோட் கேதீட்டர் மேனிபுலேசன் சிஸ்டம்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த எந்திரக் கை இங்கிலாந்தில் உள்ள ஜிலன் பீல்ட் மருத்துவ மனையில் உள்ளது. இங்கு இந்த எந்திரக் கையைப் பயன்படுத்தி உலகிலேயே முதன்முதலில் 70 வயதான கென்னத் குராக்கர் என்பவருக்கு சத்திரசிகிச்சை செய்யப்பட்டது.

நோயாளி சத்திரசிகிச்சை தியேட்டரில் இருக்க அவர் அருகில் எந்திரக் கை தயாராக இருந்தது. டாக்டர் ஆன்ட்ரே தலைமையிலான குழுவினர் பக்கத்து அறையில் இருந்தபடி எந்திரக் கையை ரிமோட் மூலம் இயக்கி சத்திரசிகிச்சை செய்தனர். இந்த எந்திரக் கையில் உள்ள கருவிகள் மூலம் நோயாளியின் உடலில் மிகச்சிறிய அளவில் துளையிடப்பட்டு உடலுக்குள் சிறிய கமரா, மின்விளக்கு, அறுவை சிகிச்சை செய்யும் கத்தி மற்றும் பிற உபகரணங்கள் செலுத்தப்பட்டன.

உடலுக்குள் செலுத்தப்பட்ட கமரா மூலம் உறுப்புக்களுக்குள் இருக்கும் பாதிப்பை டெலிவிஷன் திரையில் டாக்டர் பார்த்தபடியே சத்திரசிகிச்சை செய்தார். இருதயத்தை சுற்றி இருந்த சவ்வுப்படலம் காரணமாக இருதயத்துடிப்பு ஒழுங்கற்ற நிலையில் இருந்ததை சத்திரசிகிச்சை மூலம் சரி செய்தனர்.

# புத்துயிர் பெறும் உயிரினங்கள் !



பிரமாண்ட உயிரினமான டைனோசர்கள் இப்போது பூமியில் உயிருடன் இல்லை. ஆனால் ஆய்வகத்தில் டைனோசர்களை உருவாக்க முடியும் என்று ஜுராசிக் பார்க் திரைப்படத்தில் காட்டியிருப்பார்கள்.

அது வெறும் கற்பனையல்ல. நிஜத்திலும் அதுபோன்று இறந்து போன உயிரினங்களை உருவாக்க முடியும் என்று விஞ்ஞானிகள். கண்டுபிடித்துள்ளனர்.

யானைகளின் முன்னோடி இனம் " ஊல்லி மாமூத்". தற்போதுள்ள யானைகளை விட மிகப் பிரமாண்டமானவை மாமூத் யானைகள். பனிக்காலத்தில் வாழ்ந்த இவற்றுக்கு உடல்முழுவதும் 3 அடி நீள ரோமங்களும், மிகப் பெரிய தந்தங்களும் உண்டு. இந்த யானைகளும் டைனோசர்கள் போல கால மாற்றத்தில் அழிந்துபோய்விட்டன.

பழங்காலப் பொருட்கள், உயிரினங்கள் பற்றி நாம் பூமியில் புதைந்திருக்கும் படிமங்கள் மூலம் அறிந்துகொள்கிறோம். பனிப் பிரதேசத்தில் இறந்த உயிரினங்களின் படிமங்கள் நீண்டகாலத்துக்கு சிதைவுறாமலும், கெட்டுப் போகாமலும் கிடைக்கிறது.

இப்படிக் கிடைத்த சில படிமங்களின் மூலம் ஒரு சில உயிரினங்களின் டி.என்.ஏ.வை வரையறை செய்யமுடிந்துள்ளது. அந்த டி.என்.ஏ. மாதிரியை செயற்கையாக உருவாக்கி தற்போதுள்ள உயிரினங்களில் செலுத்தி புதிய பரிமாற்றத்துடன் பழைய உயிரினங்களை திரும்பவும் உயிரூட்டி கொண்டு வரமுடியும் என்பது விஞ்ஞானக் கண்டுபிடிப்பு.


இந்த முறையில் மாமூத் வகை யானைகளுக்கு மீண்டும் உயிர்கொடுக்கலாம் என்று கனடாவில் உள்ள மானிபோபோ பல்கலைக்கழக ஆய்வாளர் கெவின் காம்பல் கூறுகிறார்.

இது தொடர்பான ஆய்வுகள் தொடர உள்ளது. இதில் வெற்றி கிடைத்தால் நமது காலத்திலும் டைனோசர்கள், மாமூத் யானைகள் போன்ற பழங்கால உயிரினங்கள் நடமாடும்.




## சின்னப்பக்கம்; 100 கோடி பக்கங்கள்

தகவல்களை சேமித்து வைக்க "ஹார்ட் டிஸ்க்" எனப்படும் நினைவுத்தகடு பயன்படுத்தப்படுகிறது. இதேபோல் செல்போன்கள், டிஜிட்டல் கமராக்கள் போன்றவற்றில் தகவல்களை பதிவு செய்ய "மெமரி கார்ட்" வசதி உள்ளது. கொள் திறனுக்கு ஏற்ப இந்த நினைவுத் தகடுகள் கிடைக்கின்றன.



ஆரம்ப கால கட்டங்களில் இந்த நினைவுத் தகடுகள் அளவில் பெரிதாக இருந்தன. தொழில்நுட்பம் வளரவளர சிறிய ஸ்டாம்ப் அளவில் உள்ள மெமரி கார்டில் பலநூறு பக்கங்கள் உள்ள தகவல்களை சேமிக்கும் வசதி உருவானது. இப்போது நானோ தொழில்நுட்பம்' கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் இதைவிட பல மடங்கு சேமிப்பு வசதி, ஆனால் மிகச் சிறிய மெமரி கார்ட் என்ற அளவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த வகையில் வந்துள்ள புதிய தொழில்நுட்பம் தான் 'நானோ டொட்ஸ்' அமெரிக்காவில் உள்ள வடக்கு கரோலினா பகுதியைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இந்த நானோ டொட் தொழில்நுட் பத்தை கண்டுபிடித்துள்ளனர்.

நானோ தொழில்நுட்பத்தில் தயாரிக் கப்பட்டுள்ள இந்த மெமரி கார்ட் என்பது ஒரு சதுர அங்குலம் அளவில் இருக்கும். இந்தச் சிறிய 'சிப்' -ல் இலட்சக்கணக்கான 'நானோ டொட்கள்' இடம்பெற்று இருக்கும். இவை காந்த தொழில் நுட் பத்தில் இயங்கும் அடுத்த கட்டமாக லேசர் தொழில்நுட்பத்தில் இதை இயக்கும் வகை யில் ஆய்வுகள் நடக்கிறது. இந்த ஆய்வு கள் வெற்றி பெற்றால் இதைவிட அதிக அள வில் தகவல்களை சேமிக்கும் வகையில் ஹார் டிஸ்க்குகள் மற்றும் மெமரி கார்ட்டுகள் தயாரிக்கப்படும்.

# 'பைட்' முதல் 'ஷீட்டா பைட்' வரை...

ஒரு பொருளின் எடையை மில்லிகிராம், கிராம், கிலோ கிராம், தொன்... என்று குறிப்பிடுவது போல மின்னணு சாதனங்களான கணனி மற்றும் மெமரி கார்ட்களில் உள்ள நினைவுத்திறன் பைட், கிலோபைட், மெகா பைட் என்று குறிப்பிடப்படுகிறது.

ஒரு "பைட்" (Byte)என்பது ஒரு எழுத்து ஆகும். உதாரணமாக 'அ' என்ற எழுத்தை கணனி நினைவில் பதிவு செய்தால் அது 'பைட்' என்று கணக்கிடப்படும். எழுத்து மட்டுமல்ல ஒரு வெற்றிடம் விட்டால் கூட அது ஒரு பைட் Space விட்டால்கூட அது ஒரு பைட் என்று கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

இதற்கு அடுத்தபடியாக வருவது கிலோ பைட் Kilo Byte ஒரு கிலோ பைட் என்பது ஆயிரம் பைட்கள் சேர்ந்தது ஆகும். உதாரணமாக சொல்வது என்றால் ஒரு ஏ4 அளவுள்ள தாளில் இடம்பெறும் தகவல்கள் சராசரியாக ஒரு கிலோ பைட் அளவில் இருக்கும். ஆங்கிலத்தில் கிலோ பைட் என்பதை சுருக்கமாக கே.பி என்பார்கள்.

அடுத்து வருவது மெகா பைட் Mega Byte 10 இலட்சம் பைட் டுகள் சேர்ந்தது ஒரு மெகா பைட் ஆகும். சுமார் 500 பக்கங்கள் கொண்ட புத்தகத்தில் உள்ள தகவல்களை ஒரு மெகா பைட் என்று உதாரணத்துக்கு குறிப்பிடலாம்.

ஆங்கிலத்தில் இதை எம்.பி என்று சுருக்கமாக கூறுவதுண்டு.

தொடர்ந்து வருவது ஜிகா பைட் (Giga Byte)100 கோடி பைட்டுகள் சேர்ந்தது ஒரு ஜிகா பைட் ஆகும். சுருக்கமாக ஆங்கிலத்தில் இதை ஜி.பி என்று அழைப்பார்கள். ஒரு முழு நீள தமிழ் சினிமாப் படத்தை ஒரு ஜி.பி அளவில் அடக்கி விடலாம்.

இலட்சம் கோடி பைட்கள் சேர்ந்தது டெரா பைட் (Tera Byte) என்று அழைக்கப்படுகிறது. ஆயிரம் ஜி.பி சேர்ந்தது ஒரு டெரா பைட் ஆகும். சுருக்கமாக இதை ஜி.பி என்பார்கள் ஒரு டெரா பைட் என்பதற்கு உதாரணம் என்சைக்கே ளாபீடியா எனப்படும் பல பாகங்கள் கொண்ட ஆங்கில கலைக் களஞ்சியத்தின் ஆயிரம் பிரதிகளை ஒரு டெரா பைட் அளவில் அடக்கிவிடலாம்.

அடுத்து வருவது பீட்டா பைட் (Peta Byte). ஒரு பீட்டா பைட் என்பது ஒன்றுக்கு பின்னர் 15 பூஜ்ஜியங்கள் கொண்டதாகும். அதாவது ஆயிரம் டெரா பைட் கொண்டது ஒரு பீட்டா பைட். சுமார் 50 ஆயிரம் கோடி பக்கங்கள் கொண்ட தகவல்களை ஒரு பீட்டா பைட் அளவில் பதிவு செய்து வைக்கலாம். இணைய தள சேவை நிறுவனமான கூகுள் ஒரு நாளில் 24 பீட்டா பைட் அளவுள்ள தகவல்களை கையாளுகிறது.



மிகப்பெரிய அளவாக இப்போது உருவாகி இருப்பது தான் ஷீட்டா பைட் (Zetta Byte)ஒன்றுக்கு பின்னர் 21 பூஜ்ஜியங்கள் கொண்டது ஒரு ஷீட்டா பைட் ஆகும். மின்னணு அளவீடுகளில் இப்போதைய மிகப்பெரிய அளவு இது தான். இதற்கு அடுத்தபடியாக யோட்டா பைட் (Yotta Byte)உள்ளது. ஒரு யோட்டா பைட் என்பது ஒன்றுக்குப்பின்னர் 24 பூஜ்ஜியங்கள் கொண்டதாகும். ஆனால் இந்த அளவு அங்கீகாரம் பெறவில்லை.

## வலி சுமந்த மே மாதம்

# பாதிப்பேரை கொன்றுவிட்டார்கள் மீதிப்பேர் நடைப் பிணங்களாக...

**வலிசுமந்த மே மாதம் என்ற தலைப்பில் ஆனந்தவிகடன் பிரசுரித்த கட்டுரை இங்கே தரப் படுகின்றது. (ஆ-ர்)**

ஆயிரக்கணக்கான மரணங்களை, கொடூரக் கொலைகளை, குண்டு வீச்சுக்களைத் தாங்கி சாட்சிகளே இல்லாத சாவுக்களமாய்கிடக்கிறது தாய் மண். கிளஸ்டரும் வெள்ளை பொஸ்பரசும் இரன்ன பிற நச்சு ஆயுதங்களும் வீசிய சத்தம் இன்னமும் நினைவிலாடும் தேசம். சொந்த தேசத்து மக்களையே கொன்று குவித்த குற்ற உணர்ச்சி சிறிதும் இல்லாமல் வெற்றி விழாவை நடத்தினாலும் காட்டுக்குள் இருந்து கணைகள் வருமோ, கடலுக்குள் இருந்து பகை வருமோ என்ற பயத்தால் அலரி மாளிகைக்குள் ஆட்சியார்கள் பதுங்கி இருக்கிறார்கள்.

ஓர் இனக்கூட்டம் ஈனஸ்வரத்தில் தனது அஞ்சலிக்காகத் தானே கதறித் தவம் இருக்கும் குரல் கேட்கிறதா ! அந்தக் திசையைப் பாருங்கள் -தெரிவதுதான் ஈழம்!

உலகம் வேடிக்கை பார்க்கவில்லை, தூண்டியே விட்டது. பக்கத்து நாடுகள் கண்டிக்கவில்லை, ஆயுதங்கள் கொடுத்தன. ஆலோசனைகள் சொல்லின. ஆதரவாக நின்றன. மொழி, இனம், பற்றிப் பேசியே உலகத் தலைவர் ஆனவர்களின் கண்களில் நீர் இல்லை, கழுத்தை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டார்கள். எதையாவது செய்திருக்க வேண்டிய சொந்தங்கள், கதை கேட்க ஆரம்பித்தார்கள் **சொந்த சகோதரர் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை கலங்காத** நம் முன்னே ஈழத்தில் சாவுச் சங்கு ஊதப்பட்டு ஓராண்டு ஆகிறது. ***மே*** மாதம் கிரிகோரியன் காலண்டரில் உலகத் தமிழன் குறித்துவைத்திருக்கிறான், ***வலி சுமந்த மாதம்*** என்று இனி ஒவ்வோர் ஆண்டும் அக்னி வெயிலை விடக் கொடுமையாக நமது உள்ளங்களை அது சுடும்.

ஆனால் கொழும்பு மகிழ்ச்சியாக இருக்கிறது. மே 12 முதல் 20 ஆம் திகதி வரை போர் வீரர்களின் வாரமாகக் கொண்டாடுகிறார்கள். முப்படைகளின் தளபதியாகவும் ஜனாதிபதியாகவும் இருக்கும் மகிந்தா ராஜபக்ஷ தனது முழுக் குடும்பத்தையும் ஆட்சிக் கட்டிலில் உட்கார்த்தி அழகு பார்க்கப் பயன்பட்ட யுத்தத்தின் வெற்றி அல்லவா இது!

இரண்டு இலட்சம் தமிழர்கள் கொல்லப் பட்டனர். நாடு இப்போது அமைதியின் பக்கம் இருக்கிறது. என்று மகிந்தா அறிவித்திருக்கிறார் ஆனால், யதார்த்தம்?

உங்கள் நாட்டில் குண்டுச் சத்தம் இல்லைதானே ...அப்படியானால் அமைதி யுகம் ஆரம்பமாகிவிட்டதா? என்ற கேள்விக்கு கொழும்புப் பத்திரிகையாளர் ஒருவர் சொன்னார்... பாதிப் பேரைக்கொன்று விட்டார்கள் மீதிப் பேர் நடைப்பிணங்களாக அலைகிறார்கள். அவர்களையும் கொல்ல குண்டுகளை வீணடிக்க சிங்கள இனவாதம் விரும்பவில்லை.

ஈழத்தில் இருக்கும் தன் அம்மாவுக்கு உடல் நலம் இல்லை என்ற தகவல் வந்ததும் பிரிட்டனில் இருந்து புறப்பட்டார் சபேசன். போர் முடிந்துவிட்டதால், போய் வரலாம் என்பது அவரது எண்ணம் கொழும்பு வந்து... அங்கே இருந்து வவுனியாவில் போய் இறங்கினார். திடீரெனச் சுற்றி வளைக்கப்பட்டார் சபேசன் .

அவருடைய கண்கள் கறுப்புத் துணியால் கட்டப்பட்டன. கைகளைப் பின்னால் இழுத்துக்கட்டுகிறார்கள். மதவாச்சி சித்திரவதைக் கூடத்துக்குக் கொண்டு போகப்பட்டு.... சொல்ல முடியாத வகையில் வதைக்கப்படுகிறார். யார் யார் பெயரை எல்லாமோ சொல்லி அவரைத் தெரியுமா.... இவரைத் தெரியுமா என்று கேட்டால் , சபேசனுக்கு அவரது அம்மாவைத் தவிர யாரையும் தெரியவில்லை. பழுக்கக்காய்ச்சிய கம்பியால் முதுகில் கோடு போட்டு, அதில் தண்ணீரைப் பாய்ச்சி... பிறப்பு உறுப்பிலும் மிளகாய்ப்பொடி தூவி என... சபேசன் அனுபவித்தவை அதிகம். முடிவாக



இலட்சக்கணக்கான பணம் கொடுக்கப்பட்டு மீட்கப்பட்டு இருக்கிறார்.

இதே மாதிரிதான் லண்டனில் இருந்து உறவினர்களைப் பார்க்க வந்த பா.ஜெயவதனான் வெள்ளவத்தை காவல் நிலையத்துக்குச் சென்று நான் என்னைப் பதிவு செய்துகொள் வேண்டுமா? என்று அப்பாவியாகக் கேட்க ... உள்ளே போய் உட்காருங்கள் என்று சொன்னார்கள். அங்கே இருந்த நான்கைந்து பேர் ஜெயவதனனைக் கடத்திப் போய் சித்ரவதை செய்கிறார்கள். சரமாரியான அடி, உதை வாங்கி சோறு, தண்ணீர் இல்லாமல் கிடத்தப்படுகிறார். சில இலட்சம் பணத்துடன் உறவினர்கள் வந்து அவரை மீட்டுச் சென்றுள்ளார்கள்.









கபிலநாத் என்ற மாணவனைக் கடத்திய கும்பல் மூன்று கோடி ரூபாய் பணம் கேட்டுக் காத்திருந்தது. அவ்வளவு பணம் தரும் அளவுக்குப் பெற்றோரிடம் வசதி இல்லை .கபிலநாத் கொல்லப்பட்டான் 13 வயதான ரீ. அஜீத்குமார் என்ற பையனை மெனிக்ஃபார்ம் முகாமுக்கு அருகில் கறுப்பு வேன் ஆசாமிகள் கடத்தினார்கள். அதே முகாமில் இருந்த பெண்களை இரவு நேரத்தில் ஆட்கள் இழுத்துச் சென்று கற்பழித்துக்கொலை செய்வது சர்வசாதாரணமாக நடக்கிறது.

பொறியாளர்கள் பி.மகேஸ்வரன், எஸ்.மகேந்திரன் ஆகிய இருவரையும் மர்மக் கும்பல் கடத்த முயற்சிக்க... உறவினர்கள் சூழ்ந்து தடுத்துவிட்டார்கள். இப்படி எத்தனையோ சம்பவங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம் சட்டத்துக்குப் புறம்பான கைது, ஆள் கடத்தல், கப்பம் கோருதல், கொள்ளைச் சம்பவங்கள், கொடூரக் கொலைகள், கற்பழிப்புகள் .... ஆகியவை நடக்கும் இடமாக இப்போதைய ஈழம் இருக்கிறது.

இந்தச் சம்பவங்களைப் பட்டியலிட்டு நாடாளுமன்றத்தில் அப்பாத்துரை விநாயகமூர்த்தி என்ற தமிழ் எம்.பி. பேசியிருக்கிறார். இராணுவத்தின் ஆட்சி நடக்கும் பகுதியில் இந்தச் சம்பவங்கள் நடக்கின்றன. இவை திட்டமிட்டுச்செயல்படும் குழுக்களால் நடத்தப்படுகிறது. இராணுவத்திக்குத் தெரியாமல் இது எப்படி நடக்க முடியும்? என்று கேட்டார் .

பதில் சொல்வதற்குத்தான் யாரும் இல்லை. கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா எனக் கொஞ்சம் காசு வைத்திருக்கும் தமிழர்கள் தலைமறைவாக வாழ்ந்தாக வேண்டிய சூழலே இன்றும் நிலவுகிறது.

மூன்று இலட்சம் மக்களை முள்வேலிக் கம்பிகளுக்குள் வைத்திருந்து முடமாகக் நினைத்த அரசுக்கு எதிராக உலக நிர்பந்தம் அதிகமானது எனவே, கொஞ்சம் கொஞ்சமாக வெளியே விட்டனர். இன்னமும் 73 ஆயிரம் தமிழர்கள் முள்வேலிகளுக்குள் இருக்கிறார்கள். புலிகள் அமைப்பில் இணைந்து உயிரைவிட்ட 40 ஆயிரம் போராளிகளின் குடும்பங்களே இதில் அதிகம். உங்களை வெளியில் விட்டால் எங்கள் நாட்டுக்கு ஆபத்து மறுபடியும் ஆயுதம் தூக்க நீங்கள் உதவியாக இருப்பீர்கள் என்று வெளியே விட மறுத்துவிட்டார்கள். அதே வெயிலிலும் மழையிலும் *(14ஆம் பக்கம் பார்க்க....)*





## சிம்புவின் திருமணம் எப்போது? டி.ஆர்.பதில்

சிம்புவுக்கு திருமணம் எப்போது என்ற கேள்விக்கு சிம்புவின் தந்தையும் நடிகருமான விஜய டி.ராஜேந்தர் பதில் அளித்துள்ளார். சிம்புவின் தங்கை இலக்கியாவுக்கு இரகசியமாக திருமணம் நடந்து விட்டதாக சமீபத்தில் செய்தி வெளியானது.

இதனை மறுத்து ராஜேந்தர் அளித்துள்ள பேட்டியில் ,

இலக்கியா எம்.பி.ஏ. படித்திருக்கிறார். அவருக்கு இரகசிய திருமணம் எதுவும் நடக்கவில்லை. மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருக்கிறோம். படித்த- பண்புள்ள மாப்பிள்ளையாக தேடி வருகிறோம் என்று கூறியுள்ளார்.

சிம்பு திருமணம் பற்றி கூறுகையில் , சிலம்பரசன் தங்கையின் திருமணம் முடிந்த பின்னர் தான் திருமணம் செய்து கொள்வேன். என்று உறுதியாக இருக்கிறான். அவனுக்கும் நிறைய பெண் வீட்டார் வந்து கொண்டிருக் கிறார்கள்.

நான் ஜோதிடத்தில் நம்பிக்கை உள்ளவன். அவனுக்கு பொருத்தமான ஜாதகத்தை தேடிக் கொண்டிருக்கிறேன். இலக்கியா திருமணம் முடிந்த பின்னர் சிலம்பரசனின் திருமணம் நடைபெறும் என்று விஜய டி.ராஜேந்திர் தெரிவித்துள்ளார்.

இலங்கை திரைப்பட விழாவில் பங்கேற்கவில்லை என அமிதாப் முடிவு எடுத்ததற்கு கமலும் ரஜனியும் தான் காரணம் என்கிறார்கள்.

மணிரத்னம் இயக்கும் "ராவணன்" படத்தில் இரண்டு ஓநாய்கள் நடிக்கின்றன. இவை அமெரிக்காவிலிருந்து கொண்டு வரப்பட்டவை.

## குட்டிப் பிசாசு




ராம்ஜி, சங்கீதா தங்களது ஒரே குழந்தை கீத்தீகாவை பாசத்துடன் வளர்க்கின்றனர். இந்த நிலையில தொழில் அதிபர் ரியாஸ்கானை சந்திக்க வரும் மஜிக் நண்பர், தனது மந்திர சக்திகளை காட்டி ஆச்சரியப்பட வைப்பதுடன், "கன்னிப் பெண்ணை பலி கொடுத்தால் வங்கியில் உள்ள பணத்தையெல்லாம் அடையும் சக்தி பெற முடியும்" என்கிறார். அதற்கு ஏற்பாடு செய்வதாகக் கூறும் ரியாஸ், தனது முறைப்பெண் காவேரியை அழைத்து வருகிறார். காவேரியை வசியப்படுத்தி தீயில் எரிக்கிறார் மஜிக் நண்பர். அப்போது வரும் கஞ்சாகருப்பு தனது தங்கை தீயில் எரிவதைக் கண்டு அதிர்ச்சி அடைகிறார். தானும் தீயில் குதித்து உயிர்விடுகிறார். இறந்துபோன கஞ்சா கருப்புவின் ஆவி ஒரு காரிலும், காவேரியின் ஆவி, குழந்தை கீத்தீகா உடலிலும் புகுந்துகொண்டு ரியாஸ்கானையும் அவரது நண்பர்களையும் எப்படி பழிவாங்குகிறது என்பது கதை.

பேபி கீத்தீகாவின் நடனம், குட்டி மஞ்சள் காரின் சாகசம் தான் படத்தின் ஹைலைட். இதையே கருவாகக் கொண்டு கதையை உருவாக்கியிருக்கிறார்கள். கார் மற்றும் கீத்தீகாவின் ஆட்டம், பாட்டம் சுவாரஸ்யம். அந்தக் காலத்து மஞ்சள் நிற கார், திடீரென்று இராட்சத மனிதனாக மாறி ரியாஸ்கான், நண்பர்களை துரத்துவதும், அங்கிருக்கும் கார்களை தூக்கி வீசுவதும் புரபுரக்க வைக்கிறது. நள்ளிரவில் கதவைத் தட்டும் சத்தம் கேட்டு திறக்கும் சங்கீதா, அங்கு தனது குழந்தை கீத்தீகா நிற்பதைக் கண்டு திடுக்கிடுவதும், அதற்கு எந்த ரியாக்ஷனும் காட்டாமல் "தண்ணி கொடு, தலைய முழுகனும்" என்று கோபமாக கீத்தீகா கேட்பதும் திடுக். "எதுக்கு நீ தலைமுழுகனும்" என்று சங்கீதா கேட்க, "இழவுக்கு போயிட்டு வந்தா குளிக்குனும்ன்னு நீதானே சொன்னே" என்றபடி தலையில் தண்ணீரை ஊற்றிக்கொண்டு கீத்தீகா வீட்டுக்குள் நடக்கும்போது ரசிகர்களும் அதிர்ச்சி அடைகின்றனர். குடுகுடுப்பைக்காரராக வரும் தண்டபாணி வந்ததும் காட்சிகள் வேகமாக நகர்கிறது. முனியாண்டி விலாஸ் ஹோட்டலுக்குள் நுழையும் கீத்தீகா மட்டன், சிக்கன், பிரியாணி என பிளேட் பிளேட்டாக ஓடர் செய்து வெளுத்துக் கட்டுவதைப் பார்த்து உறைந்துபோவதும், பள்ளிக்கூட புத்தக பையிலிருந்து இரத்தப் போத்தலை எடுத்து கீத்தீகா மடக் மடக் என்று குடிப்பதைப் பார்த்து திகில டைவதுமாக டெல்லி கணேஷ், ராம்ஜியும் குபீர் சிரிப்பு பொங்கச் செய்கின்றனர். நெற்றி நிறைய குங்குமப் பொட்டுடன் காவல் தெய்வமாக வரும் ரம்யா, கண்களை அகலவிரித்து பயமுறுத்துகிறார். தண்ணீர் கானை பிடுங்கிக் குடிப்பது, ஆளை போட்டுத் தள்ளியதும் டிக்கியை காட்டி ஆட்டம் போடுவது என குட்டிக் காரின் அட்டகாசம் காட்சிகளுக்கு சுவை கூட்டுகிறது.



பொலிஸ் இன்ஸ்பெக்ராக வரும் லிவிங்ஸ்டன் தன் பங்குக்கு கிச்சு கி[illegible]குகிறார். கிராபிக்ஸ் காட்சிகளை கலக்கலாக இணைத் திருக்கிறார் இயக்குநர். தேவா இசையில் பாடல்கள் குழந்தைகளை குத்தாட்டம் போட வைக்கிறது. ஏற்கனவே சனல்களில் பார்த்த காட்சிகள், லொஜிக் இல்லாத கிராபிக்ஸ் என படத்தை கொண்டுபோயிருக்கும் இயக்குநர், இன்னும் சுவாரஸ்யமாக தந்திருக்கலாம். மொத்தத்தில் "குட்டிப்பிசாசு" - குழந்தைகளை குத்தாட்டம் போட வைக்கும்!.







## விஜய்யின் அடுத்த படம் 'வேலாயுதம்'!



சுறா படத்தையடுத்து, மலையாளப் படமான 'பாடிகாட்' ரீமேக்கில் நடித்து வருகிறார் விஜய். இந்தப் படத்தின் பெயர் "காவல்காரன்" என்று முதலில் விஜய் தரப்பில் கூறப்பட்டது. பின்னர் காவல்காரன் தலைப்பை சூட்டுவது குறித்து யோசித்து வருகிறோம் என்று கூறியுள்ளனர்.

ஆனால் ஜெயம் ராஜா இயக்கும் விஜய்யின் 52ஆவது படத்துக்கு அந்த மாதிரி குழப்பம் எதுவும் இல்லை. தலைப்பை வைத்த பின்னர் தான் படப்பிடிப்புக்குச் செல்வது ஜெயம் ராஜாவின் வழக்கம். எனவே விஜய்யின் இந்தப் படத்துக்கு "வேலாயுதம்" என்ற பெயரைச் சூட்டியுள்ளனர்.

விஜய் முன்பு வைக்கப்பட்ட நான்கைந்து தலைப்புக்களில் , அவரே விரும்பித் தேர்வு செய்த தலைப்பாம் இது. இசையமைப்பாளராக தேவிஸ்ரீபிரசாத் ஒப்பந்தம் செய்யபப்பட்டுள்ளார்.

இந்தப்படத்தின் நடிகர்கள், இதர தொழில் நுட்பக் கலைஞர்கள் குறித்து விரைவில் அறிவிப்பு வெளியாகஉள்ளது. ஜூலை மாதம் "வேலாயுதம்" படப்பிடிப்பு ஆரம்பமாகிறது.

## 6 வில்லன்களுடன் அர்ஜூன் சண்டை

ஈ.எஸ்.கே.பிலிம்ஸ் இன்டர்நேஷனல் சார்பில் டி.டி.ராஜா தயாரிக்கும் படம் "வல்லக் கோட்டை" இதில் 6 வில்லன்களுடன் அர்ஜூன் மோதிய கிளைமாக்ஸ் சண்டைக்காட்சி, 10 இலட்சம் ரூபாய் செலவில் படமாக்கப்பட்டது.



இதுகுறித்து இயக்குநர் ஏ.வெங்கடேஷ் கூறியதாவது,

சின்னச் சின்ன திருட்டுக்கள் செய்து பொலிஸ் பிடியில் சிக்கி சிறைக்குள் போக்கிறார் அர்ஜூன். இதுதான் அவரது கரக்டர். பின்னர் விடுதலையாகி இனி எந்தத்தவறும் செய்யமாட்டேன் என்று உறுதிமொழியுடன் வல்லக்கோட்டைக்கு வருகிறார். அப்போது வில்லன் கோஷ்டி, அர்ஜூனை சூழ்ச்சி வலையில் சிக்க வைக்கிறது. அதிலிருந்து மீள 6 வில்லன் களுடன் அர்ஜூன் மோதும் சண்டைக் காட்சி கிளைமாக்ஸில் இடம்பெறுகிறது. தளபதி தினேஷ் பயிற்சி அளிக்க ஆஞ்சநேயலு ஒளிப்பதிவு செய்கிறார்.

ஆஷிஷ் வித்யார்த்தி, சுரேஷ், லிவிங்ஸ்டன், வின்சென்ட் அசோகன், ஓ.கே. சுந்தர், பிரேம் ஆகியோர் வில்லன்கள். இவர்களுடன் அர்ஜூன் மோதிய சண்டைக் காட்சி ஹாலிவுட் தரத்தில், 3 கமராக்கள் மூலம் 7 நாட்கள் படமாக்கப்பட்டது. இவ்வாறு ஏ.வெங்கடேஷ் கூறினார்.

## 'இப்போ நான் அரசியல்வாதி!'

### அஜித் அதிரடிப் பேட்டி



**அஜித்... எப்போதும் ஆச்சரியம்!**

மொராக்கோ ரேஸ் விபத்தில் நூலிழையில் தப்பித்தார்! என்று செய்திகள் பரபரத்துக் கிடந்த நாள் நள்ளிரவில் "அஜித் கோலிங்" என்று ஒளிர்ந்தது மொபைல்!

ரேஸ் ரேஸ்னு பறந்திட்டே இருப்பதால் அனோஷ்காவையும் ஷாலினியையும் ரொம்பவே மிஸ் பண்றேன். இதோ அடுத்து இத்தாலி போகனும் நடுவில் இரண்டு நாள் விடுமுறை கிடைச்சது. உடனே சென்னைக்கு வந்தேன். இந்த வருடம் என் பிறந்தநாளின் போதுகூட அவங்கள் இரண்டு பேரும் என் பக்கத்தில் இல்லை! என அஜித் அன்று பேசியது அத்தனையும் அவர் மனதுக்கு நெருக்கமான, விருப்பமான விடயங்கள் மட்டுமே! நடிகர் அஜித் பத்திரிகையாளர்களிடம் வழங்கிய கருத்துக்கள் வருமாறு,

***என்ன ஆகிவிட்டது. மொராக்கோ ரேஸில்?***

இந்த வருடம் போர்முலா 2 பருவம் மிகவும் நல்லதாக ஆரம் பித்தது அன்று கார் ரேஸில் திடீர்னு எனக்கு முன்னாள் சென்ற கார் ஒன்று எகிறிப் பறந்து இன்னொரு கார் மேல் மோதிவிட்டது. பெற்றோல் சிந்துண்டு எரிய ஆரம்பித்தது. இன்னொரு காரும் அதில் மோத... பயங்கர விபத்து நான் சிறிது பின்னால் இருந்ததால் எதிலும் மோதாமல் விலகிவிட்டேன். வேகத்தைக் கட்டுப்படுத்தி எதிலும் மோதாமல் விலகிவிட்டேன். 100 அடி முன்னாள் என் கார் இருந்திருந்தா மை காட்!

***எப்போ ரேஸில் திரும்பக் கலந்துகொள்ள வேண்டுமென முடிவெடுத்தீர்கள்?***

பத்மஸ்ரீ விருது கிடைத்ததற்காக நரேன் கார்த்திகேயனைப் பாராட்டி ஒரு விருந்து. அப்போ, சென்னை எம்.ஆர்.எப் ரேஸ் பற்றி நிறைய சொல்லிவிட்டு நீங்க கலந்துக்கிறீங்களா? என்று கார்த்திகேயன் கேட்டார். என் மனது ஓ.கே சொல்லிவிட்டது. பெரிய எதிர்பார்ப்புகள் இல்லாமல் தான் கலந்துகொண்டேன். ஏழாவது இடம் வந்தேன். உற்சாகத்தில் உள்ளுக்குள் மறைந்திருந்த ரேஸ் வெறி திரும்ப குதிரை ஏறிவிட்டது. நரேன் கார்த்திகேயன்" என்னை யுரேஷியா மோட்டார் ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் பியர்ஸ் ஹன்னி செட்டிடம் அறிமுகப்படுத்தினார். அவர் தான் இப்போ என் ரேஸ் குரு!

***இதுவரை நீங்கள் கலந்துகொண்ட எல்லா ரேஸிலும் கிட்டத்தட்ட கடைசி இடம்தான் பிடிக்கிறீங்க... என்ன காரணம்?***

இப்ப எனக்கு 39 வயது. போர்முலா 2 ரேஸ் ஓட்டுபவர்களில் எனக்குத்தான் வயது அதிகம். அவங்க எல்லாருமே ஆறு வயதில் இருந்தே பக்கா பயிற்சி எடுத்து 20 வயதுக்குள் சர்வதேசப் போட்டிகளில் கலந்துகொள்கிறார்கள். ஆனா நான் ஆறு வருடம் ஓய்வெடுத்துவிட்டு இப்போதான் திரும்ப வந்திருக்கிறேன். உடனே ரிசல்ட் கிடைக்கும் என்று சொன்னா என்னையே நான் ஏமாத்திவிடுகிறேன் என்று தான் அர்த்தம். படிப்படியாகத்தான் முன்னேற வேண்டும் மெதுவா நடந்தாலும் எப்பவும் பின்நோக்கி மட்டும் நடக்கமாட்டேன்!

***அனோஷ்கா என்ன சொல்றாங்க?***

என் டார்லிங் டி.வி யில் எந்தக் காரைப் பார்த்தாலும் அப்பா கார்... அப்பா கார்னு குதிக்கிற. அதேமாதிரி ஷாலினியோ நானோ டி.வி – யில் வந்தால் அம்மா படம்...அப்பா படம் என்று ஜாலியாக ஓடிவந்து முத்தம் கொடுப்பார் நான் மிகவும் கொடுத்து வைத்தவன் என்று ஒவ்வொரு நிமிடமும் என்னை உணரவைத்துக் கொண்டு இருக்கிறாள் அனோஷ்கா !

***நீங்க நடிக்கிற படங்கள் சரியா வெற்றி பெறுவதில்லை என்று தான் ரேஸ் பக்கம் திரும்பிட்டீர்கள் என்று பேசுகிறது தெரியுமா?***

உண்மை சொல்லவா பொஸ்? நான் இதுவரை நடித்த அத்தனை படங்களிலும் என்னோட 100 சதவிகித உழைப்பைக் கொடுத்துத்தான் நடிச்சிருக்கேன். ஆனா அதில் பல படங்கள் ஹிட் ஆகவில்லை என்று நினைக்கும்போது மனதுக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கு. தொடர்ந்து மட்டமான, குப்பையான படங்களா நடித்து என் ரசிகர்களை நான் ஏமாத்த விரும்பவில்லை. அதுவும் இப்போ தியேட்டருக்கு வந்து சினிமா பார்க்கிறது பெரிய செலவு பிடிக்கிற விடயம். அவ்வளவு காசு செலவழித்து தியேட்டருக்கு வருகிற ரசிகர்கள் யாரும் நிச்சயம் குப்பையான படங்கள் பார்க்க விரும்பமாட்டார்கள்.

என்னைப் பொறுத்தவரை மட்டமான படங்களில் நடிக்கிறதுக்குப் பதிலா சும்மா வீட்டில் உட்காரலாம். என்னால் தொடர்ந்து வருடத்துக்கு 200 நாள் கால்ஷீட் கொடுத்து கோடி கோடியாச் சம்பாதிக்க முடியும். ஆனால் எனக்கு அதில் ஆர்வம் இல்லை. இந்த அஜித் மனதுக்குப் பிடித்ததை மட்டும்தான் செய்வான். மனுஷனுக்குச் சந்தோஷம் தான் சேர் முக்கியம்.!

***அப்போது இனி சினிமா?***

சந்தேகமே வேண்டாம். தொடர்ந்து சினிமாவில் நடிப்பேன். ஆனால் வருடத்துக்கு ஒரு படம் நடித்தாலும் நல்ல படமா நடிக்க வேண்டும் இப்போ தயாநிதி அழகிரியின் "கிளவுட் நைன் மூவி" சுக்காக ஒரு படம் நடிக்கிறேன். கௌதம் சார் ஸ்கிரிப்ட் ரெடி பண்ணிட்டு இருக்கார். செப்டம்பரில் ரேஸ் முடித்தும் ஒக்டோபரில் ஷூட்டிங் ஆரம்பிக்கும்.

***அஜீத் அரசியலுக்கு வரப்போறார் என்று ஒரு பேச்சு இருக்கே... அஜீத்குமார் அரசியல்வாதி ஆவாரா?***

இப்போது நான் அரசியல்வாதி இல்லை என்று யார் சொன்னது? இப்பவும் எப்பவும் அரசியல் என்னைச் சுத்தி இருந்துட்டு தான் இருக்கு பொஸ். சினிமா இண்டஸ்ட்ரி முழுக்கவே அரசியல் தான் கருணையே இல்லாத அந்த இண்டஸ்ட்ரியில் ஒருத்தன் அவனுக்கு நிச்சயம் அரசியல் தெரிஞ்சிருக்க வேண்டும். சேவை செய்ய வேண்டுமென்றால் சினிமாவில் எந்த கோட் பாதரும் இல்லாமல் 18 வருஷம் சமாளித்து நிக்க சாதிக்க நானும் எப்பவோ அரசியலில் இறங்கிவிட்டேன் பொஸ்.

எல்லா இடங்களிலும் அரசியல் இருக்கு அரசியல் கல்லூரிகளில், பல்கலைக்கழகங்கள், அலுவலகங்கள் இல்லாத ஒரு இடம் கூட இந்த உலகத்தில் இல்லை.

அரசியல் இல்லாத மனிதன் யாரும் இந்த உலகத்தில் கிடையாது. அஜித் மட்டும் அரசியலில் இல்லாமல் இருக்க முடியுமா என்ன? குறும்பாகச் சிரிக்கிறார் அஜித்.!

# பொன்சேகாவின் நிதிக்கொடுக்கல் வாங்கல் தொடர்பில் சட்டமா அதிபரிடம் புலனாய்வுப்பிரிவு ஆலோசனை

(கொழும்பு)

ஜனநாயக் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஜனரல் சரத் பொன்சேகாவின் நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் சட்டமா அதிபரிடம் புலனாய்வுப்பிரிவு ஆலோசனை கோரியுள்ளது.

அசோகா திலகரட்ண மற்றும் சொலிஸ் பணிப்பாளர் சஞ்சீவ் குமார் ஆகியோர் 75 மில்லியன் ரூபாவினை சரத்பொன்சேகாவிடம் பெற்றுக்கொண்டு வங்கியில் வைப்புச் செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தப்பணம் எவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்டது என்பது தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

குறிப்பாக ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரங்களுக்காக பயன்படுத்தப்பட்டதா அல்லது அரசாங்கத்தை ஆட்சி கவிழ்க்கும் சூழ்ச்சித் திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்டதா என விசாரணை நடத்தப்படுகிறது. (2-6)

# செட்டிக்குளம் மக்களின் நன்மை கருதி இரத்ததானம் செய்யுமாறு கோரிக்கை

(கொழும்பு)

வவுனியா, செட்டிக்குளம் வைத்தியசாலையில் இரத்தவங்கியில் இரத்தத்திற்கு பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாகவும் இதனை போக்கும் வகையில் எதிர்வரும் 18ஆம் திகதி இரத்தானம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த இரத்த வங்கியில் பொறுப்பதிகாரியான டாக்டர் திருமதி எஸ். சாயிராம் தெரிவித்துள்ளார்.

இந்த வைத்தியசாலைக்கு இடம்பெயர்ந்தோருக்கான முகாம்களில் உள்ளவர்கள் அதிகமாக சிகிச்சைக்காக வருவதாகவும் அவர் களில் பலருக்கு இரத்தம் ஏற்றவேண்டிய தேவை இருப்பதாகவும் சாதாரணமாக ஒருவரின் இரத்தத்தில் செங்குருதித்துணிக்கையின் அடர்த்தி அளவு 12 ஆக இருக்க வேண்டும். எனினும் இங்கு வருகின்ற பல நோயாளர்களின் செங்குருதித்துணிக்கையின் அடர்த்தி அளவு 6, 7 ஆகவே இருக்கின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இடைத்தங்கல் முகாம்களில் உள்ளவர்களும் வெளியில் உள்ளவர்களும் வறுமை வசதியின்மை காரணமாக போசாக்கான உணவை உட்கொள்ள முடியாது இருப்பதே இதற்குக் காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நோயாளர்களின் நன்மை கருதி செட்டிக்குளம் வைத்தியசாலை இரத்த வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த இரத்தானத்தில் கலந்துகொண்டு இரத்தானம் செய்யுமாறு இளைஞர், யுவதிகள் மற்றும் பொது மக்களிடம் கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது. (2-6)

## கிழக்கு மாகாணத்தில்

# கடும்வரட்சியினால் வற்றிவரும் ஏரிகள், நீர்ப்பாசனக் குளங்கள்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் கடந்த சில மாதங்களாக நிலவி வரும் கடுமையான வரட்சி காரணமாக நீர்ப்பாசன குளங்கள் உட்பட சாதாரண குளங்கள், ஏரிகள் , வாவி உட்பட நீர் நிலைகள் வற்றி வருகின்றன. இதனால் சிறு போக நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ள முடியாத நிலைமை உருவாகியுள்ளது.

தொடரும் கடும் வெயில் காரணமாக குடிநீருக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தினமும் 36 பாகையில் வெப்பம் நிலவுவதால் சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். பல்வேறு நோய்களும் பரவி வருகின்றன.

இவ் வரட்சி இன்னும் சில மாதங்களுக்கு தொடரும் என வானிலை அவதான நிலைய அதிகாரி தெரிவித்தார்.

கடுமையான வெப்பத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மீள்குடியேறிய கொக்கொட்டிச்சோலை, வாகரை, வவுணதீவு வெல்லாவெளி, செயலகப் பிரிவுகளில் வாழும் மக்கள் கடுமையான கஷ்டங்களை எதிர்கொண்டுள்ளனர்.

நிரந்தர வீடுகள் அமைத்துக்கொடுக்காமையால் தற்காலிக குடிசைகளில் வாழும் இவர்கள் குடிசைகளின் தகரங்கள் பகல் நேரங்களில் வெப்பமடைவதால் குடிசைகளுக்குள் இருக்க முடியாமல் அவதியுறுகின்றனர்.

சன அடர்த்தி அதிகம் மிக்க காத்தான்குடி பிரதேசத்து மக்களும் உஷ்ணம் காரணமாக பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். (2-6)

# மூன்று ஆங்கில எழுத்துக்களுடன் புதிய வாகனங்கள் பதிவு

(கொழும்பு)

புதிய வாகனங்களைப் பதிவு செய்யும் போது மூன்று ஆங்கில ஆங்கில எழுத்துக்களைக் கொண்ட இலக்கத்தினை அறிமுகஞ் செய்வதற்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த 13ஆம் திகதி நாரஹேன்பிட்டியிலுள்ள மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்திற்கு விஜயம் செய்திருந்த போக்குவரத்து அமைச்சர் குமாரவெல்கம இப் புதியம் திட்டம் தொடர்பில் ஆராய்ந்துள்ளார். (2-6)

# அடுத்த ஆண்டுவரையில் ரணிலே ஐ.தே.கவின் தலைமைப்பொறுப்பில் நீடிக்க வேண்டும்

## சிரேஸ்ட உறுப்பினர்கள் கோரிக்கை

(கொழும்பு)

அடுத்த ஆண்டு வரையிலும் ரணில் விக்கிரமசிங்கவே ஐக்கிய தேசிய கட்சித் தலைமைப் பொறுப்பில் நீடிக்க வேண்டுமென சிரேஸ்ட உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முன்னாள் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையிலான ஆறு பேர் அடங்கிய குழுவினர் கட்சி மறுசீரமைப்பு தொடர்பில் ஆய்வு நடத்தி வருகின்றனர்.போதியளவு அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளும் வரையில் சஜித் பிரேமதாஸா கட்சியின் பிரதித் தலைவராக செயற்பட வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதற்கமைய 2012ஆம் ஆண்டு கட்சியின் ஆண்டுப்பொதுக் கூட்டம் வரையில் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பொறுப்பை வகிக்க வேண்டுமென தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# 108 மில்லியன் அமெ. டொலர் நிதி உதவியை இலங்கைக்கு வழங்க உலகவங்கி திட்டம்

(கொழும்பு)

இலங்கைக்கு உலக வங்கி 108 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவிகளை வழங்கத் தீர்மானித்துள்ளது.உட்கட்டுமான வசதிகளை மேம்படுத்தல், கல்வி வளர்ச்சி, சுற்றுலாத்துறை ஆகிய மூன்று முக்கிய அபிவிருத்தித் திட்டங்களுக்காக இந்த நிதி உதவி வழங்கப்படவுள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய வடக்கு -கிழக்கு உட்கட்டுமான அபிவிருத்திப் பணிக்காக 50 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் உயர் கல்வி வளர்ச்சிக்காக 40 மில்லியன் அமெரிக்க டொலர்களும் சுற்றுலா அபிவிருத்திப் பணிகளுக்காக 18 மில்லியன் அமெரிக்க டொலர்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என கூறப்பட்டுள்ளது.

குறைந்த வருமானம் ஈட்டும் நாடு என்ற நிலையிலிருந்து இலங்கை மத்திய வருமானம் பெறும் நாடாக விருத்தி அடைந்து வருவதாக உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் அநேகமான பட்டதாரிகள் தனியார் துறை நிறுவனங்களில் கடமையாற்றுவதற்கு தகுதியற்ற நிலையில் காணப்படுவதாகவும் குறிப்பாக போதியளவு ஆங்கில மொழி மற்றும் தகவல் தொழில்நுட்ப அறிவின்றி பட்டதாரிகள் தொழில் சந்தையில் தங்களை சரியான முறையில் வெளிப்படுத்த முடியாத நிலை காணப் படுவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

மேலும் வடக்கு -கிழக்கு உயர்கல்வி நிறுவனங்களின் வளங்களை விருத்தி செய்வதற்கும் நிதி உதவி வழங்கப்படவுள்ளதாக உலக வங்கி அறிவித்துள்ளது. (2-6)

Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower

19 வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
May 2010 to Oct 2010
தமிழ் மொழி மூலம்

- தபால் மூலம் -

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவளை மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48


விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.05.2010

# தேசியப் பட்டியல் ஆசனம் குறித்து இனியும் பேச்சுவார்த்தை நடத்தப்பேவதில்லை மனோகணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)



தேசியப் பட்டியல் ஆசனம் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியுடன் இனியும் பேச்சுவார்த்தை நடத்தப் போவதில்லை என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகசேணன் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிமசிங்கவுடன் எந்தவிதமான சந்திப்புக்களையும் நடத்துவதில் அர்த்தமில்லை என அவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு கடிதம் ஊடக அறிவித்துள்ளார்.

கட்சியையும் தமிழ் மக்களையும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைமை ஏமாற்றியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவிற்கு விஜயம் செய்வதற்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்கவினால் மனோகணேசனுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திற்கு பதிலளிக்கும் வகையில் இந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதில் தேர்தல் நோக்கத்திற்காக மட்டும் ஐக்கிய தேசிய முன்னணி உருவாக்கப்படவில்லை எனவும் பொதுத் தேர்தலின் போது ஐக்கிய தேசியக்கட்சி சுயலாப நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் ஐக்கிய தேசியக்கட்சியின் அண்மைய நடவடிக்கைகளை தமது கட்சி உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் எதிர்வரும் வாரமளவில் தமது கட்சியின் நிலைப்பாடு குறித்து பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்படும் எனவும் கெரிவித்துள்ளார். (2-6)

# இவ்வாரத்தில் மேலும் 1200 பேரை மீள் குடியமர்த்த நடவடிக்கை

## கிளி. அரசாங்க அதிபர் தகவல்


(கொழும்பு)



மேலும் ஆயிரத்து 200 பேரை இவ்வாரத்தில் மீள் குடியமர்த்த நடவடிக்கை எடுத்துள்ளதாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு நிவாரணக் கிராமங்களில் தங்கியிருப்போரை மீள் குடியேற்றும் பணிகளை துரிதப்படுத்தியுள்ளதாகவும் அதற்கிணங்க இவ்வார இறுதிக்குள் மேலும் ஆயிரத்து 200 பேரை மீள் குடியேற்ற உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இவ்வாரத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை மற்றும் கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மேற்படி குடும்பங்கள் மீள் குடியமர்த்தப்படும் எனவும் கடந்த புதன் கிழமை 540 பேர் மீள் குடியேற்றப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் மீள்குடியேற்றப்படும் குடும்பங்களுக்குத் தற்காலிக வீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டு வருவதாகவும் படிப்படியாக அனைவருக்கும் நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அத்துடன் மீள் குடியேற்றபட்ட மக்களுக்கான உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-6)



பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன், முதலீட்டுச் சபையின் தலைவராக புதிதாக நியமிக்கப்பட்ட சிலோன் றொபாக்கோ கம்பனியின் தலைவர் ஜே.டி. பண்டாரநாயக்க மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ள எட்னா ஹோல்டிங் தலைவர் எஸ்கான டி சில்வா ,ஈ–விஸ் தலைவர் சஞ்சீவ விக்கிரமநாயக்க மற்றும் சட்டத்தரணி அநுர ஜயசிங்க ஆகியோர் கலந்துரையாடுவதை முதலாவது படத்திலும்,முதலீட்டுச் சபைத் தலைவர் பண்டாரநாயக்க ,முதலீட்டுச் சபை பிரதிப் பணிப்பாளர் நாயகம் (முதலீடு) ஏ.எம்.சி.குலசேகர ஆகியோர் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிப்பதை இரண்டாவது படத்திலு ம்,நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சராக டாக்டர் சரத் அமுனுகம கடமைகளை ஆரம்பிப்பதையும் ,அருகில் திறைசேரியின் செயலாளர் நாயகம் டாக்டர் பி.பி. ஜயசுந்தர அவதானிப்பதை மூன்றாவது படத்திலும், சர்வதேச நாணய நிதியத்தின் கொழும்புப் பிரிவின் தலைவர்டாக்டர்பிரைன் அகின்அமைச்சர் சரத் அமுனுகமவைச் சந்திப்பதையும் படங்களில் காணலாம்.

## முதலீட்டு,காப்புறுதி,சுற்றாடல் அதிகார சபைகளுக்கு புதிய தலைவர்கள் நியமனம்

இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகமாக ஜயம்பதி பண்டாரநாயக்க நியமனம் பெற்றுள்ளார்.தனியார் துறையின் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரியான இவர்,சிலோன் றொபாக்கோ கம்பனியின் தலைவராகப் பதவி வகித்துள்ளார்.

இதேவேளை இலங்கை காப்புறுதி சபையின் தலைவராக,பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளராகப் பதவி வகித்து வந்த திருமதி இந்திராணி சுகதாச நியமிக்கப்பட்டுள்ளார்.சபையின் தலைவராக இருந்த உதயசிறி காரியவசத்தின் இடத்திற்கேஇவர்நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் புதிய தலைவராக சிரேஷ்ட விரிவுரையாளரான சரித்த ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

# வைப்புக்களாக சேகரிக்கும் பணத்தை இம் மக்களுக்கே கடனாக வழங்கவேண்டும்

## மத்திய வங்கி ஆளுநர் யாழில் வேண்டுகோள்



வைப்புக்களாகச் சேகரிக்கப்படும் பணம் இப் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு கடன் வழங்குவதற்குப் பயன்படுத்தப்படுவதை தயவு செய்து உறுதிசெய்யுங்கள் என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் கேட்டுக்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் சென்றல் இன் வெஸ்ற் அன்ட் பினான்ஸ் லிமிற்டெட்டினை(CIFL)திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு வேண்டுகோள்விடுத்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,நாட்டின் ஏனைய பிரதேசங்களைப்போல வடக்குக் கிழக்கு மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது. இவ்வாறானதொரு நிலையில் இம் மாகாணங்களின் அபிவிருத்திக்குக் கூடியகவனம்செலுத்தப்படும்எனத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் நீண்ட காலமாக சுபீட்சத்தை ஊக்குவிப்பதில் பங்கேற்க முடியவில்லை.நாம் இப் பிரதேசங்களுக்கான சுபீட்சத்தை விரைவுபடுத்த வேண்டும்.இது கடந்த ஒரு ஆண்டில் யாழ்ப்பாணத்திற்கு நான் மேற்கொள்ளும் ஆறாவது விஜயமாகும்.நான் இங்கு விஜயம் செய்தது போல் நாட்டின் எந்தவொரு பகுதிக்கும் விஜயம் செய்யவில்லை.

சுபீட்சத்துக்குமுக்கியமாகத்தேவைப்படும் நிதியை இப் பகுதிக்கு வழங்குவதையும் உறுதிப்படுத்துகிறேன்.

ஒவ்வொரு நாளும் பல புதிய மாற்றங்களைக் காண முடிகின்றது. புதிய கட்டிடங்களை ,புதிய தொழில் முயற்சிகள் ,வீதிகள் திருத்தப் படுதல் ,விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபடுதல்,மீனை ஏனைய பிரதேசங்களுக்கு அனுப்புதல் என பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. மாற்றங்களைக் கண்டு சந்தோசமடைகின்றோம்.ஆனால் நாம் திருப்தி அடையவில்லை.நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கு இணையாக இப் பிரதேசத்துக்கு இன்னும் கூடுதலான பணியை செய்ய விரும்புகிறோம்.

இது இங்கு திறக்கப்படும் மூன்றாவது நிதிக் கம்பனியாகும். பல வங்கிக் கிளைகள் திறக்கப்பட்டுள்ளன. இது போதுமானதா?என்று இவர்கள் கேட்பார்கள்.ஆம் இது போதாது. இது ஒரு ஆரம்பம் மாத்திரமே.நாம் முதலீடுகள் வருவதைக் காண்கின்றோம். இப்பணிமனையில் 6 பேர் தொழில் புரிகிறார்கள். இப் பணிமனை இங்கு வராவிடின் அந்த ஆறுபேரும் தொழிலின்றி இருந்திருப்பார்கள். ஒவ்வொரு ஆறு பேரும் செயல் வடிவம் பெறுகின்றனர். ஒவ்வொரு துளியும் செயல்வடிவம் பெறுகின்றது. இதையே நாம் செய்ய விரும்புகின்றோம். ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக இருக்க விரும்புகின்றோம்.

வெளியிலிருந்து வரும் மக்கள் இதை அபிவிருத்தி செய்து இறுதியில் இப் பிரதேசத்திலுள்ள மக்கள் இதைப் பொறுப்பேற்பார்கள். இறுதியில் இம் மக்கள் தொழில் நிலை மற்றும் தொழில் முயற்சியாளர்கள் ஆகிய பதவிகளைஎடுப்பார்கள்எனத்தெரிவித்தார்.




## வர்த்தக செய்தித் துளிகள்

### எச்.என்.பியின் காலாண்டு வருமானம் 1193 மில்லியன்

எச்.என்.பி.2010 இல் முதல் காலாண்டில் வரிக்கு முந்திய இலாபமாக 1193 மில்லியன் ரூபாயை ஈட்டியுள்ளது. இது 2009இல் இதே காலப்பகுதியில் 1175மில்லியனாகக் காணப்பட்டது எனவும் 2009 டிசம்பரில் 170.25 ரூபாயாகக் காணப்பட்ட ஒரு பங்கின் விலை 2010 இன் முதல் காலாண்டு முடிபில் 188.25 ரூபாயாகக் காணப்படுவதாகவும் வங்கியின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### டி.எப்.சி.சி.இலாபம் ரூ.268 மில்லியன்

டி.எப்.சி.சி வர்தன வங்கியின் வரிக்கு முந்தைய இலாபம் 780 மில்லியன் ரூபாயாகவும், வரிக்கு பிந்திய இலாபம் 268 மில்லியன் ரூபாயாக காணப்படுவதாகவும் வங்கியின் மொத்தச் சொத்தானது 26.3 வீதம் அதிகரித்து 31336 மில்லியனாகக் காணப்படுவதாகவும் வங்கியின் நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2010 இல் வங்கி 4 கிளைகளை திறக்க திட்டமிட்டுள்தாக வங்கியின் தலைமைநிறைவேற்று அதிகாரி லக்ஷ்மன் சில்வா தெரிவித்துள்ளார்.



ஜூன் 3–5 வரை கொழும்பில் 3 நாள்நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள சர்வதேச இந்திய திரைப்பட அக்கடமியின் (IIFA) விருது வழங்கும் விழாவின் விளம்பரத் தூதராக நியமிக்கப்பட்ட நடிகர் அமிதாப்பச்சன் கலந்துகொள்ளாமையை அடுத்து புதிய தூதர்களாக நியமிக்கப்பட்ட நடிகர்கள் சல்மான் கான் ,ரிடேஷ் டேஸ்முக், நடிகை லாராதத்தா மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன ஆகியோர் மும்பையில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற ஊடகமாநாட்டில் கலந்து கொண்டதை படத்தில் காணலாம். இவ் விருது நிகழ்வு 4025 மில்லியன் ரூபாயை ஈட்டித்தரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 112.94 | 114.58 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 164.52 | 168.00 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 140.97 | 144.44 |
| சுவிஸ் பிராங் | 100.26 | 103.43 |
| கனேடிய டொலர் | 109.51 | 113.17 |
| அவுஸ்திரேலிய டொலர் | 100.38 | 103.44 |
| சிங்கப்பூர் டொலர் | 81.34 | 83.32 |
| ஜப்பான் யென் | 1.21 | 1.24 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.53 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.94 | |

### தேயிலை ஏற்றுமதி வருமானம் உயர்வு

தேயிலை ஏற்றுமதியின் வருமானம் மார்ச் மாதம் வரையான காலப் பகுதியில் உயர்ந்துள்ளதாக தரகர்கள் தெரிவித்துள்ளனர். 2010இன் முதல் காலாண்டுப்பகுதியில்தேயிலை ஏற்றுமதியில்34.9பில்லியன்ரூபாயை வருமானமாகப் பெற்றுள்ளது.இது கடந்தாண்டு26.6பில்லியனாகவிருந்தது.

### கச்சா எண்ணெய் விலை சரிவு



ஆசியச் சந்தையில்கச்சாஎண்ணெய் விலைபரல்ஒன்றுக்கு 75டொலரை நெருங்குகின்றது. எண்ணெயின் ஜூன் மாத விநியோகம் 27 வீதம் குறைந்துள்ளதால் எண்ணெய் விலையும் குறைந்துள்ளது. அமெரிக்கப் பொருளாதாரம் சீரடைந்து வருவதால் கச்சா எண்ணெயின் தேவை எதிர்பார்த்ததை விட கடந்த சில மாதங்களாக அதிகரித்துள்ளது. ஆனால் பாரிஸை சேர்ந்த நிறுவனம் ஒன்று இந்த ஆண்டு தேவை குறைவாகவே காணப்படும் எனத் தெரிவித் துள்ளது.

## 3 வார ஆலோசனைக்கு ஊதியம் ரூ.3.95 கோடி




(நியூயோர்க்) சிட்டி குழுமத்தின் இயக்குநர் ஒருவருக்கு, 3 வார ஆலோசனைக்காகரூ.3.95 கோடிதரப்படுகிறது.

அமெரிக்காவைச் சேர்ந்த சிட்டி வங்கிக் குழுமத்தின் இயக்குநர்களில் ஒருவர் ராபர்ட் ஜோஸ்.இவர் கடந்த ஆண்டின் ஓகஸ்ட்முதல் டிசம்பர்வரை கம்பனியின் வளர்ச்சிக்கு அளித்த ஆலோசனைகளுக்காக ரூ.112.5 லட்சம் ஊதியமாகப் பெற்றார். இதை மே 7–ம் திகதி அவர் தாக்கல் செய்த வருமானவரி விபரம் தெரிவிக்கின்றது.

இந்நிலையில் இந்த ஆண்டில் அவரது ஆலோசனைப் பணிக்காக ரூ.3.95 கோடி ஊதியமாக அளிக்க சிட்டி குழுமம் ஒப்புக்கொண்டுள்ளது. அமெரிக்க பங்குப் பரிமாற்ற ஆணையத்திடம் சிட்டி குழுமம் அளித்த விபரங்களில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஊதியத்தைப் பெற ராபர்ட், இந்த ஆண்டு முழுவதிலும் 3 வாரங்கள்மட்டுமேபணியாற்றினால்போதும். இதற்கான கடிதத்தை சிட்டி குழுமத் துணைத்தலைவர் லெவிஸ் காடென் கையெழுத்திட்டு அளித்துள்ளார். 'கம்பனிமுன்னேற்றத்துக்கான ஆலோசனைகளை ஆண்டுக்கு சுமார் 3 வாரங்கள் அளிப்பீர்கள் என எதிர்பார்க்கின்றோம்' என்றுஅதில்கூறப்பட்டுள்ளது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/ குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 4252.44 | 9.77 |
| மிலங்கா விலைச்சுட்டி | 4798.87 | 24.61 |
| புரள்வு (ரூபா.மில்லியன்) | 1322.89 | |

***உயர்வடைந்த பங்குகள்*** :டயலொக் ரெலிகொம்,அற்கின் ஸ்பென்ஸ், சிலோன் தியேட்டர்ஸ் ,ஜோன் கீல்ஸ் ஹோட்டல்ஸ் ,ஏசியன் ஹோட்டல்ஸ்.

***சரிவைக் காட்டிய பங்குகள்***: சிறிலங்கா ரெலிகொம்,லங்கா ஐ.ஓ.சி.,சிலோன் கார்டியன் இன்வெஸ்மன்ட் ,சிலோன் றொபாக்கோ ,ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்.

கு.முருகதாஸ்

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### பிடிக்கவில்லையா?

பிடிக்கவில்லையா?
பிழை சொல்லாதே
பழியை என்மேல்போட்டு
பதுங்கிவிட்டாயே?

விரும்பி விரும்பி அழைத்தேன்
விலகி நின்றாய்
நினைவில்லை
முற்றாய் விலகுவாய் என்று
தூரநின்றாய் இதற்குத்தானோ?

தினமும் இழப்பது நான் தானே
நீ அல்லவே.
எவ்வளவுதான் பிடிப்பது
நீதான் பிடிவாதக்காரனோ?
பிடி தளர்த்திய
பிடிவாரக்காரி நானும்...

பிழையாது சேரவேண்டும்
பிறப்பிலிருந்து நினைத்தேன்
பிறப்பறுத்து விட்டேன்

ம.இன்பரூபி
வல்வெட்டி •

### இழத்தலின் பாடல்

மீண்டும் வந்துள்ளோம்
எம் தாய்மனைக்கு
மீளக் குடியமர
சிலர் இல்லை இன்று எம்மோடு
பூச்சியத்தில் இருந்து எம் வாழ்வு
தொடங்கிடினும் நம்பிக்கை மட்டும்
இழக்கவில்லை நாம்
வலிகளை வடுக்களை
மறக்கவில்லை
அதற்காய் புது வழிகளை
ஏற்கவும் மறுக்கவில்லை

புலோலியூர்
வேல்நந்தன்



### பஞ்சவர்ணம்

பஞ்ச வர்ணத்தின்
வனப்பு வருடியது
நெஞ்சினை...
வர்ணங்களின் வசீகரிப்பால்
வசீகரிக்கப்பட்டே வதனமும்
மலர்ந்தது...
பஞ்ச வர்ணத்தின்
அழகினைக் கண்டே
உள்ளமும் ஆனந்தத்தில்
சிறகடித்துப் பறந்தது
ஆனால்...
சிறகடித்துப் பறக்க
முடியவில்லையே
பஞ்ச வர்ணத்தினை
சுமந்து வந்த
கிளியினாலே...!

பொன்.சுகந்தன்

### முள்ளோடு வேலிபோட்டு

மண்ணோடு சாக வழியில்லை
விண்ணோடு போக வழியில்லை
கண்ணோடு நீர் கசிய...
முள்ளோடு வேலிபோட்டு
தள்ளாடுகிற கடுகதியாய்...
அகதிகளோடு யுகமாய்
அலைகிறது... நம்
இனத்தின் சுவடுகள்...

பூலக்சி
கல்லுவம்

### நட்பு

கனியதைத் தாங்கும் மலர்களில் தானே
பனியதன் தூறல்கள்
இமையது தாங்கும் விழிகளில் தானே
பார்வையின் சிதறல்கள்
நம் மனதினில் உதித்த நட்பில் தானே
அன்பின் இனிய பாலங்கள்
என்றும் தொடர்கின்ற
இனிய ரயில்ப்பயணமாக...

சி.ராதிகா.
பொலிகண்டி •

### இமயம் தொட...

எதிர்கொள்ளப் பழகு
சுவரில் எறிந்த பந்து
உன் எதிரே வரும்
இயல்பாய் – அதை
மீண்டும் எதிர்கொள்
எதிர் கொள்வதே
வாழ்க்கை!


மாவை. நா.கஜேந்திரா

### மறுபடியும்

பாலைவனமாய் இருந்த
என் வாழ்க்கை
வசந்த காலத்தின்
வாசம் சிந்தும்
வண்ணச் சோலையாய்
மாறியிருந்தது
மழைபோல் நீ வந்ததினா!
இப்போ மறுபடியும் என்
வாழ்க்கை பாலைவனமானது
வானவில்லைப் போல்
மாயமாய் நீ மறைந்து
போனதினால்!

செல்வி க.அருவி
புத்தூர் வடக்கு

## மௌனத்தின் தேடல் – 19



### மாற்றம்

சொந்த நாட்டில்
அகதியென்றும் அடிமையென்றும்
அவலப்படும் எம் நிலை
பற்றையைக் குடைந்து
வீடாக்கி பகலிரவாய் படுத்துறங்கி
தொடரும் இடப்பெயர்வுகளால்
தொலையும் எங்கள் வாழ்வு
மாறிவரும் நிலை தோன்றிட வேண்டும்!

எம்.சந்திரகலா
யோகபுரம் •

இடம்பெயர்வு
இதயங்களின் பெயர்வு
வன்னியில் மட்டுமல்ல
தமிழரின் வாழ்வியலில்
யுத்தம் முடிந்தபின்பும்
தொடரும் பயணம்

து.துவாரகா
சங்கானை •

ஊர் ஊராய்ச் சென்று
குடியிருப்புத்தேடி
அகதிபோல வாழும் வாழ்வு
எப்போது தீரும்
என ஏங்கும் மனங்களே
எப்படியானாலும் இறுதியில்
முடிவு கிடைக்கும்

ரா.சுமித்திரா
நவாலி •

### இழந்தவைபோக

ஏக்கப் பெருமூச்சில் இமை மூட
மறுக்கும் இரவுகள்
எறிகணை வீச்சில் பிணமாக விழும்
உடலங்கள்
இழந்தவை போக இருப்பதைச் சுமந்து
இடம்மாறும் உறவுகள்

சந்நிதி பிருந்தன்

### மீள் குடியமர்வு

அண்டமே அதிர்ந்திட்ட
அழிவுகள் தொடர்ந்திட்ட
அன்றைய இடப்பெயர்வா?
இன்றேல்
ஆலயம் அழிந்திட்ட
அடையாளம் சிதறிட்ட
மண்ணினில் மறுபடியும்
குடியமர்வா?

கி.சரண்ராஜ்
கொக்குவில் இந்துக்கல்லூரி

### விடியலைக் காண்பரோ

வண்டிலிற் பொருட் சுமையும்
மனதினில் வேதனைச் சுமையோடு
உண்டுறங்க இடம்தேடி ஓடும்
இந்தக் கதியற்ற மனிதங்கள்
தன்பூமி தன்னுரிமை என்றிங்கு
தனித்துவம் செழிக்கும்
செம்மைதனை
வென்றாடி மகிழ்ந்திருக்கும்
காலமதன் விடியலை
காண்பரோ பராபரமே

அல்வையூர்
சி.சிவநேசன்

### எப்போது முடியும் இப்பயணம்

இவர்களின் பயணம்
உல்லாசமான சுற்றுலாவுக்கு அல்ல
சோகமான வாழ்வை அனுபவிக்கவே
வாழ்வியலில் சகல வேதனைகளையும்
ஒரேநேரத்தில் அனுபவித்த – இவ்
உத்தமர்களின் சோகமான சுற்றுலா
காவிச்சென்ற பொருட்களை மட்டுமல்ல
கூடிக்குலாவிய உறவுகளையும் தான்
விட்டுவந்தார்கள்...எனினும்
இவர்களின் சுற்றுலா இன்னும்
ஓய்வதாய்த் தெரியவில்லை...

இ.கருணாகரன்
யாழ்ப்பாணம் •

### இடம்பெயர்வு

வாழ்விடங்களை விட்டு
இடம்பெயர்ந்து நகர்வது...
வண்டி மட்டுமல்ல வன்முறையால்
வழிமாறிப்போன
வாழ்க்கையும் தான்

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய் •

### பயணம்

கடல் அள்ளிச் சென்றதை
வெண் நுரை
தரை தள்ளிவிடும்
கூடிழந்த பறவைகள்
மீண்டும்...
கூடுதேடி போவது போல
வீடுநோக்கிய பயணம்

கலைஞானி
பண்டத்தரிப்பு

### தெருவெங்கும்

தூக்கம் சுமந்த இரவுகள்
மரணம் சுமந்த எறிகணைகள்
ஏக்கம் சுமந்த நெஞ்சங்கள்
வாழ்வின்
தேட்டம் சுமந்து தெருவெங்கும்
அலைகின்றனவோ?

த.கஜா

### அன்றும் இன்றும்

ஓடிய ஓட்டங்களால்
எம் மனதில் வேதனைகள்
அன்றைய நினைவுகளால்
தடம்புரள வைக்கிறது
கொட்டும் வெய்யிலும்
கொடுங்கனல் எறிகணையும்
மிச்சம் விடாமல்
எம்மிடங்களை அழித்து
குருதியாறு பெருக்கெடுத்தோட
ஓடிய நாம்
இன்று புனர்வாழ்வு நகரத்தினுள்
அகப்பட்டதேன்

வே.அகிலேஸ்வரன்
மருதங்கேணி •

### தலைவிதி

பாருங்கோ,
பாருங்கோ,
நன்றாய் தெரியுதா!
தமிழனாகப்
பிறந்ததால்
எங்கள் தலைவிதி
அட என்னபாவம்
செய்தோமோ
புமித்தாயே!

சி.கோசலா
நாவலர்வீதி •

## சங்குநாதம்

## மௌனத்தின் தேடல்- 20



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 21.05.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# பொன்னின் பெருமையைப் போற்றிடும் அட்சய திருதியைத் திருநாள் மகத்துவம்



சித்திரை மாதத்துப் பூர்வபட்சத் திருதியைத் தினத்தை "அட்சய திருதியை" எனச் சிறப்பாகப் பொன் வாங்கும் ஒரு நன்நாளாக மக்கள் கொண்டாடுகின்றார்கள்.

இந்த நாள் இவ்வருடம் சித்திரை மாதத்திலே இரண்டு அமாவாசைத் திதிவந்ததனால் பின்வந்த அமாவாசையை அடுத்துவரும் திருதியைத் திதியானது வைகாசி மாதத்திலே அட்சய திருதியையாகக் கொள்ளப்படுகின்றது.

அட்சய திருதியைத் தினத்திலே ஒரு குண்டுமணியளவு தங்கமோ, வெள்ளியோ வாங்கினால் அது மக்களுடைய வாழ்விற்குறையாத செல்வத்தையும் மனக்கிலேசம், துன்பம், அமைதிக்குறைவு என்பவற்றைப் போக்கிச் சுபீட்சமான நல்லாண்டாக அந்த ஆண்டு அமையும் எனவும் பெரியோர் சிறப்பித்துள்ளனர்.

''அட்சய'' எனும் சொல் எப்போ.தும் குறையாதது எனவும், அட்சய பாத்திரம் என்பது அள்ள அள்ளக் குறையாத நிறைவுடையது என்றும் கூறுவார்கள்.

அட்சய திருதியை நன் நாளிலே தேவலோகத்தில் நடைபெற்ற ருத்திர கல்யாணப் பெருவிழாவிலே முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் விருந்து பரிமா றுவதற்காக அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரத்தை அரியும், சிவனும் சேர்ந்து படைத்து அரிசிவ சொருபமாக இல்லையென்னாது எல்லோருக்கும் விருந்து படைத்து அருளினை சிறப்பாக கொள்ளப்படுகின்றது.

**"அட்சயதிருதியை தினத்தில் எந்தச் செயலை செய்தாலும் நமக்கு வெற்றி கிடைக்கிறது. தொட்ட காரியம் துளிர் விடும் நாளாகவே அதை கருதலாம்."**

தேவலோகத்திலே அள்ள அள்ளக் குறையாத அட்சயபாத்திரம் தெய்வீக சக்திபெற்று விளங்கியமை போலப் பூவுலக மக்களும் வாழ்வில் பயனையடைவேண்டியே தேவர்கள் இத்தினத்தைப் பக்தி பூர்வமான நம்பிக்கைக்குரிய நன்நாளாகச் செயற்பட வழி வகுத்தனர்.

இந்த நல்ல நாளிலே எந்தவொரு நற்காரியங்கள் செய்தாலும் அது நிறைவாகவும் நலம் பல தருவதாகவும் அமையும். தான தர்மங்கள் செய்தால் அதன் பலனாக மக்களுக்குப் புண்ணிய வாழ்வு வளர்ந்து கொண்டிருக்கும். நாம் எந்தப் பொருளை வழங்கினாலும் அது பெரும் பலனும் நிறைவும் தரும்.

"பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை.

அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை."


எனும் வள்ளுவப் பெருந்தகையார் கூற்றுப் படி இவ்வுலகோர் பெரிதாக

## இன்று அட்சய திருதியை திருநாள்

மதிக்கும் பொன்னையும் அதன் பெருமையையும் எடுத்துக் காட்டுவதாகவும் இதனை மதிக்கும் மக்கள் அருள் உடையோராக வாழ்ந்தாலே நற்பேறடையலாம் என்பதையும் உணர்த்துவதாகவே "அட்சய திருதியை" கொண்டாடப் படுகின்றது.

தேவலோகத்தில் தேவர்கள் எல்லோரும் திருப்தியடையும் விதத்தில் அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரத்தினால் மகிழ்வடைந்தது போல இப்பூவுகினரும் குறைவற்ற நல்வாழ்வு வாழ இத்தினத்திலே அறப்பணிகள் செய்வதன் மூலம் எல்லோரும் நல்வாழ்வு வாழ இத்தகு நன் நாள்களைக் கொண்டாட வேண்டும்.

இன்று அட்சய திருதியை பொன்னில் மயங்கிக் கிடக்கும் மண்ணுலகோர் பொன் வாங்கும் நாளாகவே கொண்டாடுகிறார்கள். ஒரு குண்டுமணி பொன்னாவது வாங்கினால் அது பெருநிறைவாகச் சேரும் என்பதைக் கருத்திற் கொண்டே நகைக்கடை



களிற் போய் முண்டியடிக்கின்றனர். அட்சயதிருதியை என்பது தங்கம் வாங்கும் தினம் என்றே பலரும் செயற்படுகின்றனர்.

மக்களுடைய இந்த மனநிலை மாறி நல்லன செய்யும் நன்நாள். நாம் செய்யும் நல்ல கருமங்களே நம்மை நல்லபடி என்றும் நிறைவுடன் வாழ வைக்கும் என்ற மன உறுதியை ஏற்படுத்த திட சங்கற்பம் கொள்ள வேண்டும்.

அறத்தால் வருவதே இன்பம் அறமெனப் பட்டதே இல்வாழ்க்கை என்பதை எல்லோரும் ஆர்வத்துடன் கடைப்பிடிக்க வேண்டும் என்பதையே அட்சய திருதியை உணர்த்துகின்றது எனும் உண்மைத்தத்துவத்தையும் அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரத்தின் சிறப்பையும் அதனால் செய்யப்படும் அறப்பணியையும் நன்குணர்ந்து வாழ்வில் நல்லனநாடி அல்லன தவிர்ப்போமாக.

**நீர்வைமணி**


# இன்று என்ன செய்ய வேண்டும்?



அட்சய திருதியை நாளில் சூரிய உதயத்தின் போதிருந்தே விரதமாக இருக்க வேண்டும். பிற்பகலில் எண்ணெய் ஸ்நானம் செய்து முன்னோர்களை எண்ணி தர்ப்பணம் செய்ய வேண்டும். பிதிர்களின் ஆசியை இதன் மூலம் பெறலாம். ஏழை எளியமக்களுக்கு என்ன தேவையோ அதை அறிந்து கொடுத்து உதவி செய்தால் சுக போகமான வாழ்க்கை அமையும்.

அரிசியை தானம் செய்தால் ஆயுள் நீடிக்கும். விபத்துக்களில் இருந்து தப்பிக்க இயலும். இனிப்பு பொருள்களை தானம் செய்தால் திருமணத்தடை அகலும்.

அன்னதானத்தை நேரடியாகத் தன் கரங்களால் செய்தால் வாழ்க்கை முழுவதும் உணவுப் பஞ்சம் தீரும். இவை மட்டுமல்ல ஓரறிவு, ஈரறிவு, மூவறிவு, நான்கறிவு, ஐந்தறிவு, ஆறறிவு உயிரினங்கள் வரை முடிந்தவரை திருப்திபடுத்தினால் வாழ்க்கை முழுவதும் வசந்தமாக இருக்கும்.



**அட்சய திரிதியை திதியில் 27 நட்சத்திரக்காரர்களும் வணங்க வேண்டிய தெய்வங்களும் வாங்க வேண்டிய பொருட்களும்.**

| நட்சத்திரம் | தெய்வம் | பொருள் |
|---|---|---|
| 1.அச்சுவினி | விநாயகர்-சித்திரகுப்தன் | இடம், பூமி, விவசாயப் பொருள் |
| 2.பரணி | வல்லபகணபதி -விஷ்ணு | ஆடை, ஆபரணம் |
| 3. கார்த்திகை | சூரியன்- முருகப்பெருமான் | வீட்டு உபயோகப்பொருள், மின்சாதனம் |
| 4.ரோகிணி | சாந்தரூப அம்பிகை- கண்ணன் | இரவு நேரத்தில் நூதன பொருட்கள் |
| 5.மிருகசீரிடம் | முருகப் பெருமான் | கட்டடப்பொருள் ,உணவுப் பொருட்கள் |
| 6.திருவாதிரை | சிவபெருமான், துர்க்கை | அரசுவழி ஒப்பந்தம், விலை உயர்ந்தவை |
| 7.புனர்பூசம் | மனித தெய்வங்கள், ராமர் | புனிதமான பொருட்கள் |
| 8.பூசம் | பெருமாள், லட்சுமி, சனீஸ்வரர் | இரும்பு, இயந்திரம், தண்ணீர் வஸ்து |
| 9.ஆயிலியம் | விஷ்ணு | கல்விப்பணி, பணமுதலீடு செய்தல் |
| 10.மகம் | விநாயகர் | பல்பொருள் விற்பனையில் ஏதேனும் |
| 11.பூரம் | அம்பிகை | பொன், பொருள் |
| 12.உத்தரம் | சிவன் ,சக்தி | அரசுவழி, புது ஒப்பந்தங்கள் |
| 13அத்தம் | சந்திரன் | வெளிநாடு மற்றும் பயண முயற்சி |
| 14. சித்திரை | முருகன், வள்ளி ,தெய்வானை | மருந்து ,மரம் சம்பந்தமான ஒப்பந்தம் |
| 15.சுவாதி | வக்குப்பாத்தபெண்தெய்வம்/ சரஸ்வதி | புதிய ஒப்பந்தப் பொருட்கள் |
| 16விசாகம் | முருகன் ,வள்ளி, தெய்வானை | பத்திரிகை, கலைப்பொருள், ஆபரணம் |
| 17.அனுஷம் | சனீஸ்வரர் ,அனுமான் | கறுப்பு வண்ணப் பொருள்கள் |
| 18.கேட்டை | குபேரலட்சுமி | ஆடை, பாடசாலை பொருட்கள் |
| 19.மூலம் | விநாயகர் | குடும்ப உபயோகப் பொருள்கள் |
| 20.பூராடம் | சாந்தரூப அம்பிகை | வாகனம், பொன், பொருள் |
| 21.உத்தராடம் | சிவன் ,சக்தி | மின்சாதனங்கள் |
| 22.திருவோணம் | பார்வதி தேவி | வியாபார சம்பந்தமான புது முயற்சி |
| 23.அவிட்டம் | ராஜ அலங்கார முருகன் | இடம் ,பூமி, கூட்டுத் தொழில் முயற்சி |
| 24.சதயம் | துர்க்கை | வீட்டு உபயோகப் பொருள், இரும்பு, இயந்திரம் |
| 25.பூரட்டாதி | தென்முகக் கடவுள் | பாடசாலை பொருட்கள் |
| 26.உத்திரட்டாதி | விநாயகர், திருமால் | விலை உயர்ந்த பொருள்கள் |
| 27.ரேவதி | திருமால் | நவதானியம், வாசனைப்பொருள். |

# பார்வதி அம்மாளை விரட்டிய கெடுபிடிகள்

# இனி வேண்டாம் இந்தியா

பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாள் விவகாரம், கடந்த இரண்டு வாரங்களாக ஈழத் தமிழர்கள், தமிழ் உணர்வாளர்களிடம் ஒருவித மனக்கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தது. சென்னைக்கு சிகிச்சை பெற வந்த அவரை அதே விமானத்தில் திருப்பி யனுப்பியது.

மத்திய -மாநில அரசுகளின் அனுமதி நிபந்தனைகள் என அடுத்தடுத்து விவகாரங்கள் சூடுபிடிக்க... அவரது சிகிச்சை, விவகாரம் அரசியல் ஆகிவிட்டது...!

இப்போது பார்வதி அம்மாள், தன் சொந்த ஊரான யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் சிகிச்சை பெற்று வருகிறார். பிரபாகரனின் ஊர்க்காரரும், இலங்கைத் தமிழ் தேசிய விடுதலைக் கூட்டமைப்புக் கட்சியின் பொதுச் செயலாளருமான சிவாஜிலிங்கம்தான், பார்வதி அம்மாளை உடனிருந்து கவனித்து வருகிறார். அவரிடம் பேசினோம்.

" பத்தாண்டுகளாகவே பார்வதி அம்மாளுக்கு இரத்த அழுத்தம், நீரிழிவு நோய்கள் இருந்தன. கூடவே வலது பக்கம் முழுவதும் பக்கவாதம். இதே நிலையில்தான், அவர் தமிழகத்தில் இருந்து 2003 ஆம் ஆண்டில் வன்னிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இப்போதும் அதே நோய்களுடன் தான் போராடி, அவதிப்பட்டு வருகிறார்" என்று நம்மிடம் சொன்ன சிவாஜிலிங்கத்திடம் சில கேள்விகளை முன்வைத்தோம்.



**" இந்திய அரசு நிபந்தனை களுடன் சிகிச்சைக்கு அனுமதித்த நேரத்தில் நீங்கள் அவரை இலங் கைக்கு அழைத்துச் சென்று விட்டீர்களே?"**

" இதற்கு விளக்கமாக பதில் சொல்லவேண்டும். மலேசியாவில் தங்கியிருந்த பார்வதி அம்மாளுக்கு அங்கிருந்த இந்தியத்தூதரகம், ஏப்ரல் 15 ஆம் திகதி 6 மாத விசா அளித்தது. ஆனால் 16 ஆம் திகதி சென்னைக்கு வந்த அவரை, அதே விமானத்தில் திருப்பி அனுப்பினர். அங்கு தங்க அவருக்கு விசா இல்லை.

மலேசிய அரசு, விசேட விசா எதுவும் தரவில்லை... ஆனால், மனிதாபிமான அடிப்படையில் " ஸ்பெஷல் பாஸ்' தந்து, 30 நாட்கள் தங்க அனும தித்தனர். மே 17 ஆம் திகதி பாஸ் முடிகிறது.

அதற்குள் அவருக்கு இந்தியா விசா பெறுவதிலும் இழுபறி.... இந்த நிலையில்தான் பார்வதி அம்மாளின் குடும்பத்தார், பிரபாகரனின் அக்கா வினோதினி ஆகியோர் என்னைத் தொடர்பு கொண்டு, " அவரை இலங் கைக்கே அழைத்துச் சென்று விடுங்கள்" என்று கூறினார்கள்.

மே 7 ஆம் திகதியில் இருந்து, 20ஆம் திகதி வரை மலேசிய ஏர்லைன்ஸ் டிக்கெட் கிடைக்க வில்லை.10 ஆம் திகதியன்று மட்டும் ஸ்ரீலங்கன் விமானத்தில் இரண்டு ஸீட் கிடைத்தது. அன்று அங்கிருந்து புறப்பட்டு, இலங்கை நேரப்படி மாலை 5 மணிக்கு இலங்கை வந்ததும் தான், இந்திய அரசின் அனுமதி குறித்த விபரங்கள் எங்களுக்கு இரவில் தெரிவிக்கப்பட்டது"

**"தொடர்ந்து என்ன நடந்தது?"**

" அவரை விமான நிலையத்தில் இருந்து வீல்செயாரில் அழைத்துக் கொண்டு கொழும்பு நகரின் மையப் பகுதியான பம்பலப்பிட்டியில் உள்ள ஒரு விடுதியில்தங்கவைத்தோம்.

எப்போதும் ஒரு செவிலியர் உடனிருக்க, மூன்று நேரமும் மருத்துவர்கள் வந்து அவரைப் பார்த்துச் சோதித்துவிட்டு செல்கிறார்கள்.


அவர் கஞ்சி, சூப் போன்ற திரவ உணவுகளைத் தான் உட்கொள்கிறார். மே 11 ஆம் திகதி காலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் எம்.பி.கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக அரசியல் பிரிவு அதிகாரி ரியாஸ் ஆகியோர் பார்வதி அம்மாளை வந்து பார்த்தனர். இநத்திய அரசின் நிலையைக் கூறி, விசா விண்ணப்பத்தையும் கொடுத்தார்கள். பிரபாகரனின் அக்கா வினோதினியைத் தொடர்புகொண்டு விபரம் கூறினேன். பார்வதி அம்மாள் குடும்பத்தினரோ, இந்திய அரசின் கடுமையான நிபந்தனைகள், தடுப்புக் காவலைப் போன்று இருப்பதால், இந்தச் சூழலில் இந்தியாவில் சிகிச்சை பெற வேண்டாம்... ஒட்டுமொத்த இனத்தின் தன்மானத்துக்காகத் தானே இத்தனை பாடு... அதற்கு பாதிப்பு வரும் இடத்துக்குப் போகவேண்டாம்..." என்றவர்கள், வல்வெட்டித்துறைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளிக்குமாறு தெரிவித்தார்கள். அதன்படிதான் இங்கு வந்திருக்கிறோம்..."

**"பார்வதி அம்மாளுக்கு கொழும்பில் இருந்து யாழ்ப்பாணப் பயணம் சிரமமாக இல்லையா?"**

" அவருடைய வயோதிபமும், உடல் பிரச்சினையும் மோசம்தான்... கொழும்பு விடுதியில் இருந்து செயின்ட் ஜான்ஸ் அம்புலன்ஸில் செவிலியர்கள் உடன்வர ஏ-9 நெடும்பாதை வழியாக யாழ்ப்பாணம் புறப்பட்டோம். வழியில் இடையிடையே அவர்கள் உடல்நிலைக்கு ஏற்றவாறு கொக்கரல்ல, தம்புவல்ல, மதவாச்சி, வவுனியா ஆகிய இடங்களில் எல்லாம் சிறிதுநேரம் நின்று நின்று ஓய்வு தந்து, பயணம் தொடர்ந்தோம். காலை 6.30 மணிக்கு புறப்பட்டு வல்வெட்டித்துறை வர 12 மணி நேரம் ஆணது...

**எப்படி சிகிச்சை அளிக்கப்படு கிறது?**

வல்வெட்டித்துறையில் உள்ள மாவட்ட நிலை அரசு மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. சொந்த ஊர் என்பதால் வசதி குறைவாக இருந்தாலும்... தெரிந்த முகங்கள், தெரிந்த மருத்துவர்கள் என்பது பார்வதி அம்மாள் மனதுக்கும் இதமாக இருக்கிறது. தொடர்ந்து இங்கு சிகிச்சை அளிப்போம். ஒருவேளை கனடாவுக்கு விசா கிடைத்தால் அங்கு அழைத்துச் செல்லப்படுவார். இல்லையென்றால் வாழ்நாள் முடியும் வரை சொந்த மண்ணில் உள்ள சிகிச்சை வசதிகளையே எடுத்துக் கொள்வார்.



பார்வதி அம்மாளுடன் சிவாஜிலிங்கம்

**செம்மொழி மாநாட்டையொட்டி பார்வதி அம்மாளின் சிகிச்சையை வைத்து இங்கு அரசியல் நடப்பதாகக் கூறப்படுகிறதே?**

என்னைப் பொறுத்தவரை இந்த விடயத்தில் தமிழகத்தின் உள்ளூர் அரசியலுக்குள் கருத்துக் கூற விரும்பவில்லை. பொதுவாக இந்த விடயத்தில் அவசர அவசரமாக எடுத்தேன், கவிழ்த்தேன் என காரியங்கள் நடைபெற்றுவிட்டன. மனிதாபிமான அடிப்படையில் இந்த விடயத்தை பார்த்திருக்க வேண் டும்.

அப்படி நடந்திருந்தால் சிக்கல் எதுவும் தோன்றியிருக்காது...

**"பிரபாகரன் குடும்பத்தார், நெடுமாறன் கவனிப்பில் இங்கே மூசிறியில் சிகிச்சை அளிக்கலாம் என்று முடிவெடுத்தார்கள் என்றும்... ஆனால், நெடுமாறனுக்கு பெயர் கிடைத்துவிடும் என்பதால் அது தடுக்கப்பட்டது என்றும் ஒரு தரப்பினர் கூறுகிறார்களே?"**

சென்னையில் இருந்து பார்வதி அம்மாள் திருப்பி அனுப்பப்பட்ட பிறகு தான் எனக்கு அதுபற்றிய தகவலை மலேசியாவில் இருந்து சொன்னார்கள். பார்வதி அம்மாளின் குடும்பத்தாரின் விருப்பம் முசிறியில் உள்ள சித்த வைத்தியர் ராஜேந்தி ரனிடம் சிகிச்சைபெற வேண்டும் என்பது தான்.

மற்றப்படி நெடுமாறன் ஐயாவோ, யாரோ கவனிக்க முன்வரமாட்டார்கள் தானே...? தமிழக தலைவர்கள், இந்த சர்ச்சைக்கு இத்துடன் முற்றுப்புள்ளி வைத்துவிட வேண்டும் என்று தான் பார்வதி அம்மாளின் குடும்பத்தார் விரும்புகிறார்கள்... வேண்டுகோளுடன் முடித்தார் சிவாஜிலிங்கம்.

வினோதியின் விருப்பம்...!,

பார்வதி அம்மாள் தமிழகத்தில் தான் தங்கி சிகிச்சை எடுப்பார் என்ற நம்பிக்கையில் பிரபாகரனின் அக்கா வினோதினி கனடாவில் இருந்து மார்ச் 2 ஆம் வாரம் மலேசியா வந்தார். சிங்கப்பூர் மற்றும் மலேசியாவில் தங்கிய அவர் அந்த முயற்சி தோல்வியில் முடிவடைந்து விட்டதே என்று கண்ணீர் மல்க வருத்தத்துடன் கனடா திரும்பியதாக சிலர் கூறுகின்றனர்.

நன்றி- ஜூனியர் விகடன்

# கடந்த காலங்களில் காணாமல் போனோரின் விபரங்களை வெளியிட வேண்டும்

## அனைத்து பல்கலை மாணவர் ஒன்றியம் வேண்டுகோள்

(கொழும்பு)

கடந்த காலங்களில் கைது செய்யப்பட்ட கடத்தப்பட்டு, காணாமல் போனவர்களை விடுவிக்கக் கோரியும் அவர்கள் தொடர்பான விபரங்களை வெளியிட வேண்டும் என்றும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில், காணாமல் போனவர்கள் மற்றும் கடத்தப்பட்டவர்கள் தொடர்பான விபரங்களை பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து சேகரித்து வருகின்றோம்.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, கிளிநொச்சி, திருகோணமலை மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் இருந்து 300 இற்கும் மேற்பட்டவர்களின் விபரங்கள் பெறப்பட்டுள்ளது.

மாவட்ட ரீதியாக முழுமையான தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் மாவட்ட ரீதியாக குழுக்கள் அமைக்கப்பட்டு பனாங்கொடை, இரத்மலானை, வெலிக்கந்த போன்ற இடங்களில் உள்ள முகாம்களுக்கு காணாமல் போனவர்களின் பெற்றோர்கள், உறவினர்களை அழைத்துச் சென்று தேடவுள்ளோம்.

இது தவிர காணாமல் போனவர்கள் தொடர்பில் கண்டறிந்து கொள்வதற்கும், தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறும் அவர்களின் பெயர் விபரங்களை வெளியிடுமாறும் அவ்வாறு எவ் விதமான பதில்களும் கிடைக்கப் பெறாவிடின் யூன் மாதம் முதல் வாரம் தொடக்கம் கொழும்பில் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# புலிகளுக்கு ஆதரவு வழங்கியவருக்கு கனடாவில் ஆறு மாத சிறைத்தண்டனை

கனேடிய புலி ஆதரவாளர் ஒருவருக்கு அந்நாட்டு நீதிமன்றம் ஆறு மாத கால சிறைத் தண்டனை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்காக நிதி திரட்டியதாக ஒப்புக் கொண்டுள்ளார். இதற்கமைய பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதி திரட்டிய குற்றத்திற்காக கனேடிய நீதிமன்றம் ஆறு மாத காலச் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

46 வயதான பிரபாகரன் தம்பித்துரை என்பவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் இரண்டாண்டுகால சிறைத்தண்டனையும் மூன்றாண்டுகால ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் விதிக்குமாறு அரசாங்கத் தரப்பு சட்டத்தரணி விடுத்த கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

(2-6)

# மானியமாக கொடுப்பதற்கு வழங்கப்பட்ட பசளையை விற்க முயன்ற மூவர் கைது

## வெளிவேரிய பகுதியில் சம்பவம்

விவசாயிகளுக்கு மானியமாக கொடுப்பதற்காக வழங்கப்பட்ட 640 மூடை பசளையை விற்க முற்பட்ட மூவர் வெளிவேரிய பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் படி வெளிவேரிய மண்டாவில பகுதியில் மானியமாக வழங்கப்பட்ட ஒரு தொகை பசளையை விற்பதற்காக எடுத்துச் சென்ற லொறியை வெளி வேரிய பொலிஸார் சுற்றிவளைத்தனர்.

இப் பசளை மூடைகள் வத்தளை, ஹுணுபிட்டிய பசளை களஞ்சியத்தில் இருந்து அக்கரைப்பற்று பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக விசாரணை மூலம் தெரிய வந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜெயகொடி தெரிவித்துள்ளார். (2-6)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 11 ◆ 02 ◆ 1953



உதிர்வு 16 ◆ 04 ◆ 2010

அமரர் திருமதி இராசலிங்கம் தங்கேஸ்வரி

நாட்கள் முப்பத்தொன்று ஆனாலும்
ஆறுமோ அம்மா எம் துயரம் !
நெஞ்சிருக்கும் வரை நிறைந்திருக்கும்
உங்கள் நினைவு.

(151)

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

குடும்பத்தினர்.


# பாதிப்பேரை கொன்றுவிட்டார்கள்.....

07ஆம் பக்கத்தொடர்ச்சி......

கூடாரங்களுக்குள் இந்த 73 ஆயிரம் பேரும் இன்னமும் இருக்கிறார்கள். இதுவரை ஒரு இட்சத்து 63 ஆயிரம் பேரை மீள் குடியேற்றம் செய்துள்ளோம். இவர்களும் அடிப்படை வசதி எதுவும் இல்லாத இடங்களில் தவிக்கிறார்கள். கிளிநொச்சியில் குடியேற்றப்பட்ட மக்கள், மோசமான நிலையில் உள்ளனர். அவர்களை நான் பார்க்கச் சென்றபோது, மக்கள் அதிருப்தியை வெளிப்படுத்தினார்கள். வன்னியில் மட்டுமல்ல, கிழக்கிலும் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கு வீட்டு வசதி இல்லை.

10 குடும்பங்களை எடுத்துக்கொண்டால் , ஏழு குடும்பங்களில் குடும்பத் தலைவர் இல்லை. சிறு குழந்தைகளுடன் பல்வேறு அசௌகரியங்களுடன் மக்கள் இருப்பதை நான் பார்த்தேன் என்று மீள்குடியேற்ற அமைச்சராகப் பொறுப்பு ஏற்றுள்ள கருணா சொல்கிறார். அவராலேயே மறைக்க முடியாத அளவுக்கு மக்கள் அநாதைகளாக அலைவது தொடர்கிறது.

சொந்த ஊருக்கு அனுப்பப்பட்டால் அங்கு வீடுகள் இருந்த தடயம் மட்டும் தான் இருக்கிறது. விவசாய நிலங்களைப் பயன்படுத்த முடியாமல் நாசம் செய்துள்ளார்கள். மீன்பிடிப் படகுகள் உடைத்து நொறுக்கப்பட்டு உள்ளன. இப்படி ஏதுமற்ற நிலையில் தான் மீள்குடியேற்றம் நடந்துள்ளது. விவசாயமும், மீன்பிடித்தலும் தான் அவர்களுக்குத் தெரிந்த தொழில். ஆனால், அதைச் செய்வதற்கு வழி ஏதும் இல்லை.

கிழக்கு மாகாணத்தில் 49 ஆயிரம் தமிழ்ப் பெண்கள் இப்போது விதவைகளாக இருக்கிறார்கள். இதில் 25 ஆயிரம் பேர் 30 வயதுக்கும் குறைந்தவர்கள். அடுத்த கட்ட வாழ்க்கை என்ன என்பதே தெரியவில்லை. குழந்தைகளை என்ன செய்வது என்றும் புரியவில்லை. “பெரிய கடல் இருக்கு... ஏரி இருக்கு, வெள்ளாமைக்கு வயல், விறகு வெட்ட காடு இருக்கு, நல்ல வழமான இடம் எங்கட வாகை. ஆனால், யுத்தம் எங்கட வாழ்வில் விளையாடிப் போட்டுது பாருங்கோ. எங்கட நிலத்தில் வெள்ளாமையைச் செய்வம். மீனைப் பிடிப்பம். காட்டுக்குப் போவம். பட்டினி கிடக்க மாட்டம். ஏதோ வசதியா இருந்தனங்க. இப்ப ஒரு வேளை சாப்பாட்டுக்கு என்ன பாடுபடுறம்? எல்லாம் போச்சு!

முன்னயெல்லாம் புலியள் இருக்கிறதென்று கெடுபிடி பண்ணினாங்க. இப்ப தேனெடுக்க, விறகு வெட்ட, தொழில் செய்ய , காட்டுக்குப் போக படையிட்ட பெமிஷன் வாங்கணும். அபிவிருத்தின்னு அரசாங்கம் சொல்லுது, குடியேற்றத்துக்கு உதவின்னு சொல்லுது, நிவாரணம் தாரேனென்டு செல்லுது, எல்லாமே பொய்யி! ” என்று வாகை மீனவர் சொல்லும் வார்த்தைதான் மொத்த ஈழத்துக்குமான நிலை.

தமிழர்கள் வசதியாக வாழ்ந்து தொழில் செய்த இடங்களில் எல்லாம் இப்போது சிங்களவர்கள் குடியேற்றப்பட்டு, விவசாயம் பார்க்கிறார்கள். மீன் பிடிக்கிறார்கள். பெரும்பான்மைத் தமிழர் பகுதியாக சொல்லப்படும் வட கிழக்கு மாகாணத்தில் சிங்களவர் குடியேற்றம் மிகத் தீவிரமாக நடக்கிறது.

தமிழ்ப்பற்றுள்ள தேசிய விடுதலை இயக்கம் என்ற பெயரால் யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் ஒரு இரகசிய துண்டறிக்கை எல்லா வீடுகளுக்கும் போடப்பட்டுள்ளது. தென்னிலங்கையில் இருந்து அதிகளவிலான சிங்களவர்கள் சுற்றுப் பயணிகளாக மண்ணை ஆக்கிரமித்து தமிழ் மக்களாகிய எம்மை சிறுபான்மையினர் ஆக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார்கள். வர்த்தக நிலையங்களில் சிங்களப் பெயர்ப்பலகை எழுதுதல், சுற்றுலாப் பயணிகளுக்கு வீடுகள் கொடுத்தல், சிங்களவர்களுக்கு வீடுகள், காணிகள் விற்றல், சிற்றூர்திகளில் சிங்களப் பாடல்களை ஓலிபரப்புதல் ஆகியவை தொடங்கிவிட்டன என்கிறது இந்தப் பிரசுரம்.

அதாவது வல்வெட்டித்துறையில் பிரபாகரனின் வீடு இடிப்பு, கரும்புலி மில்லர் நினைவாக நெல்லியடியில் வைக்கப்பட்ட நினைவுத் தூண் உடைப்பு, யாழ்ப்பாணம் உடுப்பிட்டியில் இருந்த மாவீரர் துயிலும் இல்லம் இடிப்பு... என போர் நினைவுச் சின்னங்கள் அனைத்தும் இடிக்கப்பட்டு வரும் நிலையில், இன்னொரு பக்கம் வெளிப்படையான சிங்கள் குடியேற்றமும் தடங்கல் இல்லாமல் நடக்கிறது.

உணவுக் களஞ்சியமான வன்னி மண்ணில் உற்பத்தியைப்பெருக்கி , மற்றவருக்கு உண்டி கொடுத்த நாம் ஒரு பிடி சோற்றுக்கு கையேந்தி வரிசையில் நிற்கிறோம் என்று தமிழ் எம்.பி. யான சிவஞானம் ஸ்ரீதரன் நாடாளுமன்றத்தில் சொல்லியிருக்கிறார்.

அன்றாட வாழ்க்கைக்கு அவஸ்தைப்பட்டு.... சொந்த தொழிலும் செய்யவிடாமல், கிடைக்கவேண்டிய சிறு வேலையும் மறுக்கப்பட்டு ... வாசலுக்கு வந்தால் வளைக்கப்படுவோமோ என்று பயந்து, உட்கார ஒரு நிரந்தரக்கூரையில்லாமல் தவித்து .... என நான் சொல்லாத துன்பம் அனைத்தையும் அனுபவித்துக்கொண்டு இருக்கிறது. ஈழத்தமிழனம்.

இந்தக் கஷ்டங்கள் எதற்கும் சம்பந்தம் இல்லாத வகையில் பல்லாயிரம் கோடி முதலீடுகளை சீனா இறக்கி வருகிறது. உங்களுக்கான அத்தனை உதவிகளையும் செய்யக் காத்திருக்கிறோம் என்று பாகிஸ்தான் பிரதமர் அறிவித்து இருக்கிறார். மிகப் பெரிய காற்றாலைமின் திட்டத்தைக் கைப்பற்றிய மகிழ்ச்சியில் இருக்கிறது இந்தியா. இன்னும் எத்தனையோ நாடுகள் தங்களது முதலீட்டுக்கான சந்தையாக இலங்கையை மாற்றிவிட்டன. அமைதி தோய்ந்த கடல்பரப்பு முழுமையும் கேளிக்கை விடுதிகள், சுற்றுலா மாளிகைகள் அமைக்க இடம் ஒதுக்கப்பட்டு வருகிறது.

கொடூரம் என்னவெனில், கொழும்பு சுற்றுலாவின் அங்கமாகப் பாலியல் தொழில் மாறிப்போனது போல இன்னும் சில ஆண்டுகளில் தமிழ்ப் பரப்பும் மாற்றப்பட இருக்கிறது. தமிழ்ப் பெண்களின் எதிர்காலத்தை நினைத்தால் பகீரென்கிறது. பன்னாட்டு, பண்பாட்டுச் சந்தைக்கு திருகோணமலை , கிளிநொச்சி, முல்லைத்தீவை மொத்தமாகத் தாரைவார்க்கும் படலத்தில் ஆரம்பக்கட்ட வேலைகள் நடந்திருக்கின்றன. இந்த வளம் கொழிக்கும் பகுதியை, எதைக் காரணம் காட்டியும் கைவிட்டுவிடக் கூடாது என்று பல்வேறு நாடுகள் துடிக்கின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகள், அமைப்பு ரீதியாகவோ அல்லது தனித்தனிக் குழுக்களாகவோ அங்கு இயங்குகிறார்களா என்பதை நிரூபிக்கும் சம்பவங்கள் இதுவரை இல்லை. ஆனால் *புலி வருது* என்ற பூச்சாண்டிகளைச் சிங்கள அரசு நிறுத்தவில்லை. புலிகளின் புதிய இராணுவப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது என்று பிரதமர் டி.எம்.ஜயரட்ண அறிவித்துள்ளார்.

***பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்கக்கூடிய சந்தர்ப்பங்களை நாங்கள் ஆராய்ந்து வருகிறோம்*** என்கிறார் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய. இன்னும் பயங்கரவாதம் கனன்று வருகிறது என்று சொல்கிறார் மகிந்தாவின் மகன் நாமல். நண்பர்களைவிட எதிரிகளுக்குத்தான் எல்லாம் தெரியும்... என்பதை வைத்துப் பார்த்தால் ஈழத்தில் ஏதோ நடக்கப்போவதற்கான சாத்தியங்கள் இருப்பதாகவே தெரிகின்றன.

சக்கரம் மீண்டும் ஆரம்பத்த இடத்துக்கே வந்திருக்கிறது. துன்பத்தில் அதிக துண்பமும், துயரமுமே ஈழத் தமிழ் இனத்துக்கு வாய்த்திருக்கிறது. இந்நிலையை எந்த தேவதூதன் மாற்றுவான் என்பது தான் தெரியவில்லை!

***நன்றி :-ஆனந்தவிகடன்***

# லசந்த படுகொலைச் சம்பவம் குறித்த விசாரணைகளில் முன்னேற்றமில்லை

(கொழும்பு)

சண்டேலீடர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை வழக்கு குறித்த விசாரணைகள் கல்கிஸ்ஸ நீதிமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

விசாரணைகளில் இன்னமும் முன்னேற்றம் ஏற்படவில்லை என புலனாய்வுப் பிரிவினர் நீதவானிடம் அறிவித்துள்ளனர்.

படுகொலைச் சம்பவம் நடைபெற்ற தினமன்று லசந்தவின் தொலைபேசிக்கு கிடைக்கப் பெற்ற அழைப்புக்கள் தொடர்பில் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் குறிப்பாக எந்தெந்த நகரங்களிலிருந்து அழைப்பு ஏற்படுத்தப்பட்டது என்புது தொடர்பிலான விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை,லசந்தவின் கையடக்கத் தொலைபேசியை திருடிய நபரை தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். (2-6)

## நளினியின் புகார் குறித்து விசாரிக்க விசாரணைக் குழு அமைக்குமாறு பா.ஜ.க. வலியுறுத்தல்

(கொழும்பு)

சிறையில் கொலை செய்ய முயற்சி நடப்பதாக நளினி கூறிய புகார் குறித்து விசாரிக்க, விசாரணைக் குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்று பா.ஜ.க. மாநில தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நளினியை ராஜீவ்காந்தியின் மகள் பிரியங்கா சந்தித்துச் சென்ற பிறகுதான் இலங்கையில் தமிழர்கள் மீது கொடூரத் தாக்குதல் நடத்தப்பட்டது.

மேலும் இருவரின் சந்திப்பின் போது சட்டவிதிகளின் படி உடன் இருந்ருக்க வேண்டிய சிறை அதிகாரிகளும், பொலிஸ் அதிகாரிகளும் விதிமுறைகளை மீறி அப்புறப்பத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் சந்திப்புக்கு ஏற்பாடு செய்தது யார்? இந்தச் சந்திப்பின்போது என்னென்ன விஷயங்கள் பேசப்பட்டன என்பது குறித்தும் வெளிப்படுத்த வேண்டும். இவர்கள் சந்திப்பின் போது சிறை அதிகாரிகள் விதிமுறைகளை மீறி நடந்து கொண்டது ஏன்? என்பது குறித்தும் தெளிவுபடுத்த வேண்டும்.

சில மாதங்களுக்கு முன்புதான் நளினிக்கு சிம் கார்டு கொடுக்கப்பட்டுள்ளது. இது பிரியங்கா சந்திப்புக்குப் பின்பா? அல்லது முன்பா? யாரால் கொடுக்கப்பட்டது? ஆகியவை குறித்து தெரியப்படுத்த வேண்டும்.

நளினியின் தொலைபேசி தொடர்பு டில்லியையும் எட்டியுள்ளதா என்பதைக் கண்டுபிடிக்கவேண்டும்.

சிறையில் அவரைக் கொலை செய்ய முயற்சி நடப்பதாக , நளினி நம்புவதற்கு காரணம் என்ன? யார் , யார் அவரைக் கொலை செய்ய தூண்டக்கூடும் என்பதையும் கண்டறிய வேண்டும்.

இதுபோன்ற பல்வேறு சந்தேகங்கள் குறித்த உண்மை நிலைமை வெளியாகும் வகையில், விசாரணைக்குழு ஒன்றை அமைத்து விசாரணை நடத்த வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். (6)

# ஈழத்தில் கொல்லப்பட்ட தமிழர்களுக்காக 17,18 ஆம் திகதிகளில் கறுப்பு சின்னம் அணிவோம்

## தமிழகத்தில் திரை இயக்குநர்கள், கவிஞர்கள் கோரிக்கை

(சென்னை)

வன்னியில் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை 5 மாதங்கள் மிகப் பயங்கரமான இறுதிக் கட்டப் போர் நடந்தது. விடுதலைப்புலிகளை அழிப்பதாக கூறி அப்பாவி ஈழத் தமிழர்கள் குறிவைத்துக் கொல்லப்படனர்.

போரின் உச்சக்கட்ட தாக்குதல் மே 17, 18 ஆம் திகதிகளில் முள்ளிவாய்க்கால் பகுதியில் நடந்தது. அந்த 2நாட்களில் மட்டும் சுமார் 40 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டனர். இந்தியா உட்பட எந்த நாடும் ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற முன்வரவில்லை. சுமார் 3 இலட்சம் தமிழர்கள் வீடுகளை இழந்து சொந்த மண்ணிலேயே அகதிகளாகப்பட்ட கொடூரம் நடந்தது.

முள்ளிவாய்க்கால் சம்பவத்தை உலகம் முழுக்க வாழும் ஈழத்தமிழர்கள் நெஞ்சில் சோகத்தை சுமந்து கண்ணீர் மல்க நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். கொல்லப்பட்ட தமிழர்களுக்கு அவர்கள் தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தி வருகிறார்கள்.

கனடா, ஜெர்மனி,டென்மார்க், நோர்வே, பிரான்சு,அவுஸ்திரேலியா, ஆலந்து உட்பட ஈழத்தமிழர்கள் உள்ள நாடுகளில் எல்லாம் மே 18 ஆம் திகதியை போர் குற்றவியல் நாள் ஆக அறிவிக்கக் கோரி கூட்டங்கள் நடந்து வருகிறது. வரும் 18ஆம் திகதி இலங்கைத் தூதரகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தவும் ஈழத்தமிழர்கள் தயாராகி வருகிறார்கள்.



ஈழத் தமிழர்கள் படுகொலைக்கு தமிழ் நாட்டிலும் அஞ்சலி செலுத்த பல்வேறு அமைப்புக்கள் ஏற்பாடு செய்து வருகின்றன. அஞ்சலிப் பொதுக்கூட்டம், தீபம் ஏந்தி ஊர்வலம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளன. நாம் தமிழர் இயக்கத் தலைவர் சீமான் மதுரையில் 18 ஆம் திகதி அஞ்சலிக்கூட்டம் நடத்துகிறார். இந்த நிலையில் தமிழ்நாட்டில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 100பேர் கூட்டறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டனர்.


அதில் அவர்கள் , ஈழத்தில் நடந்த இனப் படுகொலையை வேதனையோடு நினைவு படுத்தும் விதத்தில் வரும் 17,18 ஆம் திகதிகளில் தமிழராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் கறுப்பு சின்னம் அணியவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கூட்டறிக்கையில் டைரக்டர்கள் மகேந்திரன், பாலுமகேந்திரா, ஆர்.சி. சக்தி, மணிவண்ணன், காந்திய சிந்தனையாளர் தமிழருவி மணியன், கவிஞர்கள் புலமைப் பித்தன், காசி ஆனந்தன், தாமரை, எழுத்தாளர்கள் பிரபஞ்சன், பா. செய்பிரகாசம் , மூத்த மருத்துவர் செ.நெ. தெய்வநாயகம், ஓவியர்கள் மணியம் செல்வன், மாருதி, அரஸ், நடிகர்கள் நாசர்,சத்யராஜ் வக்கீல் பால் ஜனக ராஜ் உட்பட 100 பேர் கையெழுத்திட்டனர். (2-6)







வடமாகாண சாரணியர் பாசறை நேற்று யாழ்.பழைய பூங்காவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப் படுவதையும், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் மற்றும் வட மாகாண சாரணிய ஆணையாளர் என்.போஜன் ஆகியோர் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட சாரணியரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

# UNIVERSITY OF JAFFNA
# TENDER NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed tenders from the qualified contractors for the following works/ Service.

| Se.No | Work/Service Details | Approximate direct construction cost (Rs.in mn) | Refundable deposit (Rs.) | Non - refundable deposit (Rs.) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| 1. | Improving Water Supply to Saplings in the Front Esplanade, University of Jaffna. | 0.5 | 5,000.00 | 400.00 | M 9/C10 (any field) |
| 2. | Repairs to damages caused to Hostel Complex at Kaithady, University of Jaffna. | 4.0 | 40,000.00 | 400.00 | M 7/C8 (Buildings) |
| 3. | Providing Facilities Management Services for Hostel at Jaffna Town, University of Jaffna. | - | - | 400.00 | M7/C8 (any field) or any organizations currently providing complete facilities Management Services for any similar building |

Tender forms may be obtained from Senior Assistant Registrar/ Capital Works & Planning University of Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above tender fee at the shroff's counter, University of Jaffna until 24.05.2010.

Perfected tender should be sealed and marked with the job and the name of the work / service on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna P.Box 57, Thirunelvely, Jaffna or deposited in the tender box kept at Registrar's Office, University of Jaffna.

Tenders will be accepted till 2.00 p.m on 01.06.2010 and open immediately thereafter.

Tenderers or their accredited representatives could be present at the time of opening of tenders.

Tender forms may be inspected by the tenderers free of charge at the Capital Works & Planning Branch of this University during office hours, if necessary.

**P.O.Box 57,**
**Thirunelvely,**
**Jaffna.**
**13.05.2010**

**Registrar**
**University of Jaffna.**

(C-263)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டி வேவில் ஸ்ரீ வீரகத்தி விக்னேஸ்வரசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை சப்பறமும் 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் வியாழக்கிழமை காலை 8.45 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (4)

# வலைப்பந்தாட்டப் போட்டி

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் வலைப்பந்தாட்டப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிக்கு மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் சென்தோமஸ் வி.க, மொம்மர்ஸ் வி.க., சிவகுமரன் வி.க., சிவானந்தா வி.க., இமையாணன் மத்தி வி.க., தீபஜோதி வி.க., மனோகரா வி.க.,நெடியகாடு இளைஞர் வி.க., பருத்தித்துறை ஐக்கிய வி.க., நக்கீரன் வி.க. ஆகிய 9 கழகங்கள் பங்குபற்றவுள்ளன. (4-24)


## கருத்தரங்கும் பயிற்சிப் பட்டறையும்

இதோ யாழ்.மாவட்டத்தில் முதன் முதலாக தமிழ்மொழி மூலம் சந்தைப்படுத்தல் துறையில் ஒருநாள் கருத்தரங்கும் பயிற்சிப் பட்டறையும் (ONE DAY WORK SHOP & SEMINAR ON MARKETING) கொழும்பிலிருந்து வரும் விரிவுரையாளரினால் நடத்தப்படும். O/L, A/L படித்தோர், தொழில்புரிவோர், தொழிலொன்றை எதிர்பார்த்திருப்போர், Marketing துறையை மேலும் அறிய விரும்புவோர் அனைவருக்குமானது. பயிற்சியின் முடிவில் சான்றிதழும் தொழில் தேவைப்படுவோருக்கு பகுதி /முழு நேர தொழில் Marketing துறையில் வழங்கப்படும். பயிற்சிக்கான கட்டணம் 2000 ரூபா(பகலுணவு, தேநீர் வழங்கப்படும்) பங்கு பெற விரும்புவோர் 24.05.2010 இற்கு முன் பதிவு செய்து கொள்ளவும்.

மேலும் தொழில் வழங்குநர்கள் எம்மோடு தொடர்புகொண்டு தொழிலாளர்களையும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்புகளுக்கு:

CLARET INSTITUTE OF HIGHER STUDIES
No-772, Point pedro Road, Nallur, Jaffna.
T.P:- 021 3206360 (1513)

கணைப்பு காயவேண்டுமானால் புகையை பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

*- வங்காளம்.*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## பொறுப்பற்ற கருத்துக்களும் குறுகிய சிந்தனைகளும் வேண்டாம்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பின்தங்கிய நிலைக்குத் தனித்து யுத்தத்தை மட்டும் முழுமையான காரணமாக்கி முடிசூட்டிவிட முடியாது.

நீண்டகால யுத்தம் யாழ்ப்பாணக் குடாநாட்டையும் மக்களையும் குட்டிச் சுவராக்கியதென்ற உண்மைக்கப்பால், எங்களிடம் இருக்கக்கூடிய குறுகிய சிந்தனைகளையும், எதிர்மறையான விமர்சனங்களையும் முன்வைத்து தங்களை விளம்பரப்படுத்த முற்படும் சிறுபிள்ளைத்தனமும் எங்கள் நலிவுக்கு வகைசெய்ததென்ற உண்மையையும் நாம் மறந்துவிடலாகாது.

எந்த விதமான ஆய்வுகளும், அனுபவப் பகிர்வுகளும், தூரநோக்கும் இல்லாமல் விமர்சிக்கும் வெறுமைத்தனங்கள் எங்கள் எதிர்காலத்தை கணிசமான அளவில் பாதித்தது.

இதற்குப் பல உதாரணங்களை முன்வைக்க முடியுமாயினும், உச்சமான உதாரணமாக ஜப்பான் நாட்டின் உதவியைக் குறிப்பிடலாம்.

யாழ்ப்பாண மாநகரில் கழிவுநீர் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையின் கழிவுகளை அகற்றும் ஏற்பாடொன்றை பல ஆண்டுகளுக்கு முன்னர் ஜப்பானிய அரசு செய்து தரமுன்வந்தது.

எனினும் அதற்கு நம்மில் சிலர் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தனர்.

அதன் விளைவு இன்று வரை செம்மையான வடிகால்கள் இல்லாத அவலத்தை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.

இப் பரிதாப நிலை இப்போது வீதி அகலமாக்கும் விடயத்திலும் கொடிகட்டிப் பறக்கின்றது.

எங்கள் அருங்கலைப் பொக்கிஷங்கள் அழிந்துவிடும் என்றும் ஆலயங்கள், தேவாலயங்கள் இடிந்துவிடும் என்றும், ஆலமரம், அரசமரம் தறிபட்டுப்போகும் என்றும் அபயக்குரல் எழுப்புகின்றனர்.

இவர்களின் சிந்தனைகள் சரியா பிழையா என்று நாம் தீர்ப்புக்கூற வரவில்லை.

ஆனால் இத்தகைய சமூக, பண்பாட்டு விரும்பிகள் எங்கள் தாய்மண்ணில் பௌத்த சிலைகள் நிர்மாணிக்கப்படுவதை, ஏ-9 வீதியில் தென்பகுதியாரின் கடைகள் உருவெடுத்திருப்பதை, வன்னிப் பெரு நிலப்பரப்பில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றங்களைக் கண்டிக்கவும் கண்டன அறிக்கை வெளியிடவும் ஏன் தயங்குகின்றனர்.

அச்ச நிலை மட்டும்தான் காரணமா? அல்லது அரசுடன் பகைத்தால் பதவி உயர்வு கிடைக்காது செல்வாக்குக்குறைந்து விடும் என்ற மனப்பயமா?

வெறுமனே விமர்சிக்காதீர்கள். நிஷாப்புயலால் அழிந்த மரங்களுக்கு இணையாக மரம் நடும் திட்டத்தை முன்னெடுங்கள்.

அழிக்கப்பட்ட தமிழர் பண்பாட்டு அருங்கலைப் பொக்கிஷங்களை பாதுகாருங்கள். அவற்றைச் செய்து கொண்டு விமர்சனத்தை முன்வையுங்கள்.

அப்போது உங்கள் விமர்சனம் உருப்பெறும். இதைவிடுத்து வீதி அகலிப்பை தடுத்து நிறுத்த தனி மனிதர்களாகிய நீங்கள் யார்? என்ற கேள்வி எழும்போது உங்களிடம் வேறு ஏதோ உள்நோக்கம் உண்டு என்ற கருத்து பொதுமக்களிடம் இருந்து வெளிப்படும். ஆகையால் கவனம்.

தனி மனித விமர்சனங்களை விடுத்து பொது நோக்குக் கொண்ட விமர்சனங்களை தொகுத்து துலாம்பரப்படுத்துங்கள். அதுவே நன்று.

# வெளிநாட்டு உதவிகளைப் பெற்று கடற்றொழில் அபிவிருத்தி செய்யப்படும்

## சாவற்கட்டில் அமைச்சர் டக்ளஸ் உறுதி


வெளிநாடுகளின் உதவிகளைப் பெற்று யாழ். குடாநாட்டில் கடற்தொழில் மேலும் விருத்தி செய்யப்படுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை தெரிவித்துள்ளார். சாவற்கட்டு மக்கள் நேற்று முன்தினம் மாலை அமைச்சர் டக்ளஸ் தேவனாந்தாவுக்கு வழங்கிய வரவேற்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில், மக்களோடு மக்களாக நின்று மக்களுக்காக பணி செய்வதையே நாம் எமது முதன்மை நோக்காக் கொண்டு செயற்பட்டு வருகின்றோம். இந்தக் கிராமத்திலும் கடற்றொழிலாளர்களினது எதிர்கால வளமான வாழ்வுக்கான நாம் பல்வேறு திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

அந்த வகையில் மக்கள் வங்கியூடாக கடன் வழங்கி தொழிற்றுறைகளை மேம்படுத்தவும், அதன் மூலம் வளமான எதிர்காலத்தை கட்டியெழுப்பவும் முடியும்.

அத்துடன் பல வெளிநாட்டு தொழில்சார் பிரமுகர்களுடன் கடல் உணவு வர்த்தகம் உட்பட்ட தொழில்துறைகளை மேம்படுத்தவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம் எனவே சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்தி கடற்றொழிலை அபிவிருத்தி செய்வதுடன் சமூகத்தை நல்வழிப்படுத்துவதோடு ஏனைய சமூகப் பணிகளையும் செய்ய வேண்டுமென்பதே எமது விருப்பமென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவனாந்தா தெரிவித்துள்ளார். (ந)

## இப் பாலகன் பற்றி யாருக்கும் தெரியுமா?



படத்தில் உள்ள இப் பாலகன் வன்னியில் காயமடைந்து 05.02.2009 அன்று கப்பலில் ஏறும் போது தவறவிடப்பட்டு விட்டார். இவர் பற்றிய விபரம் கீழே தரப்படுகிறது.

இவர் பற்றிய விபரத்தை யாரேனும் அறிந்தால் தயவு செய்து அறியத்தரவும்.

| | |
|---|---|
| முழுப் பெயர் | :மகேந்திரன் விக்னேஸ்வரன் |
| வேறு பெயர் | :அபி |
| பிறந்த திகதி: | :12.09.2002 |
| பிறந்த இடம் | :யாழ்ப்பாணம் |
| நிரந்தர வதிவிடம் | :இல.785; கட்சன் வீதி, வட்டக்கச்சி |
| தாயின் பெயர் | :கேதாரகௌரி (கௌரி) |
| உடன் பிறப்பு பெயர் | :கனகாம்பிகை (கனகர்) அம்பிகா |
| காணாமல் தவறவிடப்பட்ட இடம்: | சுதந்திரபுரம் |
| தவறவிடப்பட்ட திகதி | : 05.02.2009 |
| தொழில் | : மாணவன் |
| அம்மம்மா பெயர் | : செல்லம்மா |
| தாத்தா பெயர் | : மார்க்கண்டு |
| நிறம் | : பொது |
| விசேட அடையாளம் | : பின் புறத்தில் நீலநிற மச்சம். கை ஒன்று சற்று பின் வளைவாக இருக்கும். |
| என்ன பெயர் என்று கேட்டால் அபி என்று சொல்லுவான் | |
| தவறவிடப்பட்ட சம்பவம் | : காயப்பட்டு கப்பலில் திருகோணமலைக்கு ஏற்றும் போது |

தொடர்பு கொள்ள வேண்டிய தற்போதைய விலாசம்:-
சி.மகேந்திரன்
9B, பாரதி வீதி,
கூமாங்குளம், வவுனியா
T.P.: 0244924810, 0244908607

## அமைச்சர் டக்ளஸுக்கு மல்லாகத்தில் பாராட்டுவிழா

வலி. வடக்கு மக்களின் ஏற்பாட்டில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் சிறு தொழில் முயற்சி அபிவிருத்திஅமைச்சருமானகௌ.டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரீன் ஆகியோருக்கான மாபெரும் வரவேற்பு விழா இன்று ஞாயிற் றுக்கிழமை பி.ப 4.00 மணிக்கு மல்லாகம் பழம்பதி விநாயகர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

மல்லாகம் பழம்பதி விநாயகர் ஆலய ஆதீனகர்த்தா முத்தையா குருக்கள், நாகேந்திர சர்மா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வாழ்த்துரைகளை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன், யாழ். மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, யாழ் .மாநகர முகாமைத்துவ உதவியாளர் பொ.சிவநேசன், தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் கா.சிவஞானம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவதாசன், ஈழமக்களின் ஜனநாயகக் கட்சியின் வலி.வடக்குப் பொறுப்பாளர் இ.ஜெயபாலசிங்கம் ஆகியோர் நிகழ்த்துவர். (ந)

## அக்கரப்பத்தனையில் தீ விபத்து ; தோட்டக்குடியிருப்பு முற்றாக சேதம்


நுவரெலியா மாவட்டம் அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எல்பியன் தோட்ட ஆட்லோ பிரிவில் நேற்றுக் காலை ஏற்பட்ட தீவிபத்தொன்றில் 12 வீடுகளை கொண்ட லயன் குடியிருப்பொன்று எரிந்து சேதத்துக்கு உள்ளாகியுள்ளது.

மின்சாரவொழுக்கினால் இந்தத் தீவிபத்து ஏற்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப் படுகின்றது. இந்த விபத்தினால் எவருக்கும் உயிராபத்தோ காயங்களோ ஏற்படவில்லை. எனினும் தொழிலாளர் குடும்பங்களின் உடைமைகளுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட 75 பேர் தற்போது தோட்டத்தின் தற்காலிக இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்குமாறு நுவரெலியா மாவட்ட செயலாளர் பி.ஜி.குமார ஸ்ரீ உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார். (6)

## மண்ணகத்தில் விண்ணகம்



இறைவனின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் பிறவியாகிய பெரியகடலைக் கடக்க முடியும் ; மற்றவர் கடக்க முடியாது.

ஆம், மண்ணில் பிறக்கின்ற ஒவ்வொருவரும் வாழப் பிறந்தவர்கள். வாழப் பிறந்தவர்கள் அனைவரும் சாவிற்கு உட்பட்டவர்கள். ஆனால் இந்த சாவிற்குப் பிறகு ஒரு வாழ்வு உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. அதுதான் விண்ணக வாழ்வு. இந்த விண்ணக வாழ்வு ஒருவரின் மண்ணக வாழ்வைப் பொறுத்தே அமைகின்றது.

மண்ணக வாழ்வு என்பது ஒரு மாபெரும் கடல்.இந்தக் கடலில் நாம் கடினப்பட்டு நீந்தி கரையேற வேண்டும். அப்படி நீந்துகின்றபோது பெரும் புயற் காற்று வீசும் அலைகள் கொந்தளிக்கும். இருந்தாலும் உறுதியுடன் நீந்தினால்தான் கரையேற முடியும்.

### பரமபிதா காட்டிய பாதை

ஆம், இன்று நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் விண்ணேற்றப் பெருவிழாவைக் கொண்டாடுகிறோம். இன்றைய மூன்று வாசகங்களும் இயேசுவின் விண்ணேற்றத்திற்கு சான்றும் ஆதாரமும் தருவதாக பேசுகின்றன. இந்த மதத்திலே வாழ்வின் அடிப்படை நிலைகள் நான்கு என்று சொல்லி அதில் வீட்டை நான்காவது நிலை என்று குறிப்பிடுகின்றது. அறம், பொருள், இன்பம், வீடு இதன்படி ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் அறத்தையே முதலில் தேடி அறச் செயல்களைச் செய்ய வேண்டும் என்று கூறுகிறது.

இஸ்லாம் மதம் இந்த மண்ணக வாழ்வைக் கடந்தபின் விண்ணக வாழ்வு உண்டு என்று சொல்கிறது. ஆம், நம்முடைய கிறிஸ்தவ நம்பிக்கையும் இதுவே. ஆண்டவர் இயேசுவும் தான் சென்ற இடங்களிலெல்லாம் அறச் செயல்களையே செய்து எல்லோருக்காகவும் தன் உயிரைப் பகிர்ந்து கொடுத்து மானுடத்திற்கு மீட்பு என்னும் மகிழ்ச்சியைக் கொடுத்ததன் வழியாக அவர் தந்தையால் விண்ணேற்றம் பெற்றார்.

தந்தை அவருக்கு தங்கப் பரிசினைக் கொடுத்தார்.

ஆனால் இன்று நமது கிறிஸ்தவ நம்பிக்கையின் படி இந்த மண்ணுலகமே விண்ணுலகம். காரணம் விண்ணுலகம் என்பது (ABODE OFGOD) இறைவன் உறைகின்ற இடம். நமது நம்பிக்கையின்படி நம் இறைவன் எங்கும் நிறைந்திருக்கின்றவர். எனவே இந்த மண்ணகத்தையே விண்ணகமாக மாற்றாலம். அப்படியெல்லாம் எவன் ஒருவன் இந்த மண்ணக வாழ்விலே பொருளை ஈட்டி அச் செயல்களைச் செய்து இன்பமாக வாழ்கின்றானோ அதுவே அவனுடைய வீடாகும், அது அவனுடைய மோட்சமாகும், அதுவே அவனுடைய முக்தியாகும்.

எனவே நாமும் இம் மண்ணக வாழ்வையே இயேசுவைப் போல் அர்த்தமுள்ளதாக மாற்றுவோம். அதுவே விண்ணக வாழ்வாகும்.

*ஜோன் றொபேர்ட்*

# அரசியலில் நடிகை குஷ்பு



அவருக்கு எதிராக ஏராளமான வழக்குகள் தொடரப்பட்டன. பல ஆண்டுகள் சட்டப் போராட்டத்தில் ஈடுபட்ட குஷ்புவுக்கு சமீபத்தில் உச்சநீதிமன்ற உத்தரவு மூலம் தீர்வு கிடைத்தது. அவருக்கு எதிரான வழக்குகள் அனைத்தையும் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

அதன்பிறகு ஊடகங்களுக்கு பேட்டியளித்த குஷ்பு அடுத்த கட்டமாக தான் அரசியலில் ஈடுபடப்போவதாகத் தெரிவித்தார்.

தமிழ் திரைப்பட நடிகை குஷ்பு அரசியலில் பிரவேசம் செய்திருக்கிறார். தி.மு.க தலைவரும் தமிழக முதல்வருமான மு.கருணாநிதி முன்னிலையில் நேற்று முன்தினம் தி.மு.க.வில் இணைந்தார்.

வட இந்தியாவைச் சேர்ந்த குஷ்பு தமிழ் நாட்டுக்கு வந்து திரைப்படங்களில் நடித்து பிரபலமானார்.தற்போது தமிழ் தொலைக் காட்சிகளில் பல நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார்.

திருமணத்துக்கு முன்பு பெண்கள் பாலியல் உறவு வைத்துக் கொள்வது தொடர்பாக அவர் தெரிவித்த கருத்துக்கள் தமிழகத்தில் பெரும் பிரச்சினையை ஏற்படுத்தின.

தான் காங்கிரஸுக்கு நெருக்கமானவர் என்று கருத்துத் தெரிவித்திருந்தார் குஷ்பு. அதனால் அவர் அந்தக் கட்சியில்தான் இணைவார் என்று எதிர் பார்க்கப்பட்டது. அவரை வரவேற்பதாக தமிழகத்தில் பல்வேறு காங்கிரஸ் தலைவர்களும் வெளிப்படையாக அறிவித்தார்கள்.

இந்த நிலையில் குஷ்பு நேற்று முன்தினம் மாலை சென்னையில் முதல்வர் கருணாநிதியைச் சந்தித்து முறைப்படி திமுகவில் இணைந்து கொண்டார். (ச-9)

# உயிருள்ள குழந்தையை இறந்ததாகக் கூறி

## —குப்பைத் தொட்டியில் வீசிய தாதி—

இறந்து விட்டதாகக் கூறி உயிருள்ள குழந்தையை தாதியொருவர் குப்பைத் தொட்டியில் வீசிய சம்பவம் ஒன்று புவனேஸ்வரத்தில் இடம்பெற்றுள்ளது.

பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது, ஒரிசா மாநிலம் புவனேஸ்வரத்தை சேர்ந்தவர் பிரமிளாதேவி. நிறைமாத கர்ப் பிணியாக இருந்த இவர் அப்பகுதியிலுள்ள அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில் அவருக்கு குழந்தை பிறந்தது. ஆனால் அந்தக் குழந்தை இறந்து விட்டதாக பிரசவம் பார்த்த வைத்தியரும் , தாதியும் தெரிவித்தனர்.சத்திரசிகிச்சை அறையிலிருந்த குப்பைத் தொட்டியில் தாதி குழந்தையை வீசிவிட்டார் என்றார் வைத்தியர்.

இதனிடையே மருத்துவமனையை சுத்தம் செய்யும் தொழிலாளியொருவர் அங்கிருந்த குப்பைத் தொட்டிகளை சுத்தம் செய்து கொண்டிருந்தார். அப்போது வைத்தியரும், தாதியும் கூறிய குழந்தை உயிரோடு கிடந்தது.

இதனால் அதிர்ச்சியடைந்த தொழிலாளி குழந்தையை உடனடியாக மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவில் சேர்த்தார்.

தற்போது அக்குழந்தை ஆரோக்கியத்துடன் உள்ளதாகத் தெரிவித்த வைத்திய அதிகாரிகள் தாதி, குழந் தையை குப் பைதொட்டியில் வீசிய தில் குழந் தையின் கால் ஒன்று உடை ந்துள்ளது என்றனர்.

இது குறி த்து குழந்தை யின் தாயார் பிரமிளாதேவி கூறும்போது,

குழந்தை பிறந்ததும் நான் எனக்கு பிரசவம் பார்த்த தாதியிடம் குழந்தையை தருமாறு கேட்டேன். ஆனால் எனது குழந்தை இறந்து விட்டதாக அவர் கூறினார்.

எனவே குழந்தையின் உடலை தருமாறு கேட்டேன். ஆனால் அவர்கள் தரவில்லை. இப்போது என் குழந்தை உயிரோடு இருப்பது தெரிந்திருக்கிறது.

எனவே சம்பந்தப்பட் டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண் டும் என்றார். இந்த சம்பவத்தை அடுத்து குழந்தை இறந்து விட்டதாக அறிவித்த டாக்டர் உட ன டியாக மாற்றப்பட்ட அதேவேளை குறித்த தாதி மீதும் கடும் நடவடிக்கை எடுக்க உத்தரவிடப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்ப டுகிறது. (2-6)

# அடிப்படை வசதியின்றி ரோபோ

## தயாரிக்கும் சீன விவசாயி

அடிப்படை வசதி ஏதும் இல்லாமல் 47 ரோபோக்களை உருவாக்கி, சத்தமில்லாமல் சாதனை புரிந்து வருகிறார் சீன விவசாயி. கையில் கிடைக்கும் பழைய இரும்பு பொருட்கள் வயர்கள் போன்ற தட்டுமுட்டு சாமான்களை கொண்டு இயந்திர மனிதனை உருவாக்கி சாதனை படைத்து வருகிறார்.

பீஜிங் அருகே உள்ள மாவூ என்ற கிராமத்தை சேர்ந்தவர் வு யூலு என்ற இந்த விவசாயி .துவக்க கல்வி வரை மட்டுமே படித்தவர். தற்போது சீன ஊடகங்களின் ஹீரோவாக மாறியுள்ளார். டிவி க்களிலும் பத்திரிகை களிலும் அவரின் பேட்டிகள் கண்டுபிடிப்புகள் பற்றிய நிகழ்ச்சிகள் செய்திகள் இல்லாத நாளே இல்லை என்று சொல்லும் அள வுக்கு பிரபலமாகி விட்டார். இந்த மாதம் ஆரம்பமாகி வரும் ஒக்டோபர் வரை நடக்க உள்ள ஷாங்காய் சர்வதேச பொருட்கண்காட்சியில் யூலுவின் கண்டு பிடிப்புகள் இடம்பெற உள்ளன.

இது குறித்து யூலு தெரிவிக்கும்போது, என் பெயர் தற்போது தான் சிறிது பிரபலமாகி வருகிறது. ஆனால் 20 ஆண்டுகளாக இது போன்ற படைப்புக்களை உருவாக்கி வருகிறேன். சர்வதேச கண்காட்சியில் இடம் பெறும் எனது கண்டுபிடிப்புகளுக்கு அனை வரிடமும் உரிய அங்கீகாரம் கிடைக்கும் என நம்புகிறேன். எனது படைப்புகளுக்கு அதிக தொகை செலவிட்டதால் குடும்பத்திற்கு நிதிச்சுமை ஏற்பட்டது.ரோபோ உருவாக்கும் முயற்சியை 1986 ஆம் ஆண்டு தொடங்கினேன். என் செயல்களால் குடும்பத்தினர் எரிச்சல் அடைந்தனர். விவசாயத்தில் வரும் வருமானம் முழுவதை யும் ரோபோ தயாரிப்பதற்கே செலவிட்டேன். ஒரு கட்டத்தில் என் மனைவி விவாகரத்து செய் யப் போவதாக மிரட்டினாள்.

விவசாய குடும்பத்தில் பிறந்த நான் விவசாயத்தை எளிமையாக்க சில கருவிகளை கண்டுபிடிக்கும் முயற்சிகளில் இறங்கி னேன்.



என் சைக்கிளை விதை விதைக்கும் இயந்திரமாக மாற்றினேன்.

சாதாரண மனிதர்களுக்கு பயன்படும் வகையில் ரோபோக்களை உருவாக்கி வருகிறேன். ஆட்டிறைச்சி வெட்டும் ரோ போவை தற்போது உருவாக்கி வருகிறேன்.

என் படைப்புகள் ஏற்கனவே ஜப்பான் கொரியா மற்றும் ஹொங் கொங்கில் நடந்த கண்காட்சிகளில் இடம் பெற்றுள்ளன. வாய்ப்பு கிடைத்தால் விரைவில் இங்கிலாந்து செல்ல உள்ளேன் என்று ஆர்வத்துடன் சொல்கிறார் இந்த படிக்காத மேதை. (2-6)

# தாய்லாந்து ஆர்ப்பாட்டத்தில் நேற்று

## 16 பேர் பலி; 157 பேர் காயம்!



தாய்லாந்து பாராளுமன்றத்தைக் கலைக்குமாறு கோரியும் தற்போதைய அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் சிவப்புச் சட்டைக் குழுவினர் நேற்று மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின்போது ஏற்பட்ட மோதலில் 16 பேர் கொல்லப்பட்டதுடன் 157 பேர் காயமடைந்துள்ளனர்.

தமது கோரிக்கைகளை முன்வைத்து கடந்த மார்ச்மாதம் முதல் ஏராளமானோர் தொடர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமான ஆர்ப்பாட் டக்காரர்கள் இதில் கலந்து கொண்டுள்ளனர்.

இந் நிலையில் அரசுக்கு ஆதரவாகவும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. (2-6)

### தாய்லாந்தில் இடம்பெறுகின்ற

# வன்முறைகளை தவிர்க்குமாறு ஐ.நா.செயலாளர் கோரிக்கை

தாய்லாந்தில் இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களைத் தவிர்க்குமாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவரும் செவ்வாடை ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் அதிகாரிக ளிடமும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகம் பான் கீமூன் கோரிக்கை விடுத்துள்ளார்.

உடனடியாக பேச்சுவார்த்தையொன்றில் ஈடுபடுமாறும் அவர்களிடம் வலியுறுத்தியிருப்பதாகவும் பான்கீமூனின் அலுவலகம் குறிப்பிட்டது.

தாய்லாந்து இராணுவத்தினருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் இடம் பெற்ற மோதலில் 16 பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்த அதேவேளை பலர் காய மடைந்துள்ளனர்.



அந்நாட்டு அர சாங்கத்தை பதவியிலிருந்து விலகுமாறும் புதிதாக தேர்தலொன்றை நடத்துமாறும் கோரி முன்னாள் பிரதமர் தக்ஸின் சினவத்ராவின் ஆதரவாளர்கள் கடந்த மார்ச் மாதம் 14 ஆம் திகதி முதல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வரு கின்றனர்.

எனினும் தனது பதவியை இராஜினாமா செய்யப் போவதில்லை என தாய்லாந்துப் பிரதமர் அபிஸிட் விஜ்ஜீவா முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-6)

# 20 ஆயிரம் கடிதங்களை விநியோகம்

## செய்ய தவறிய அமெரிக்க தபால்காரர்

அமெரிக்காவில் தபால்காரர் ஒருவர் சுமார் 20 ஆயிரம் கடிதங்களை விநியோகம் செய்யத் தவறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கடிதங்கள் மற்றும் பொதிகளை தமது வாகனத் தரிப்பிடத்தில் அவர் மறைந்து வைத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் பிலடெல்பியா நகரில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பத்து வருடங்களுக்கு முன்னர் அனுப்பி வைக்கப் பட்ட கடிதங்கள் கூட விநியோகம் செய்யப் படாத நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்கத் தபால் திணைக்களத்தைச் சேர்ந்த குறித்த பணியாளர் சில நாட்கள் பணிக்கு சமூகமளிக்காத காரணத்தினால் அவரது வீட்டுக்குச் சென்ற போது குறித்த கடிதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அவரது வீட்டிலிருந்து கடிதங்களை எடுத்துச் செல்வதற்காக மூன்று தபால் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க மத்திய புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள் ளனர்.

தபால்களை விநியோகம் செய்யாமை மற்றும் தபால்களை திருடுகின்றமை அமெரிக்காவில் குற்றவியல் சட்டத்தின் அடிப் படையில் தண்டனை வழங்கப்படக் கூடிய குற்றமாகும்.

காசோலைகள் பட்டியல்கள் மற்றும் உத்தியோகபூர்வ கடிதங்களே அதிகளவில் விநியோகம் செய்யப்படாத நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

குறித்த தபால்காரரை தேடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுகிறது. (2-6)

# தனுஷ்கோடி கடற்கரையில் ஒதுங்கிய அபூர்வ ஆமை

(இராமேஸ்வரம்)

தனுஷ்கோடி அருகே கடற்கரையில் அபூர்வ வகை ஆமை வெள்ளிக்கிழமை மாலை கரை ஒதுங்கியது.

ஆமைகள் கடலில் இறந்து மிதந்து கிடக்கும் மீன்கள் , மீன் குஞ்சுகளை அழிக்கும் சொரி மீன் வகையை உணவாக உட்கொள்வதால் இவை கடல்சூழல் தூய்மையை பாதுகாக்கும் காவலர்கள் எனக் கூறப்படுகி றது. இந்த அரிய இனமான ஆமைகளை சில சமயம் மீனவர்கள் பிடித்து உணவாக உட் கொள்கின்றனர்.

இந்நிலையில் தனுஸ்கோடி அருகேயுள்ள முகுந்தராயர் சத்திரம் தெற்குக் கடற்கரையில் அபூர்வ வகை கடல் ஆமை வெள் ளிக்கிழமை மாலை கரை ஒதுங்கியது.

இந்த ஆமை செந்நிறத்தில் சுமார் 2.5 அடி நீளத்தில் 2 அடி அகலத்தில் இருந்தது.

ஆமையின் கண்ணில் காயம் உள்ள தால்



பாறையின் மீது ஆமை மோதி மயக்க நிலையில் கரை ஒதுங்கியதாகவும் சில நிமிடம் கழித்து இறந்து விட்டதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

அரிய இனமான கடல் ஆமைகள் தனுஷ்கோடி மண்டபம் பாம்பன் கடற்கரைப் பகுதியில் இறந்த நிலையில் அடிக்கடி கரை ஒதுங் கி வருவதால் இவற்றைப் பாதுகாக்க கடல் வாழ் உயிரினக் காப்பக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கடல்வள ஆர்வ லர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-6)

## இருபது-20 உலகக்கிண்ண கிரிக்கெட் திருவிழா

# இறுதிப் போட்டியில் இன்று ஆஸி.-இங்கிலாந்து மோதல்




(பார்படோஸ்)

ஐ.சி.சி. மூன்றாவது இருபது-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி இன்று பார்படோஸில் நடைபெறுகின்றது.

இப் போட்டியில் மைக்கெல் கிளார்க் தலைமையிலான அவுஸ்திரேலிய அணியும் கொலின் வூட் தலைமையிலான இங்கிலாந்து அணியும் மோதுகின்றன.

மேற்கிந்தியத்தீவுகளில் நடக்கும் ஐ.சி.சி. மூன்றாவது இருபது-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி இன்று பார்படோஸில் நடைபெறுகின்றது.

இப் போட்டியில் அவுஸ்திரேலிய, இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன.

இதில் அவுஸ்திரேலிய அணி இத் தொடரில் தான் விளையாடிய 6 (முதல் சுற்று : 2, சுப்பர்-8 : 3, அரையிறுதி) போட்டிகளில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

அத்துடன் அவுஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட வரிசையில் டேவிட் வோர்னர், ஷேன் வோட்ஷன், அணித்தலைவர் மைக்கெல் கிளார்க், டேவிட் ஹசி, ஹமரூன் வைட், பிராட் கடின், மைக்கெல் ஹசி என 7 முன்னணி வீரர்களுடன் பலமாகவுள்ளது.

பந்துவீச்சில் நான்ஷ், ஜோன்ஷன், தைட், ஷேன்வோட்ஷன் ஆகியோர் வேகப்பந்துவீச்சிலும் சிமித் சுழல் பந்துவீச்சிலும் எதிரணிக்கு மிகவும் சவாலானவர்கள்.

இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வரிசையும் பலம் வாய்ந்தது. இதில் லூம்ப், கீஸ்வேட்டர், கெவின் பீற்றர்சன், அணித்தலைவர் கொலின்வூட், மோர்கன், ரைட் ஆகிய ஆறுபேறும் இத் தொடரில் பிரகாசித்துள்ளனர்.

பந்துவீச்சில் பிரோட், சைட் பொத்தம், பிரோஸ்மன், சுவான், யார்டி கூட்டணி இங்கிலாந்து அணிக்கு பலம் சேர்க்கும்.

சம பலம் வாய்ந்த இரு அணிகளும் மோதுவதால் இன்றைய இறுதிப்போட்டி இரசிகர்களுக்கு விருந்தளிக்கும்.

இப் போட்டி இலங்கை நேரப்படி இரவு 9 மணிக்கு ஆரம்பமாகும்.

## சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஷேன் பொன்ட் விடைபெற்றார்

(வெலிங்டன்)

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து நியூசிலாந்து அணியின் வேகப்பந்துவீச்சாளர் ஷேன் பொண்ட் ஓய்வு பெற்றார்.

நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சில் அசத்தியவர் ஷேன் பொண்ட். கடந்த 2001 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் அரங்கில் காலடி வைத்த இவர் இதுவரை 18 டெஸ்ட் (87 விக்கெட்டுக்கள்), 82 ஒருநாள் போட்டி (147 விக்கெட்டுக்கள்), 20 சர்வதேச இருபது-20 (25 விக்கெட்டுக்கள்) போட்டிகளில் விளையாடியுள்ளார்.

**ஐ.சி.எல்., - ஐ.பி.எல்.**

கடந்த 2008இல் இவர் இந்தியன் கிரிக்கெட் லீக் (ஐ.சி.எல்.) அமைப்பில் (டில்லி ஜெயன்ட்ஸ் அணி) விளையாடியதால், நியூசிலாந்து அணியிலிருந்து நீக்கப்பட்டார்.


பின்னர் அதிலிருந்து விலகியதால் கடந்த 2009ஆம் ஆண்டு மீண்டும் தேசிய அணியில் இடம் பிடித்தார்.

தவிர இவர் சமீபத்தில் நடந்த 3ஆவது இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) தொடரில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி சார்பில் விளையாடினார்.

**காயம் பின்னடைவு**

கடந்த ஆண்டு பாகிஸ்தான் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடிய இவருக்கு அடிவயிற்று பகுதியில் காயம் ஏற்பட்டது.

இதனால் இத் தொடரிலிருந்து பாதியில் விலகினார். பின்னர் காயம்காரணமாக டெஸ்ட் போட்டிகளில் இருந்து முறைப்படி தனது ஓய்வை அறிவித்தார்.



இருப்பினும் ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளில் விளையாடப்போவதாகக் கூறினார். சமீபத்தில் நடந்த ஐ.பி.எல். மற்றும் 3ஆவது இருபது-20 உலக கோப்பை தொடரில் பங்கேற்ற இவருக்கு, காயம் பாதிப்பை ஏற்படுத்தியது.

இதனால் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து நேற்று முன்தினம் முறைப்படி தனது ஓய்வை அறிவித்தார்.

இது குறித்து பொண்ட் கூறுகையில்,

காயம் காரணமாக தொடர்ந்து போட்டியில் பங்கேற்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சர்வதேச போட்டிகளில் இருந்து எனது ஓய்வை அறிவிக்கிறேன். நியூசிலாந்து அணிக்காக விளையாடியதை மிகப்பெரும் கௌரவமாக கருதுகிறேன் என்றார்.

## உலகக் கிண்ண கால்பந்தாட்டம்; பிரேசில் அணியில் ரொனால்டினோ நீக்கம்



(சாபாலோ)

தென்னாபிரிக்காவில் நடக்கவுள்ள உலகக் கோப்பை கால்பந்தாட்டத் தொடரில் பிரேசிலின் நட்சத்திர வீரர் ரொனால்டினோ பங்கேற்பது சந்தேகத்துக்கு இடமாக உள்ளது.

முதற்கட்டமாக அறிவிக்கப்பட்டுள்ள 23 பேர் கொண்ட உத்தேச வீரர்கள் பட்டியலில் அவரது பெயர் இடம் பெறவில்லை.

தென்னாபிரிக்காவில் எதிர்வரும் ஜூன் 11 ஆம் திகதி முதல் ஜூலை 11 ஆம் திகதி வரை 19ஆவது உலகக்கோப்பை கால்பந்தாட்டத் தொடர் நடக்கவுள்ளது.

இத் தொடரில் பிரேசில், இத்தாலி, இங்கிலாந்து உள்ளிட்ட 32 அணிகள் பங்கேற்க உள்ளன. ஒவ்வொரு அணிகளும் 30 பேர் கொண்ட உத்தேச வீரர்கள் பட்டியலை அறிவிக்க ஆரம்பித்துள்ளது. எதிர்வரும் ஜூன் 1ஆம் திகதி வீரர்களின் பட்டியல் இறுதி செய்யப்படும்.

இந் நிலையில் பிரேசில் அணியின் பயிற்சியாளர் துங்கா முதற்கட்டமாக 23 பேர் கொண்ட உத்தேச வீரர்களின் பட்டியலை நேற்று முன்தினம் அறிவித்தார்.

இதில் நட்சத்திர வீரர்களான ரொனால்டோ, ரொனால்டினோ, அட்ரியானோ, நெய்மர் ஆகியோரது பெயர்கள் இடம்பெறவில்லை. சமீபகால செயல்பாடுகள் மற்றும் காயம் காரணமாக இவர்களது பெயர்கள் சேர்க்கப்பட வில்லை எனத் தெரிகிறது.

இருப்பினும் அடுத்த வாரம் அறிவிக்கப்படவுள்ள மீதமுள்ள 7 உத்தேச வீரர்கள் பட்டியலில் இவர்களது பெயர்கள் இடம் பெற வாய்ப்புள்ளதாக துங்கா தெரிவித்துள்ளார்.

## துன்னாலையில் குடும்பஸ்தர் ஒருவர் அடி காயங்களுடன் சடலமாக மீட்பு

(கரவெட்டி)

வடமராட்சி துன்னாலையில் உறவினரின் மரணச்சடங்குக்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் அடிகாயங்களுடன் நேற்றுப் பிற்பகல் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் துன்னாலை மேற்கைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான நல்லையா பாஸ்கரன் (வயது 44) என்ற குடும்பஸ்தரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

துன்னாலை வேம்படிப்பகுதியில் நடைபெற்ற உறவினரின் மரணச்சடங்குக்கு சென்ற பிரஸ்தாபக் குடும்பஸ்தர் நேற்று பிற்பகல் துன்னாலை மயானத்திற்கு அண்மையில் பலத்த அடிகாயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நெல்லியடிப்பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-9,24)

## வன்னி இறுதியுத்தத்தில்...

கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன்னர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டதையடுத்து ஏற்பட்ட உயிர் அச்சுறுத்தல் காரணமாக லங்கா ஈ நியூஸ் நிறுவனத்தின் ஆசிரியர் சந்த றுவான் சேனாதீர வெளிநாடு ஒன்றில் தஞ்சம் கோரியிருந்தார்.

தனது சக ஊடகவியலாளர் கடத்தப்பட்டது குறித்து அவர் எழுதியுள்ள கட்டுரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வன்னிப் போரின் போது நடைபெற்ற சம்பவங்கள் குறித்து செய்திகளை பெற்றுக்கொள்வதற்காக அப்பொழுது வவுனியாவில் கடமையிலிருந்த படைத்தரப்பின் மேஜர் ஒரு வரை நான் பிரகீத்திற்கு அறிமுகப்படுத்தி வைத்தேன். அந்த மேஜரின் ஊடாக வன்னிப் போர் குறித்த பல தகவல்களை பெற்று பிரகீத் தமது ஊடகத்துக்கு செய்திகளை வழங்கி வந்தார்.

இவ்வாறு பணிபுரிந்து கொண்டிருந்த பிரகீத் ஒரு நாள் இனந்தெரியாதோரால் திடீரென கடத்திச்செல்லப்பட்டார். இச் சம்பவத் தின் பின்னணி குறித்து ஆராய்ந்த போது பிரகீத்துக்கு நான் அறிமுகப்படுத்திய வவுனியாவில் கடமையில் ஈடுபட்டிருந்த மேஜர் தொடர்பாக படைத்தரப்பினர் திர் விசாரணை ஒன்றை மேற்கொண்ட போது அவரின் கைத் தொலைபேசியில் பிரகீத்தின் தொலைபேசி இலக்கம் இருக்கக் காணப்பட்டு அதன் அடிப்படையில் பிரகீத் கடத்தப்பட்டமை தெரியவந்தது.

படைத்தரப்பும் தமிழீழ விடுதலைப்புலி களும் போர் முனையில் பயன்படுத்தும் ஆயுதங்கள் என்ற தலைப்பில் பிரகீத் கடத்தப்பட்டதற்கு முன்னர் ஒரு கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். இதன் காரணமாக படைத்தரப்பினர்களால் இவர் முதல் முறை கடத்தப் பட்டார். இவ்வாறு கடத்தப்பட்ட பிரகீத் குறிப்பிட்ட படைத்தரப்பு மேஜர் வழங்கிய தகவல்கள் எதையும் வெளியிடக் கூடாது என எச்சரிக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார்.

இக் கடத்தல் சம்பவம் குறித்து நான் பிரகீத்திடம் கேட்டபோது படையினர் போரின் போது இரசாயன ஆயுதங்களை பயன்படுத்துவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக என்னிடம் தெரிவித்தார்.

அத்துடன் ஆயுத களஞ்சியத்துக்கு அடிக்கடி வரும் சிலர் இரசாயன பொருட்களை குண்டுகளினுள் பொருத்தும் பணியை மேற்கொண்டு வருவதாக வவுனியா ஆயுதக் களஞ்சியம் ஒன்றுக்கு பொறுப்பாக இருந்த மேற் குறிப்பிட்ட மேஜர் தன்னிடம் கூறியதாக வும் பிரகீத் தெரிவித்தார். இவ்வாறு ஆயுதங்களில் இரசாயனப்பொருள்கள் சேர்க்கப்படுவது களமுனையில் நிற்கும் படையினருக்குத் தெரியாதென்றும் பிரகீத் என்னிடம் கூறியிருந்தார்.

மேற்குறிப்பிட்ட மேஜரிற்கு ஊடாக இத் தகவல்கள் வெளியே கசிந்துவிட்டதை தெரிந்து கொண்ட படையினர் தன்னைக் கடத்திச் மிரட் டியதாகவும் பிரகீத் என்னிடம் குறிப்பிட்டிருந்தார் என லங்கா ஈ நியூஸ் ஆசிரியர் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

## அரசியல் சாசனத்...

அரசாங்கத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் ஆதரவு தேவை என்றால் தமிழ் மக்களின் சில தேவைகளை அரசாங்கம் பூர்த்தி செய்ய வேண்டும் எனக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

## ஜனாதிபதி மகிந்...

இதேவேளை நேற்று நடைபெற்ற வெளிவிவகார அமைச்சர்களுக்கான அமர்வில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கலந்து கொண்டார். (ந-5)

மாநகர சபை, யாழ்ப்பாணம்,



## குடாநாட்டில் குழப்பம் நீடிப்பு...

யாழ்.குடாநாட்டில் கடந்த வாரம் படையினரின் தொகை அதிகரிப்பட்டுள்ளதாக வெளியான தகவல்கள் குறித்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்.குடாநாட்டில் பொதுமக்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதால் பாதுகாப்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அண்மைக்காலத்தில் யாழ்.மாவட்டத்தில் நடந்த கடத்தல் முயற்சிகளில் பல தனிப்பட்ட பழிவாங்கல் நடவடிக்கைகளும் காதலர்களின் சட்டவிரோத திருமண முயற்சிகளுமேயாகும். எனினும் இவற்றை யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ளூர்ப் பத்திரிகைகள் சில கடத்தல் சம்பவங்கள் என்றே செய்திகளைப் பிரசுரிப்பதனால் மக்கள் அச்சமடைகின்றனர்.

எனினும் குடாநாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டு சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்கப் படையினர் பொலிஸாருக்கு ஒத்துழைப்புக்களை வழங்குகின்றனர் என யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க மேலும் தெரிவித்தார். (ந-5)




## யாழ்.மாவட்ட...

பொலிஸ் பதவிக்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் மருத்துவ சோதனைகளில் பங்குபற்றித் தெரிவு செய்யப்பட்டவர்களில் 400 பேருக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் 18 ஆம் திகதி யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் பொலிஸ் பயிற்சிக் கல்லூரிப் பணிப்பாளர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நியமனக் கடிதங்களை உரியவர்களுக்கு வழங்கி வைப்பார் என வடக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். (ந-5)

## உலகில்...

அமைத்துக் கொடுப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று அநுராதபுரத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இராணுவத் தளபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். அனைத்து இராணுவத்தினரின் பங்களிப்பினாலும் நாட்டில் நிலவிய பயங்கரவாதத்தை முற்றாக அழிக்க முடிந்தது.

தாய் நாட்டுக்காகத் தமது உடற்பாகங்களை இழந்த இராணுவ வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் முகமாக இத் திட்டத்தினை முன்னெடுத்து வருகின்றோம் என அவர் மேலும் கூறினார்.

பிரேவ் ஹார்ட் திட்டத்தின் மூலம் அநுராதபுரத்திலுள்ள அங்கவீனமுற்ற 200 இராணுவ வீரர்களுக்கு இந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. (ந-5)

## ஆளுநர்...

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்த சர்வதேச நாணய நிதியக் குழுவினரும் இலங்கை மத்திய வங்கிப் பிரதிநிதிகளும் யாழ். குடாநாட்டு நிலைமைகளை ஆராய்ந்தனர்.

இக் குழுவினர், வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.அரச அதிபர் க.கணேஷ் ஆகியோரை நேற்று மாலை யாழ்.மாவட்டச் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.

இதன்போது யாழ்.மாவட்டத்தின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் யாழ்.அரச அதிபர் க.கணேஷ், சர்வதேச நாணய நிதியக் குழுவினருக்கு எடுத்துரைத்தார்.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் இடம்பெறும் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுக்கான நிதித் தேவைகள் தொடர்பான முன்மொழிவுகளை வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியும் யாழ்.அரச அதிபர் க.கணேஷும் இணைந்து சர்வதேச நாணயக் குழுவிடம் கையளித்தனர். (ந-5)

புதியபிரிவுகள் ஆரம்பம்

Advanced Dip. in Video mixing (Morph, Cool3d, Project, Premiere, Soundfroge, Combustion, Power director, Vcd and convertor, Editing using Photoshop)
Auto CAD
ICT(O/L) (தரம் 10 & 11)
ICT(A/L) (தரம் 12 & 13)
GIT(A/L) (தரம் 12 & 13)
Ms Office2007 & DTP
Internet & Email
BIT, AAT, ACBF
Accounting Package
Computer Hardware
Programming Languages
Kids Programme (தரம் 01 → 09வரை)
Group Classes

CHARLES BABBAGE COMPUTER ACADEMY CBCA SRILANKA

முழுமையான கணணிக் கல்விக்கு இன்றே எம்முடன் இணையுங்கள்...

CB Computer Academy Station Road Kondavil. T.P: 021-3217903

(1502)




## Sales Executives (ES02/ 10270-3)

Our Client is a leading multinational organization, engaged in providing steel building solutions. They are looking for exceptional, energetic, committed, competent and confident individuals with good communication and interpersonal skills to join their team.

The ideal candidate should:

- Possess a sound educational background; part qualification in CIM / SLIM will be advantageous.
- Possess a minimum of 2 years similar experience with a proven track record;
- Ideally be below 30 years of age;
- Residing in Jaffna.

Remuneration package will be competitive with the best in the market commensurate with experience.

Applications together with detailed Curricula Vitae and Telephone/ Email contact details of two non-related referees, quoting the relevant Reference No. and Vacancy on both cover letter and envelope, or subject of the email, should be forwarded to reach the address below within seven working days:

**KPMG Executive Search (Private) Limited,**
**32A, Sir Mohamed Macan Markar Mawatha, Colombo 3**
**E-mail: esearch@kpmg.com**

website: www.lk.kpmg.com/html/esearch.html

For further enquiries you may contact KPMG Jaffna branch
Mr. M Mayuran
Manager
656, point pedro road,
Nallur, Jaffna
Tel +94 21 222 7050

(சி-271)

All applications will be treated with the strictest confidentiality. We will correspond only with applicants short-listed for interviews.

**KPMG Executive Search (Private) Limited**

© 2010 KPMG Executive Search (Private) Limited is a subsidiary of a sublicensee of KPMG Ford, Rhodes, Thornton & Co., a Sri Lankan Partnership and a member firm of the KPMG network of independent member firms affiliated with KPMG International Cooperative ("KPMG International"), a Swiss entity. All rights reserved




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில்16.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.